

# மலையக சமூகம்

## ஒரு சமகால நோக்கு

எம். வாமதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக சமூகம்: ஒரு சமகால நோக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக சமூகம்

## ஒரு சமகால நோக்கு

எம்.வாமதேவன்

பதிப்பாசிரியர்

**பொன். இராமதாஸ்**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்

2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைப்பு : மலையக சமூகம் : ஒரு சமகால நோக்கு

ஆசிரியர் : எம். வாமதேவன் ©

பதிப்பாசிரியர் : பொன். இராமதாஸ்

பதிப்பு : 2023

வெளியீடு : எம். வாமதேவன்
BQ 2/2, மெனிங் டவுண், மங்கலா வீதி,
கொழும்பு - 08

அச்சு : குமரன் அச்சகம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6,
தொ.பே. 0112 364550

ISBN 978-624-93210-0-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இருநூறு வருடங்களாக

லயங்களில் வாழ்ந்து

உரிமையுடன் கூடிய

தனி வீடுகளுக்காகப் போராடும்

தோட்டத் தொழிலாளர்களுக்காக....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

'மலைய சமூகம் : ஒரு சமகால நோக்கு' எனும் இந்நூலின் எழுத்தாளர் இலங்கையிலும் இந்தியாவின் தமிழ்நாட்டிலும் நன்கு அறியப்பட்டவர். அதேபோன்று இலங்கையின் நிருவாக சேவையில் உயர் பதவிகளில் ஒன்றாகிய அமைச்சு செயலாளர் பதவியை அலங்கரித்தவர். மேலும், தான் சார்ந்த மலையகச் சமூகத்தில் ஆரம்பகாலம் தொடக்கம் இன்று வரை இடம்பெறுகின்ற சகல நிகழ்வுகளையும் ஒரு சமூக ஈடுபாட்டுடன் நோக்குபவர். நூலாசிரியர் திரு எம்.வாமதேவன் அவர்களின் இத்தகைய சமூகப் பின்புலம் மற்றும் சமூக ஈடுபாடு அவரை மலையகச் சமூகத்தில் இடம்பெறும் நிகழ்வுகளை ஒரு வரலாற்று மற்றும் விமர்சன நோக்கில் நோக்கத் தூண்டியது. இத்தகைய விமர்சன நோக்கினை அவர் அவ்வப்போது நூல்களுக்கான அணிந்துரைகளாகவும் பத்திரிகைகளில் கட்டுரைகளாகவும் எழுதி எழுத்துருவாக ஆவணப்படுத்தியுள்ளமை முக்கியமானது. இன்றைய விரைவுமிக்க காலகட்டத்தில் அனைவராலும் இவ் ஆக்கங்களை தேடிப் பெற்றுக் கொள்வது கடினமானது. இதனால் அவர் அவ்வப்போது எழுதிய கட்டுரைகளை தொகுத்து இந்நூல் உருவாக்கம் பெற்றுள்ளது.

இந்நூலில் பதினொரு கட்டுரைகள் சமூகம், பொருளாதாரம், வரலாறு எனும் மூன்று தலைப்புகளின் கீழ் தொகுத்து முன்வைக்கப் பட்டுள்ளன. ஆரம்ப காலங்களில் தென்னிந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து இலங்கையின் தோட்டங்களில் குடியேறியமை, பின்னர் இலங்கையில் அவர்கள் கால் பதித்துக் கொண்டமை, மீண்டும் தாயகம் (இந்தியா) நோக்கி சென்றமை, ஆரம்பம் முதல் இன்று வரை அவர்கள் எதிர்நோக்கிய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியுரிமை மற்றும் நிலவுரிமைக்கான போராட்டங்கள் என்பவற்றை விபரிப்பனவாக இக்கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. அத்துடன் நூலாசிரியர் நீண்டகாலம் பொருளாதார மற்றும் திட்டமிடல் துறை சார்ந்த அனுபவங்களை கொண்டவர் எனும் அனுபவத்தின் அடிப்படையில் மலையக சமூகத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கான ஆக்கப்பூர்வமானதும் நடைமுறைச் சாத்தியமானதுமான ஆலோசனைகளையும் முன்வைத்துள்ளார்.

வாசகர்கள் இந்நூலிலுள்ள கட்டுரைகளை வாசிக்கும் போது கூறியது கூறல் இடம்பெற்றுள்ளதை உணரலாம். ஆனால், இது கட்டுரைகள் எழுதப்பட்ட சந்தர்ப்பம் மற்றும் சூழ்நிலைகளுக்கு அமைவான பின்னணி அறிமுகத்தினை வழங்குவதால் ஏற்படுவது. எனினும், கட்டுரைகளின் தலைப்புகளுக்கு அமைவாக ஒவ்வொரு கட்டுரைகளும் புதியதொரு கருத்தாடலை கொண்டுள்ளது. எனவே, இந்நூல் குறிப்பாக மலையகச் சமூகத்தின் வரலாறு, தற்காலம் மற்றும் எதிர்காலம் தொடர்பாக கற்க விரும்பவர்களுக்கு ஒரு துணையாக அமையும்.

**பொன்.இராமதாஸ்**
பதிப்பாசிரியர்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்விப்பீடம்
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

பள்ளிக்காலம் தொடங்கி, உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பல்கலைக்கழக கல்வி, அரசாங்க சேவையில் பல உயர் பதவிகள் என்று கடும் உழைப்புடனான நீண்ட பயணத்துக்கு பிறகு ஓய்வில் இருக்கின்ற இன்றைய நாட்கள் வரை பல தசாப்தங்களாக எழுத்துத் துறையில் முற்றிலும் சமூகப் பிரக்ஞையுடன் ஈடுபட்டு வருபவர் அன்பு நண்பர் எம். வாமதேவன் அவர்கள்.

அவர் ஏற்கெனவே பல நூல்களை வெளிக்கொணர்ந்திருக்கிறார். பத்திரிகை ஆசிரியராக இருந்தவன் என்ற வகையில் அவர் மலையக தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து தொடர்ச்சியாக எழுதிய பெரு வாரியான கட்டுரைகளை வாசிக்கும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

தனது சமூகத்தின் நலன்களில் அவர் கொண்டிருக்கும் தளராத பற்றுறுதியை அதன் மூலம் என்னால் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது மாத்திமல்ல, அரசாங்க சேவையில் மிகவும் உயர்ந்த அந்தஸ்துள்ள பதவிகளில் இருந்த ஏனைய சமூகத்தைச் சேர்த்தவர்களில் எத்தனை பேர் இவரைப் போன்று தங்கள் சமூகத்தின் மேம்பாட்டில் கருத்தூன்றிய அக்கறை கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டிருப்பார்கள் என்ற கேள்வியும் என் மனதில் எழுந்தது.

'மலையக சமூகம் : ஒரு சமகால நோக்கு' என்ற இந்த நூலுக்கான முகவுரைரை எழுதும்போது சில வருடங்களுக்கு முன்னர் வெளியான 'மலையகம் : சமத்துவ அபிவிருத்தியை நோக்கி' என்ற நூலுக்கான முன்னுரையில் வாமதேவனின் எழுத்துக்களுக்கு இருக்கும் தகுதி குறித்து எமது பெருமதிப்புக்குரிய இலக்கியமேதை காலஞ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற தெளிவத்தை ஜோசப் அவர்கள் தெரிவித்த கருத்தை நினைவு படுத்தாமல் என்னால் கடந்துசெல்ல முடியவில்லை.

'எழுதவேண்டும் என்பதற்காகவோ நூல்களை வெளிக் கொண்டு வரவேண்டும் என்ற ஆசையிலோ எழுதுபவர் அல்ல வாமதேவன். சமூக அந்தஸ்து மிக்க உயர் அரசாங்க பதவிகளில் இருப்பவர்கள் மேலதிக கௌரவத்துக்காக தங்களுக்கும் எழுதத் தெரியும் என்று எதையாவது எழுதி நூல் வெளியிட்டு உறவினர்கள், சக உத்தியோகத்தர்கள் மற்றும் நண்பர்களுடன் கொண்டாடி பரவசமடைவதையும் நாம் கண்டிருக்கிறோம். நூல்களை வெளியிடவேண்டும் என்பதற்காக கட்டுரைகளை வலிந்து எழுதுகிறவர்களும் இருக்கிறார்கள். இது போன்ற அசம்பாவிதங்களுக்கு அப்பாற்பட்ட மகத்தான விதிவிலக்காக அமைபவையே வாமதேவனின் எழுத்துக்கள்' என்று தெளிவத்தையார் குறிப்பிட்டிருந்தார்.

மலையக தமிழர்களின் வரலாற்றையும் இடர்மிகு வாழ்க்கை மற்றும் பிரச்சினைகளையும் தெளிவாக விளக்கும் வாமதேவனின் எழுத்துக்கள் அந்த சமூகத்தை குறிப்பாக பெருந்தோட்டத் தொழிலா ளர்களை அவல வாழ்வில் இருந்து விடுவித்து விமோசனத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு தன்னாலியன்ற பங்களிப்பைச் செய்வதை தனது வாழ்வின் இலட்சியமாக அவர் வரித்துக் கொண்டிருப்பதை பிரகாசமாக வெளிக் காட்டிவந்திருக்கின்றன.

பதினொரு கட்டுரைகள் அடங்கிய தொகுப்பாக இந்த நூல் வெளி வந்திருக்கிறது. இவை அவர் கடந்த வருடத்திலும் இந்த வருடத்திலும் பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் எழுதியவையாகும்.

இந்திய தமிழர்கள் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளினால் தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்து வரப்பட்டு இரு நூறு வருடங்கள் *(1823-2023)* நிறைவடைந்த நிலையில் 'மலையகம் 200' தொனிப்பொருளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக் கப்பட்டுவருகின்ற இன்றைய காலப்பகுதியில் வாமதேவன் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலை வெளியிடுவது அதற்கு பிரத்தியேகமான ஒரு வரலாற்று பின்புல முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது.

இதில் உள்ள கட்டுரைகள் மூலமாக மலையக தமிழர்களின் வரலாறு மற்றும் அவர்கள் காலங்காலமாக அனுபவித்த அவலங்கள் தொடக்கம் இன்று தனித்துவ அடையாளத்தைக் கொண்ட ஒரு இனத்துவ சமூகமாக அங்கீகாரத்தைக் கோருகின்ற நிலையில் அவர்களின் எதிர்பார்ப்புகள் வரை பல்வேறு விவகாரங்களில் தனது நோக்கை வாமதேவன் தெளிவாக முன்வைத்திருக்கிறார்.

திட்டமிடல் துறையில் வாமதேவனுக்கு இருக்கும் வளமான அனுபவத்தின் தாக்கத்தை மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகளைக் காண்பதற்கு அவர் முன்வைத்துவரும் முன்மொழிவுகளில் காணக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையில் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு பயனுறுதியுடைய தீர்வுகள் காணப்படவேண்டும் என்பதில் மாத்திரமல்ல கடந்த காலத்தில் இந்திய, இலங்கை அரசாங்கங்கள் செய்து கொண்ட மனிதாபிமானமற்ற உடன்படிக்கைகளின் விளைவாக தாயகம் திரும்பிய மலையக மக்கள் அங்கு முகங்கொடுக்கும் பிரச்சினைகளிலும் அக்கறை கொண்டவராக வாமதேவனை காண்கிறோம்.

இரு நூற்றாண்டு காலப்பகுதியில் ஏறக்குறைய 180 ஆண்டுகள் அல்லது 90 சதவீதமான காலப்பகுதியில் தமது அரசியல் இருப்பு நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே மலையக தமிழர் சமூகம் போராடிவந்திருக்கிறது என்றும் அதன் காரணமாக நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைகளின் பலன்களை அவர்களால் அனுபவிக்க முடியாமல் போய்விட்டது என்று கூறும் வாமதேவன் அதிகாரப் பரவலாக்கலில் இந்த சமூகத்தின் அரசியல் அடையாளம் அங்கீகரிக்கப்படுவதும் பொருளாதார ரீதியாக தோட்ட உற்பத்தி முறையில் இருந்து விடுபடுவதும் அவற்றின் ஊடாக அனைத்து உரிமைகளையும் முழுமையாக அனுபவிப்பதுமே ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகங்களோடு சமத்துவ நிலையை எட்டுவதற்கான வழியாகும் என்ற தனது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைக்கிறார்.

மத்திய மாகாணங்களில் மலையக மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை உள்ளடக்கிய நிலத்தொடர்ச்சியற்ற சமூக சபையை அவர்களுக்கான அதிகாரப்பரவலாக்கல் அலகாக மலையக தமிழ்க் கட்சிகள் இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கும் சர்வதேச சமூகத் துக்கும் முன்வைத்த ஆவணங்களில் அடையாளம் காட்டியிருந்தன.

அந்த சமூக சபை யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுமானால் மலையக மக்கள் அரசியல் ரீதியாக வலுப்படுத்தப் படுவதோடு தேசிய நீரோட்டத்தில் இணையும் செயற்போக்கையும் துரிதப்படுத்தமுடியும் என்பது அவரின் நம்பிக்கையாக இருக்கிறது.

மலையக தமிழ் சமூகத்தை தனியான ஒரு தேசிய இனமாக அங்கீ கரிக்க வேண்டும்; அவர்களை இந்திய தமிழர்கள் என்று அழைப்பதை விடுத்து மலையகத் தமிழர்கள் என்று அடையாளப் படுத்தவேண்டும் என்ற கோரிக்கைகள் இன்றைய இளந்தலைமுறையினர் மத்தியில் வலுவடைந்து வருகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வாக அதிகாரப்பரவ லாக்கச் செயன்முறைகள் முன்னெடுக்கப்படும் போது மலையக தமிழர்களும் அதன் மூலம் தங்களது இனத்துவ அடையாளத்தை பிரதிபலிக்கக்கூடியதாக அதிகாரப்பரவலாக்கல் அலகொன்றுக்கு உரித்துடையவர்கள் என அவர்கள் நம்புகிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் மலையக மக்களுக்கு சுவிட்சர்லாந்தில் உள்ள கன்ரோன் முறை போன்று அதிகாரப்பரவலாக்கல் அலகொன்றை வழங்கலாம் என்று 85 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியில் சிவில் சேவை அதிகாரியாக பணியாற்றிய ஆங்கிலேயர் ஒருவர் முன்வைத்த யோசனையை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாந்தோட்டையில் பல வருடங்களாக உதவி அரசாங்க அதிபராக பணியாற்றிய லெனார்ட் வூல்வ் என்ற அந்த அதிகாரி 1938ஆம் ஆண்டு அன்றைய இங்கிலாந்து அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்த மகஜர் ஒன்றில் சுவிஸ் பாணியில் கரையோர சிங்கள மாகாணம், கண்டிய சிங்கள மாகாணம், தமிழ் வடக்கு மாகாணம், தமிழ் கிழக்கு மாகாணம் என்று குறைந்தது நான்கு கன்ரோன்களை உருவாக்கமுடியும் என்றும் தேயிலை பெருந்தோட்டங்களில் பெரும் பான்மையானவர்களாக விளங்கும் இந்திய வம்சாவளி தமிழர்கள் வாழும் பகுதிகளை உள்ளடக்கி ஐந்தாவது கன்ரோன் ஒன்றையும் கூட உருவாக்க முடியும் என்று யோசனை முன்வைத்தார்.

நாம் அறிந்தவரையில் தேயிலை பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் இந்திய வம்சாவளி தமிழர்களின் நலன்களைப் பாதுகாப் பதற்கான வழிமுறையாக அவர்களுக்கென்று தனியான கன்ரோனை சிபாரிசு செய்த ஒரே நபர் லெனார்ட் வூல்வ்வாகத்தான் இருக்கமுடியும்.

அதனால் மலையக மக்கள் தனித்துவமான அடையாளத்தைக் கொண்டவர்கள் என்றும் அவர்களுக்கென்று தனியான அதிகாரப் பரவலாக்கல் அலகொன்றை உருவாக்கலாம் என்றும் இன்று நேற்று அல்ல கடந்த நூற்றாண்டின் முற்பகுதியிலேயே அதுவும் ஒரு வெள்ளைக்காரர் மனதில் சிந்தனை கிளம்பியது என்றால் அவர்கள் இலங்கையில் தனித்துவமான சமூகத்தினர் என்பது எப்போதோ அடையாளம் காணப்பட்ட ஒன்று என்பது அதன் பொருளாகும்.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் அதுவும் இனநெருக் கடி காரணமாக மூண்ட மூன்று தசாப்த கால உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்து பதினைந்து வருடங்கள் கடந்த நிலையில் தனித்துவ அடையாளத்துக்கும் அரசியல் அந்தஸ்துக்குமான மலையக மக்களின் கோரிக்கையை முன்னெடுப்பதில் நிதானமும் விவேகமும் கொண்ட அணுகுமுறை அவசியம். அவர்களது அபிலாசைகளும் எதிர்பார்ப்பு களும் நிறைவேறுவதற்கு ஏனைய சமூகங்கள் மத்தியில் உள்ள நியாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தைகொண்ட அரசியல் சக்திகளினதும் சிவில் சமூகத்தினதும் உறுதியான ஆதரவு தேவை.

தனது நூலில் வாமதேவன் முன்வைத்திருக்கும் கருத்துக்கள் மலையக தமிழ் சமூகத்தின் எதிர்கால அரசியல் பாதை குறித்து பயனுறுதியுடைய விவாதத்துக்கு வழிவகுக்கவேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பு.

அவர் தொடர்ந்தும் மலையக தமிழர்களின் நலன்களுக்காக தன்னை அர்ப்பணித்து செயற்படுவார். அவரது ஆக்கங்களை வெளியிட்டு மலையக சமூகத்தின் விமோசனத்தை நோக்கிய பயணத்தில் தமிழ் பத்திரிகைகள் அவற்றின் பங்களிப்பை தொடர்ந்து வழங்கவேண்டும் என்பது ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் எனது வேண்டுகோளாகும்.

நவம்பர், 2023

**வீரகத்தி தனபாலசிங்கம்**
முன்னாள் பிரதம ஆசிரியர்
கொழும்பு தினக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இந்த நூல் 2022-2023 காலப்பகுதியில் சஞ்சிகைகளுக்கும் பத்திரிகை களுக்கும், சில குறிப்பிட்ட பிரச்சினைகள் மற்றும் நூல்கள் குறித்த முகவுரை மற்றும் மதிப்பீட்டுரைகளை மையப்படுத்தி எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு ஆகும். 2023இல் 'மலையகம் 200' என்ற தொனிப் பொருள் இன்று பல்வேறு மட்டங்களில் பேசுபொருளாகி, நடைபவனி, கூட்டங்கள், சஞ்சிகைகள், நூல் வெளியீடுகள் என்பன இந்த இருநூறு வருடங்களில் தென்னிந்தியாவிலிருந்து தோட் டங்களுக்கு தொழிலாளர்களாக வந்து இன்று மலையக மக்கள் என்ற அடைக்குள் பரிணமித்துள்ள இலங்கையின் எண்ணிக்கை அடிப்படையில் நான்காவது இடத்திலே கணிக்கப்படுகின்ற இனக்குழு எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்துள்ளன. இந்த நிகழ்ச்சிப் போக்கின் ஒரு அங்கமே இந்த நூலுமாகும்.

இந்தக் கட்டுரைகள் தேவை கருதி எழுதப்பட்டவையாகும். அவற்றில் இரண்டைத் தவிர, ஏனைய ஒன்பது கட்டுரைகளும் சஞ்சி கைகள் மற்றும் பத்திரிகைகளில் வெளிவந்தவையாகும். தஞ்சை பல்கலைக்கழகத்தில், மலையக இலக்கிய ஆய்வு மாநாடு ஒன்று திட்டமிடப்பட்டிருந்தது. அதன் நிமித்தம் வெளியிடவிருந்த ஒரு மலருக்கு எழுதப்பட்ட கட்டுரை, தாயகம் திரும்பியோர் புனர்வாழ்வும் சவால்களும் என்பதாகும். Cathfab என்ற கிறிஸ்தவ நிறுவனம், மலையகம் 200ஐ ஒட்டி வெளியிடவிருந்த சஞ்சிகை ஒன்றிற்காக ஆங்கிலத்தில் எழுதப்பட்ட கட்டுரையின் தமிழாக்கமே சமூக மேம்பாட்டிற்கான திட்ட முயற்சிகள் பற்றியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இரண்டு கட்டுரைகளையும் தவிர, ஏனையவை ஏற்கனவே வெளிவந்தவைகளாகும். இவற்றில் நான்கு கட்டுரைகள் இவ்விரு ஆண்டுகளிலும் வெளிவந்த நூல்கள் பற்றியவையாகும். 2022இல் வெளிவந்த மு.சி.கந்தையாவின் 'சிதைக்கப்பட்ட மலையக சமூகம்' என்ற நூலின் இரண்டாம் பதிப்பிற்கு எழுதிய முகவுரையும், இந்த ஆண்டில் வெளிவரவிருக்கும் இரா.சடகோபனின் 'சூழ்ச்சிகளையும் வலிகளையும் கடந்த வரலாறு' என்ற நூலுக்கு எழுதிய முகவுரையாகும். ஏ.பி.கணபதிபிள்ளையின் *Glimpses of a Tea Bud* என்ற ஆங்கில நூலின் வெளியீட்டின்போது ஆற்றிய உரையை மையப்படுத்தி எழுதப்பட்டது. இது கனடாவின் தாய்வீடு வெளியிட்ட ''மலையக மாருதம்'' என்ற மலரில் வெளிவந்துள்ளது. ராஜன் ஹூல் மற்றும் கிருபைமலர் ஹூல் ஆகியோரது *Still Born Democracy* என்ற ஆங்கில நூலின் வெளியீட்டின் போது ஆற்றிய உரையை மையப்படுத்தி எழுதப்பட்ட கட்டுரை இந்த நூலின் சேர்க்கப்பட்டுள்ளது.

ஏனைய ஐந்தும், மூன்று சஞ்சிகைகளிலும், இரண்டு பத்திரிகைகளிலும் வெளிவந்தவை. மலையகத்தின் மூத்த ஆசிரியர் பிலிப் இராமையாவின் 90ஆவது வயதை கொண்டாடுமுகமாக வெளியிடப்பட்ட நூலில் 'மலையகம்-நேற்று, இன்று, நாளை' என்ற கட்டுரையும், ஹட்டன், ஹைலன்ஸ் கல்லூரி அதிபர் திரு. ஆர். ஸ்ரீதர் ஓய்வெய்தியதை ஒட்டி வெளியிடப்பட்ட மலரில் எழுதப்பட்ட கட்டுரை 'தோட்டப் பொருளாதார அமைப்பின் நிலவுரிமையின் தாக்கம்' என்ற கட்டுரையும், 2023இல் தமிழ்நாடு கோயம்புத்தூரில், மலையகம் 200 பன்னாட்டு கருத்தரங்கில் வெளியிடப்பட்ட சஞ்சிகையில் வெளிவந்தவை ஆகும். ஏனையவை முக்கியத்தும் கருதி வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளுக்கு எழுதப்பட்டவையாகும்.

சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகளின் காலம் குறைவானதாகவும், வாசகர்களை அடைந்து கொள்வதும் மட்டுப்படுத்தப்பட்டதாகவும் காணப்படுகின்றது. எனவே, இவற்றை தொகுத்து வெளியிட வேண்டிய தேவை உருவாகிறது. தனித்தனி கட்டுரைகளாக அன்றி, மொத்தமாக ஒரு தொகுப்பிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கின்ற பொழுது பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாய் முழு வடிவத்தையும் காணமுடிகின்றது. அந்தவகையில் இந்த கட்டுரைத் தொகுப்பில் பேசப்படும் விடயங்கள், மலையகத்தின் வரலாறு, பொருளாதாரம், சமூகம் சம்பந்தப்பட்டதாய், அதனூடாக அந்த மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைப்பதாய் அமைந்துள்ளன. ஒவ்வொன்றும் தனிப்பட்ட தலைப்புகளைக் கொண்டவையாக திகழ்ந்தாலும், இயல்பாகவே ஒன்றோடொன்று இணைந்தவையாகும். எனவே தவிர்க்க முடியாதவகையில், ஒரே விடயம், மீண்டும் மீண்டும் பல கட்டுரைகளில் பேசப்படுகின்ற குறை நிலவுகின்றது. அதனை வாசகர்கள் புரிந்து கொள்வர் என்ற நம்பிக்கை உண்டு.

எண்ணங்கள் எழுத்துருவாகி செயல்களுக்கு வழிசமைக்கின்றன. இவை ஆய்வு சார்ந்தவையாக அமைந்தாலும், செயற்பாட்டுத் தன்மை கொண்டன. பேசப்படும் பிரச்சினைகள், தீர்வு காணப்பட வேண்டியவை. அதற்கான கருத்தாடல்களை உருவாக்க கூடியவை. இந்தக் கட்டுரைத் தொகுப்பில் உள்ளடக்கிய விடயங்கள் செயற்பாட்டுத் தளத்தை சார்ந்தவை. சாதாரண வாசகர்களை இது போய் சேர வேண்டும் அவர்கள் மத்தியில், இந்த பிரச்சினைகளும் அது குறித்த தீர்வுகளும் பேசப்பட வேண்டும். அதனூடாக தீர்விற்கான வழிகள் பிறக்க வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

எனது இக்கட்டுரைகளை மீள வாசித்து செம்மைப்படுத்தி தொகுத்த திறந்த பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பொன்.இராமதாஸ் அவர்களுக்கு எனது நன்றிகள்! இந்தக் கட்டுரைகளை வாசித்து எனது வேண்டுகோளை ஏற்று, இந்நூலுக்கு உரிய ஓர் முகவுரையை வழங்கிய எனது நீண்ட நாள் நண்பர் மூத்த ஊடகவியலாளர் வீ.தனபாலசிங்கம் அவர்களுக்கு எனது இதயம் கனிந்த நன்றிகள். கட்டுரைகளின் தலைப்புகளுக்கு உரிய படங்களை, புகைப்படமெடுத்துதவிய செல்வி ரா.நர்மதாவிற்கும், கட்டுரைகளை கணிணிமயப்படுத்தி நகல் வடிவில் கொண்டு வருவதற்கு அயராது உழைத்த திருமதி அக்னஸ் ஜெயந்தன் அவர்களுக்கும், சிறந்த முறையில் எனது பல முயற்சிகளை பதிப்பு செய்து வரும் குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சகத்தின் உரிமையாளரும் நண்பருமான குமரன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும். என்றென்றும் எப்போதும் போல எனது எழுத்து முயற்சிகளுக்கு பொறுமை காத்து ஊக்கப்படுத்தும் எனது துணைவியார் யோகேஸ்வரிக்கும், என்னோடு இங்கு வாழாவிட் டாலும் எல்லா வித ஒத்துழைப்புகளையும் வழங்கி வருகின்ற எனது மகன்மார்களான பார்த்திபன், முகிலன், வசந்தன் ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

எம்.வாமதேவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


*பதிப்புரை* vii

*முகவுரை* ix

*முன்னுரை* xv

**சமூகம்**

1. மலையக மக்களின் எதிர்பார்ப்புகள் *3*

2. மலையகத் தமிழர்களின் சமூக மேம்பாட்டிற்கான திட்ட முயற்சிகளும் பொருத்தமான நடைமுறைப்படுத்தல் பொறிமுறையின் தேவையும் *13*

3. தமிழ் நாட்டில் இலங்கையின் தாயகம் திரும்பியோர் புனர்வாழ்வும் சவால்களும்: ஒரு மீள் பார்வை *20*

**பொருளாதாரம்**

4. தோட்டத்துறையின் உருவாக்கமும் இந்தியத் தமிழரும் *39*

5. மலையக மக்களின் நிலவுரிமையில் தோட்ட பொருளாதார அமைப்பின் தாக்கம் *55*

6. தோட்ட தொழிலாளர்கள் சிற்றுடைமையாளர்களாக..... *70*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வரலாறு**

7. மு.சி. கந்தையாவின் 'சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்' 81

8. இரா.சடகோபனின் வலி சுமந்த வரலாறு 88

9. ஏ.பி. கணபதிபிள்ளை நூலை ஒட்டிய மலையகப் போராட்டங்கள் குறித்த ஒரு பார்வை 94

10. மலையகம் - நேற்று, இன்று, நாளை : ஒரு வரலாற்று அரசியல் சமூக நோக்கு.. 104

11. ராஜன் ஹூல் மற்றும் கிருமைமலரின் இறந்து பிறந்த ஜனநாயகம் 117

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வீரகேசரி

1

# மலையக மக்களின் எதிர்பார்ப்புகள்

மலையக மக்கள் இலங்கையின் சனத்தொகையில் 4.4%மாக இருப்பதோடு ஏனைய பிற சமூகங்களான சிங்களவர், இலங்கை தமிழர், முஸ்லிம்களைப் போல தனித்துவ அடையாளம் மிக்கவர் களாகவும் உள்ளனர். மொழி மற்றும் கலாசார ரீதியில் இலங்கை தமிழர்களோடு ஒத்தவர்களாக காணப்பட்டாலும் புவியியல், வதிவிடம், வரலாறு, பொருளாதாரம், சமூக நிலை, அரசியல் நிலைப் பாடு என்ற அடிப்படையில் வேறுபட்டவர்களாக காணப்படுகின்றனர்.

இம்மக்களின் எதிர்பார்ப்புகளாக, ஒரு சமத்துவமான நிலையில் ஏனைய சமூகங்களுக்கு இணையாக உரிய உரிமைகளை முழுமையாக அனுபவித்து தேசிய நீரோட்டத்தில் ஒருங்கிணைதல் என சுருக்கமாக வரையறுக்கலாம். இதிலிருந்து பின்வரும் மூன்று கருத்துகளை தெளிவாக விளங்கி கொள்ளலாம்.

1. சமத்துவமற்ற நிலை
2. உரிமைகளை முழுமையாக அனுபவித்தல்
3. தேசிய நீரோட்டத்தில் ஒருங்கிணைதல்

சமத்துவமற்ற நிலை என்பதை பின்வருவம் குறிகாட்டிகளை நுணுகி நோக்கினால் மிக இலகுவாக தெளிவுபடுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. வறுமையும் போசாக்கின்மையும்
2. வீடமைப்பு வசதிகள்
3. சுகாதார நிலை
4. கல்வி
5. அரச சேவை
    - அரச சேவைகளை பெற்று கொள்ளல்
    - மொழி ரீதியிலான தடைகள்
    - தபால் சேவை
    - அரச சேவையில் உள் நுழைதல்
6. வீட்டுரிமையும் நிலவுரிமையும்

**வறுமையும் போசாக்கின்மையும்**

சர்வதேச மட்டத்தில் 2000 ஆண்டளவில் புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகளில் (Millennium Development Goals) பிரதானப்படுத்தப்பட்டதாக வறுமை ஒழிப்பு பேசப்படும் வேளையில் தோட்டப்புறத்து வறுமை நிலை நகர மற்றும் கிராமிய துறைகளை விட அதிக அளவில் காணப்பட்டதால் 2006ஆம் ஆண்டு தோட்ட சமூக அபிவிருத்திக்கான தேசிய நடவடிக்கை திட்டமொன்று (2006-2015) உருவாக்கப்பட்டது. இது முழுமையாக நடைமுறைமைப் படுத்தப்படாது போனதுடன் வறுமையும் போசாக்கின்மையும் ஒப்பீட்டளவில் ஏனைய துறைகளை விட தொடர்ந்து உயர்ந்த நிலையில் இருப்பதை புள்ளிவிபரங்கள் எடுத்துகாட்டி கொண்டிருக் கின்றன.

**வீடமைப்பு வசதிகள்**

தொழிலாளர் சமூகத்தின் பெரும்பாலானோர் சுகாதாரம், வெளிச்சம், காற்று மற்றும் இடவசதி போன்றவற்றில் குறைவானவசதிகள் உள்ள லயன் வரிசை வீடுகளிலேயே தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனி மலசல கூட வசதிகள் பாதுகாப்பான குடிநீர் வசதிகள் இன்னும் பலருக்கு கிடைக்கவில்லை 200,000 குடியிறுப்புகளில் தனிவீடுகள் 45,000 குடும்பங்களுக்கே கிட்டியுள்ளன.

**சுகாதார நிலைமை**

தோட்டப்புறங்களில் 400க்கு மேற்பட்ட மருந்தகங்களும் வார்ட்டுகள் உள்ளதோடு 60 வைத்தியசாலைகள் மூலமாக மக்களின் வைத்திய தேவைகள் மருத்துவ உதவியாளர்களால் குறைவான மட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. தோட்ட முகாமையினரால் நிர்வகிக்கப் படும் இம்முறைமையினை அரசாங்கம் பொறுப்பேற்க 2002இல் தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் அது முழுமையாக நிறைவேறாத நிலையில். மீண்டும் 2021ஆம் ஆண்டு இறுதியிலும் அமைச்சரவை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. எனினும் இப்பொறுப்பேற்றல் நடவடிக்கைகள் எப்போது முற்றுப் பெறும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

**கல்வி**

இலங்கையில் காணப்படும் 800க்கு மேற்பட்ட தோட்ட பாடசாலைகள் 1972இலிருந்து அரச முறைமையின் கீழ் கொண்டுவரப்பட்டன. ஆரம்ப கல்வி வழங்கல் ஓரளவு திருப்தியை தந்தாலும் இடைநிலை கல்வியில் கணிதம் விஞ்ஞானம் ஆங்கிலம் போன்ற பாடங்களை பொறுத்தவரை இன்னும் திருப்திகரமான நிலையினை அடைய வில்லை. உயர்கல்வியை பொறுத்தவரை தொழில்நுட்பம் மற்றும் பல்கலைக்கழக கல்வி இன்னும் இவர்களுக்கு முற்றிலும் கிடைக்கக் கூடியதாக இல்லை. ஏனைய சமூகத்தினரின் தேவைகளுக்காக வடக்கு, கிழக்கு மற்றும் தென்கிழக்கு பிராந்தியங்களில் அமைந்துள்ள பல்கலைக்கழகங்களை போன்று இம்மக்கள் செறிவாக வாழுகின்ற நுவரெலிய மாவட்டத்தில் பல்கலைக்கழகம் ஒன்றினை அமைக்க எடுக்கப்பட்ட முயற்சி எப்போது நிறைவேறும் என்று அனைவரும் ஆவலோடு எதிர்பார்பார்த்த வண்ணமுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரச சேவை

கரு முதல் கல்லறை வரையிலான சகல தேவைகளையும் தோட்ட நிர்வாகமே வழங்கி வந்த நிலையில் அரசினால் வழங்கப்படுகின்ற அனைத்து சேவைகளும் இவர்களை போய் சேரவில்லை. எடுத்துக் காட்டாக, பிரதேச சபைகள் சட்ட ரீதியாக தோட்டங்களில் தங்களது சேவைகளை வழங்க முடியாதிருந்தன. நாட்டிலே ஏனைய பிராந்தியங்களில் 8000 பேருக்கு ஒரு பிரதேச சபை என்ற நிலையில் நுவரேலிய மாவட்டத்தில் 250,000 பேருக்கு ஒரு பிரதேச சபை என்ற சமத்துவமற்ற நிலை காணப்பட்டது.

ஏனைய பகுதிகளில் தபால்கள் தனித்தனியாக உரியவர்களின் முகவரி அடிப்படையில் அவர்களின் வீடுகளுக்கு சென்று தபாற்காரரால் வழங்கப்பட்ட நிலையில் தோட்டநிர்வாகம் தபால் பொதியை பெற்று மக்கள் ஒன்று கூடுகின்ற இடமொன்றில் நேரடியாக அல்லது ஏனையவர்கள் மூலமாக வழங்கப்பட்டு வந்தது. இந்த குறையை நீக்க 2006இல் தோட்ட தபால் சேவகர்கள் 300 பேர் நியமனம் செய்யப் பட்டாலும் இந்தக் குறை இன்னும் முற்றிலும் தீர்க்கப்படவில்லை.

அரசமொழி சிங்களமும் தமிழும் என்றிருந்தாலும் அரசாங்க காரியாலயங்களில் தமிழ் பேசும் உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக சிங்களம் தெரியாத தோட்ட மக்கள் பல்வேறு சிரமங்க ளை எதிர்நோக்கினர். இச்சிரமங்களை போக்க தோட்ட சமூக தொடர் பாடல் வசதியாளர்கள் 300 பேர்கள் 2006இல் நியமிக்கப்பட்டாலும் இம்மொழிப் பிரச்சினை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

குடியுரிமை மற்றும் உரிய கல்வி தகுதிகள் இல்லாத காரணத்தால் அரச சேவையில் உள்நுழைவோர் மிக குறைவாகவே காணப்பட்டனர். தற்போது ஆசிரிய பதவிகள் குறிப்பிடத்தக்களவு காணப்பட்டாலும் உயர்மட்ட பதவிகளில் மலையகத்தவர்களின் எண்ணிக்கை பூச்சிய மாகவே காணபடுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுரிமையும் நிலவுரிமையும் மிக அதிகமாக பேசப்பட்ட விடயங்களாகும். லயங்களில் மற்றும் தனிவீடுகளில் தொழிலாளர்களாக இருக்கும் வரை வசிப்பிட உரிமை இருந்தது. ஆனால் தெளிவான உரித்து தனி வீடுகளை பெற்றுகொண்ட சிலருக்கே கிடைத்துள்ளது. 2015 ற்குப்பின்னர் பல்வேறு சிரமங்களை கடந்தே இந்த உரித்துகளை பெற்றுகொள்ள கூடியதாக இருந்த நிலைமையில் காணி உரிமை இன்னும் எட்டா கனியாகவே உள்ளது.

**உரிமைகளை முழுமையாக அனுபவித்தல்**

இம்மக்கள் 1948இல் குடியுரிமை மற்றும் வாக்குரிமைகளை இழந்த நிலையில் 1954இல் நாடற்றவர்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர்.

1964 மற்றும் 1974 இலங்கை இந்திய ஒப்பந்தங்களின் கீழ் நாடற்றவர்கள் நிலை நீக்கப்பட்டாலும் 2003 குடியுரிமை திருத்த சட்டத்தின்படி இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டு நாடற்றவர் நிலை முற்றாக நீக்கப்படல் ஏறக்குறைய 50 ஆண்டுகளாக குடியுரிமை யற்று நாடற்றவர் என்ற நிலையில் பல்வேறு உரிமை மறுப்புகளை எதிர்நோக்கினர்.

நாட்டில் வாழும் அனைத்து 18 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. வாக்காளர்கள் என்பதை குறிக்க அட்டையில் பெயரை அடுத்து 'V' என்ற எழுத்து சேர்க்கப்பட்டது. ஆனால் வாக்குரிமை இல்லாத மலையக மக்களின் அட்டையில் 'X' என்ற எழுத்து சேர்க்கப்பட்டு ஏனையவர்களிடமிருந்து இவர்கள் பிரித்து காட்டப்பட்டனர். இதன் விளைவுகள் பாரதூரமாக அமைந்திருந்தன.

இலங்கை குடியுரிமைக்கு விண்ணப்பிப்பதற்கான தகுதி இருந்தும் நாடற்றவர் நிலை 2003 வரை நீடித்திருந்த காரணத்தினால் நிலம் போன்ற சொத்துகளை வாங்கும் போது வெளிநாட்டவர் செலுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டிய பெறுமதியில் 100% வீத வரியை செலுத்த வேண்டியிருந்தது. அரசாங்க வேலை வாய்ப்புகள்முற்றிலும் மறுக்கப்பட்டன.

தோட்டங்கள் 1972இல் தேசிய மயமாக்கப்பட்டதை தொடர்ந்து தோட்டங்களில் மாற்று பயிர் செய்கையை ஊக்குவிக்க தேசிய விவசாய பன்முகப்படுத்துதல் மற்றும் குடியமர்த்துதல் (National Agricultural Diversification and SettlementAuthority - NADSA) என்ற அதிகார சபை ஒன்று நிறுவப்பட்டது. நட்சா என்று அழைக்கப்பட்ட இந்த அதிகார சபை தோட்ட நிலங்களை காணியற்றவர்களுக்கு பகிர்ந்தளித்து மாற்று பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்பட்டது. இந்த செயற்திட்டங்களில நாடற்ற தோட்ட தொழிலாளர்கள் வெளியேற்றப் பட்டு நிலமற்ற கிராம மக்கள் குடியமர்த்தப்பட்டனர். இந்த நிலப்பங்கீட்டில் தோட்டத்தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் ஆய்வாளர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளன.

1980களில் 100,000க்கு சற்று அதிகமாக காணப்பட்ட தேயிலை சிற்றுடைமையாளர்கள் தற்போது 400,000 இற்கு மேற்பட்டதாக காணப் படுவதற்கு இத்தகைய நிலப்பங்கீடுகள் காரணமாக அமைந்திருக்கலாம்.

நுவரெலியா மாவட்டத்தில் 1977இல் தேர்தலுக்கு சற்று முன்னர் 7000ஏக்கர் தோட்ட நிலங்கள் கிராம விஸ்தரிப்பிற்காக பொறுப்பேற்க எடுக்கப்பட்ட முயற்சிகள் மக்கள் எதிப்பினால் சிவனு லட்சுமணன் என்ற தோட்ட இளைஞன் சுடப்பட்டு இறந்ததோடு முடிவிற்கு வந்தாலும் தோட்ட தரிசு நிலங்கள் கிராம மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் முயற்சிகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

### தேசிய நீரோட்டத்தில் ஒருங்கிணைதல்

ஒரங்கிணைதல் என்பது தமது அடையாளத்தை பேணிக் கொண்டு தேசிய நீரோட்டத்தில் இணைதல் ஆகும். அரசியல் ரீதியில் குடியுரிமை பெற்றவர்கள்மற்றும் வாக்காளர்களின எண்ணிக்கை அதிகரிப்போடு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் அதிகரிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. 1977இல் ஒருவரே தெரிவு செய்யப்பட்ட நிலை மாறி தற்போது ஒன்பது பிரதிநிதிகள் நுவரேலியா (5), பதுளை (2,) கண்டி (1) கொழும்பு (1) என காணப்படுகின்றனர். இந்த தொகை உண்மையில் அதிகமாக காணப்படவேண்டும். இம்மக்கள் சனத் தொகையில் 4.4%மாக கணக்கிடப்பட்டாலும், பலர் தங்களை இலங்கை தமிழர்களாக அடையாளப்படுத்தி கொண்ட நிலையில் அவர்களையும் கணக்கிலெடுத்தால் இவர்களது வீதம் 7.2%மாக இருக்க வேண்டுமென ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். இதன்படி 225 பேர் உள்ள பாராளுமன்மன்றத்தில், 15 பேர் அங்கம் வகிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு உண்டு.

அரசாங்க கட்டமைப்பில் பாராளுமன்ற பிரதநித்துவ அதிகரிப்பை ஒட்டியதாக தேசிய கட்சிகளுக்கு பாராளுமன்றத்தில் சட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அரசாங்கத்தை அமைப்பதற்கும் சிறிய கட்சிகளின் ஆதரவு அவசியம் என்ற நிலையில் அரசாங்கத்தை அமைக்கும் தரப்பினரோடு சேர்ந்து பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ள வாய்ப்புகள் உருவாகின.

இந்தவகையில் இம்மக்களுக்காக பிரத்தியேக அமைச்சொன்று 1997இல் உருவாக்கப்பட்டமையை குறிப்பிடலாம். தோட்ட உட்கட்ட மைப்பு, வீடமைப்பு சமுதாய அபிவிருத்தி என ஆரம்பிக்கப்பட்ட அமைச்சு பெயரில் சிற்சில மாற்றங்களோடு செயற்பட்டு 2010இல் பொருளாதார அமைச்சின் கீழ் உள்வாங்கபட்டு, தன்னுடைய தனித்து வத்தை இழந்த பின்னர் 2015இல் ஆட்சிமாற்றத்தை தொடர்ந்து தனது ஆரம்ப பெயரை மீண்டும் பெற்று அதே ஆண்டில் மலைநாட்டு புதிய கிராமங்கள்அபிவிருத்தி அமைச்சு என்ற பெயரோடு ஒரு புதிய பரிமாணத்தை பெற்றது. ஆனால் 2020இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றத்தின் பின்னர் மீண்டும் தோட்ட உட்கட்டமைப்பு என்ற ஆரம்ப பெயரை பெற்றமையும் அது தனது அமைச்சரவை அந்தஸ்தை இழந்து இராஜாங்க அமைச்சாகியமை ஒரு வகையில் பின்னடைவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போதைய அரசில் இந்த மக்களின் அரசியல் பேரம்பேசும் சக்தி பலவீனப்பட்டுள்ளமையை இது எடுத்து காட்டுகிறது எனலாம்.

மலையக மக்கள் 1997-2020 காலப்பகுதியில் பெற்றுகொண்ட ஆசிரிய நியமனங்கள் உள்ளிட்ட தொழில் வாய்ப்புக்கள் போன்றே பாதை, மின்சார வசதி மற்றும் வீடமைப்பு நடவடிக்கைகள்என்பன குறிப்பிடத்தக்கன. அத்தோடு பிரதேச சபைகள் சட்ட ரீதியாக தடையின்றி செயற்படக்கூடியமை, பிரதேச சபைகள். பிரதேச செயலகங்கள் என்பவற்றின் எண்ணிக்கை நுவரேலிய மாவட்டத்தில் அதிகரித்தமை மற்றும் மலைநாட்டு புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கம் என்பன குறிப்பிடதக்கன.

பொருளாதார ரீதியில் தோட்டத்துறையில் தொழிலாளர்களுக்கு தினக்கூலியாக ரூபா 1000/= வழங்க வேண்டும் என்ற கோரிக்கை முகாமைத்துவத்திற்கும் தொழிற்சங்கங்களுக்குமான பேச்சு வார்த்தை யில் இணக்கம் காணாத நிலையில் அரசாங்க சார்பில் தொழில் ஆணையாளர் தலையிட்டு இத்தொகை வழங்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. தோட்ட கம்பனிகள் இதை வழங்குவதற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்ட நிலையில சில கம்பனி தோட்டங்களில் இந்த தொகை முறையாக வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு தொழிற்சங்கங்களினால் முன்வைக்கப்பட்டுள்ளது. அதேவேளை கம்பனிகள் இந்த அரசாங்க தீர்மானத்திற்கெதிராக நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டு அதற்கான தீர்ப்பினை எதிர்பார்த்த நிலையிலுள்ளது.

இதற்கிடையில் வெளிவாரி உற்பத்தி முறை ஒன்றை சில கம்பனிகள் அறிமுகம் செய்துள்ளது. இதன்படி தொழிலாளர்களுக்கு கூலி வழங்குவதற்கு வாரத்தில் சில நாட்கள் வேலை வழங்கி ஏனைய நாட்களில் தோட்ட நிலங்களில் ஒரு குறிப்பிட்ட பகுதியை அல்லது குறிப்பிட்ட தேயிலை செடிகளுடன் கூடிய பகுதியை குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகை முறைமை போல வழங்கி அதில் பறிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேயிலை கொழுந்தை ஒரு குறிக்கப்பட்ட விலைக்கு தோட்ட நிர்வாகம் வாங்கி கொள்ளும் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த முறைமையில் திருப்தி காணாத தொழிற்சங்க அரசியல் தலைமைகள் தற்போது மாற்று கோரிக்கையாக தொழிலாளர்களை சிற்றுடமையாளர்களாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளன. இந்த முறைமை நடைமுறைப்படுத்துமிடத்து தர்க்க ரீதியில் இதுவரை இருந்து வந்த தோட்ட முகாமைத்து முறை யிலிருந்து தொழிலாளர்கள் விடுபடுவர். அத்தோடு கம்பனிகள் தேயிலை உற்பத்தியில் (Cultivation) ஈடுபடாது தேயிலை பதப் படுத்தலில் (Processing) மாத்திரம் ஈடுபடுகின்ற நிலமை தோன்றலாம்

தேயிலை உற்பத்தியில் 4 இலட்சத்திற்கு மேற்பட்ட சிற்றுடை மையாளர்கள ஈடுபட்டு மொத்த உற்பத்தியில் 70%இற்கு அதிகமான பங்கினை வசிக்கின்றனர். இந்த எண்ணிக்கை இன்னும் ஒன்றரை இலட்சங்களால் கூடக்கூடிய சாத்தியங்கள் உருவாகலாம்.

இக்கோரிக்கை நிறைவேற்றப்பட்டால் ஏற்படும் விளைவுகள் ஆராயப் படவேண்டியன. சாதகமாக அமையுமெனில் சொந்த வீடுகள்- சிற்றுடைமையாளர்கள் - மலைநாட்டு புதிய கிராமங்கள் என்ற கவர்ச்சி மிக்க சமநிலை உருவாக வாய்ப்புள்ளது.

**புதிய அரசியல் கோரிக்கை**

சமீபத்தில் அனைத்து தமிழ்கட்சிகளும் சேர்ந்து இந்திய அரசிற்கு சமர்ப்பிப்பதற்காக 13ஆவது அரசிலமைப்பு திருத்தம் குறித்த ஆவண மொன்றை தயாரிப்பதில் ஈடுபட்டனர்.

பின்னர் இணைந்திருந்த மலையக கட்சிகள் தாங்கள் தனித்து ஒன்றை தயாரித்து அதனை இலங்கை, இந்திய அரசாங்கங்கள் உட்பட பல நாடுகளுக்கு சமர்ப்பிக்க முனைந்துள்ளனர். இந்த ஆவணத்தில் முக்கிய கோரிக்கையாக அமைவது நிலத்தொடர்பற்ற சமூக சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஒன்றை அமைப்பது ஆகும். அரசியல் யாப்பு திருத்தம் ஆலோசிக்கப் படும்போது இது கவனத்தில் எடுக்கப்படும் என எதிரபார்க்கப் படுகின்றது. இந்த சபையில தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற பிரதிநிதிகள் மாகாண சபை உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளடங்குவர். இது அரச கட்டமைப்பில் எத்தகைய பங்கு வகிக்கும் ஏனைய அரச அதிகார மையங்களோடு எத்தகைய தொடர்பினை பேணும் என்பன நிச்சயம் விவாதத்திற்கு உட்படுத்தப்படும்.

இது ஏற்றுகொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டால் மலையக மக்கள் அரசியல் ரீதியாக வலுப்படுத்தப்படுவதோடு, தேசிய நீரோட்டத்தில் ஒருங்கிணைவதற்கான வாய்ப்பினை துரிதப்படுத்தும். நிறைவாக இம்மக்களின் மேலே குறிப்பிட்ட எதிர்பார்க்கைகள் நிறைவேற சில உடன்பாடான நடவடிக்கைகள் (Affirmative) அவசிய மானவை என்பதில் மாற்று கருத்திற்கு இடமில்லை.

- தினக்குரல் / வீரகேசரி - ஆகஸ்ட் 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2




# மலையகத் தமிழர்களின் சமூக மேம்பாட்டிற்கான திட்ட முயற்சிகளும் பொருத்தமான நடைமுறைப்படுத்தல் பொறிமுறையின் தேவையும்

## அறிமுகம்

பெருந்தோட்ட சமூகத்தின் சமூக அபிவிருத்திக்காக உரிய அமைச்சு களால் கடந்த காலங்களில் பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இவற்றில் இரண்டு திட்டங்கள் குறிப்பிடத்தக்கவை. முதலாவது, 10 ஆண்டுத் திட்டம் எனப்படும் பெருந்தோட்ட சமூகத்தின் சமூக அபிவிருத்திக்கான தேசிய செயற்திட்டம் (2006-2015) ஆகும். மற்றையது 5 ஆண்டுத் திட்டம் என அறியப்படும் பெருந்தோட்ட சமூகத்தின் சமூக அபிவிருத்திக்கான தேசிய செயற்திட்டம் (2016-2020) ஆகும். உண்மையில், 5 ஆண்டுத் திட்டமானது இற்றைப்படுத்தப்பட்ட 10 ஆண்டுத் திட்டமாகும். இது முதலில் 10 வருட காலப்பகுதியை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டதுடன், பின்னர் அமைச்சரவையின் அறிவுரையின்படி அதற்கான காலம் 5 ஆண்டுகளாக குறைக்கப்பட்டது. இந்த 10 ஆண்டு திட்டம் மில்லேனியம் அபிவிருத்தி இலக்குகள் (மி.அ.இ) (Milleanium Development Goals - MDGs) மையமாகக் கொண்டது என்பதையும், 5 ஆண்டு திட்டம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (நி.அ.இ) (Subtainable Development Goals - SDGs) இணைக்கப்பட்டுள்ளது என்பதையும் நினைவில் கொள்வது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம். 2005 முதல் 2015 வரையிலான மி.அ.இ (MDG) இப்போது காலாவதி ஆகிவிட்டது. ஆனால் 2016 முதல் 2030 வரையிலான நி.அ.நோ (SDG) இன்னமும் நடைமுறையில் உள்ளது. எனவே செயல்திட்டத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு SDGயில் குறிப்பிடப்பட்ட நோக்கங்கள் முழுமையாக அடையப்படவில்லை என்பதைக் முதலில் குறிப்பிட வேண்டும். எனவே, மி.அ.நோ (SDG) ஐ மறுபரிசீலனை செய்து, தீர்க்கப்பட வேண்டிய மீதமுள்ள பிரச்சி னைகளை அடையாளம் காண வேண்டியது அவசியமாகும். அத்தோடு, புதிதாக எழுந்துள்ள பிரச்சினைகள் எவை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இந்த பிரச்சினைகளை ஒன்றிணைத்து அபிவிருத்தி சார்ந்தவை எனவும், உரிமைகள் சார்ந்தவை எனவும் வகைப்படுத்தலாம். ஆனால் தற்போது உரிமைகள் சார்ந்த பிரச்சனைகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

## பின்புலம்

மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்ட விடயங்கள் முக்கியமாக அபிவிருத்தி தொடர்பானவை. அடிப்படையில் இரண்டு திட்டங்களும் வீட்டுவசதி மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளில் கவனம் செலுத்தின. 10 ஆண்டுத் திட்டத்தை உருவாக்கும் போது வறுமை நிலை முக்கியப் பிரச்சினையாகக் கண்டறியப்பட்டாலும், வீட்டுத் தேவைகளுக்கே அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது. பொதுவாக காற்றோட்டம் மற்றும் வெளிச்சம் இல்லாத நெரிசல் மிகுந்த லயன் அறைகளுக்கு பதிலாக 7 பேர்ச் காணியுடன் சேர்ந்த தனி வீடுகள் நிர்மாணிக்கப்பட வேண்டும். உண்மையில், இது 2005க்கு முன்னைய திட்டத்தின் ஒரு தொடர்ச்சியாகும். எனவே வீடமைப்புக்கான கோரிக்கை தீவிரமாக தொடரப்பட்டது. பெருந்தோட்டப்பகுதியில் சுமார் 200,000 குடும்பங்கள் காணப்பட்டன, ஏற்கனவே சுமார் 40,000 தனி வீடுகள் உள்ளன. எனவே மீதித் தொகைக்கு தனி வீடுகள் வழங்கப்பட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். ஆட்சி மற்றும் கொள்கை மாற்றங்களால் 10 ஆண்டு திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. ஆதலால் தனி வீடுகள் கட்டும் பணியில் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றம் இருக்கவில்லை. எனவே 2016 இல் முந்தைய திட்டத்தை புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு நடவடிக்கை மீண்டும் தொடங்கப்பட்டபோது வீட்டு வசதி மற்றும் அதனுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகளுக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டது. கல்வி, சுகாதாரம், குழந்தை பராமரிப்பு, திறன் அபிவிருத்தி போன்ற பிற துறைகளுக்கு வள ஒதுக்கீடுகளின் அடிப்படையில் ஓரளவு சம முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது.

**முக்கிய பிரச்சினைகள்**

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டால், புதிய செயல்திட்டத்தின் தேவையானது உரிமை சார்ந்த அணுகுமுறையை அபிவிருத்தி விடயங்களில் உள்ளடக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது என்பது தெளிவாகின்றது. 2016 முதல் 2020 வரையிலான காலகட்டத்தில், சில துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டன. முதலாவதாக 7 பேர்ச் காணியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளுக்கு தெளிவான உரிமைப்பத்திரம் வழங்கப்பட்டது. கடந்த காலத்தில் காணி சீர்திருத்த ஆணைக்குழு (LRC) மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபை (NHDA) மூலம் அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தாலும், அவை தெளிவான உரிமைப் பத்திரங்களாக இருக்கவில்லை. அவை காணிக் கச்சேரிகளில் பதிவு செய்யப்படவில்லை என்பதால் அடைமானம் வைக்கவோ, விற்பனை செய்யப்படக் கூடியவையோ இருக்கவில்லை.

பெருந்தோட்ட மக்கள், பிரதேச சபையின் தேர்தல் நடவடிக்கைகளில் கலந்து கொண்டு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டபோதிலும், தோட்ட நிர்வாகத்தின் அனுமதியின்றி தோட்டங்களுக்குள் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்வதற்கு பிரதேச சபைகளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டரீதியான தடைகள் இருந்தன. அதற்கு பிரதேச சபையானது தோட்ட நிர்வாகத்திடம் அனுமதி பெற வேண்டும் என்றிருந்த பிரதேச சபை சட்டம் 1987இன் பிரிவு 33, தோட்டங்களுக்குள் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து ஒரு பிரதேச சபை தோட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்படல் வேண்டும் என்று திருத்தம் கொண்டுவரப்பட்டது. பிரதேச செயலகங்கள் அரசாங்க சேவை வழங்கல் முறையின் நுழைவாயிலாக செயற்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. குடிமக்கள் முதலில் தொடர்பு வைக்கும் அலுவலகராக கிராம சேவகர் இருக்கிறார். இவ்வாறான அரசாங்க சேவை வழங்கல் பெருந்தோட்ட சமூகத்திற்கு மிகவும் தூரத்தில் இருப்பதாக சந்தேகத்திற்கு இடமின்றி தெரிகிறது, உதாரணமாக, நுவரெலியாவில் உள்ள அம்பகமுவ பிரதேச செயலகமானது சில வருடங்களுக்கு முன்னர் வரை 200,000க்கும் அதிகமான சனத் தொகையைக் கொண்டிருந்தது. இந்த எண்ணிக்கை பின்னர் கிராம சேவகர்பிரிவுகளை குறிப்பிட்ட இலக்கத்திற்குள் வைத்தது. ஒரு கிராம சேவகர் பரந்த புவியியல் பகுதிக்கு சேவை செய்யவேண்டும். எனவே மக்கள் அவரை அணுகுவதில் சிரமம் ஏற்படுகிறது. உதாரணமாக அம்பகமுவ பிரதேச செயலகப் பிரிவிற்குள் ஹட்டனுக்கு அப்பால் வாழும் மக்கள் 50 - 60 கிலோமீற்றர் பயணிக்க வேண்டியிருந்தது. அண்மையில் இந்தப் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டபோதிலும், பிரதேச செயலகங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

தென்னிந்தியாவில் இருந்து தொழிலாளர்களின் வருகை 200 ஆண்டுகளுக்கு முன்பு 1823ஆம் ஆண்டு முதல் நடந்தது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் தற்போது மலையகம் 200 என்ற முழக்கம் எழுப்பப்படுகிறது. சிவில் சமூக அமைப்புகளில் பல்வேறு மன்றங்களில் மத குழுக்களில் இந்த இருநூறு வருட காலப்பகுதியில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை அரசியல் கட்சி கள், அக்கறையுள்ளவர்கள் எடுத்துரைக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வரலாற்றுக் கண்ணோட்டத்தில், கோப்பித் தோட்டங்களிலும், பின்னர் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களிலும் பணிபுரிய பிரிட்டிஷ் அதிகாரிகளால் இந்த மக்கள் கூட்டம் கொண்டு வரப்பட்டாலும், அவர்கள் தோட்டங்களுக்குள் வேரூன்றிய சமூகமாக மாற்றப்பட்டு அவர்களின் வாழ்க்கை பெருந்தோட்டங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதாயிருந்தது. அவர்கள் தங்கள் கலாசார அடையாளங்களுடன் ஒரு தனித்துவமான சமூகக் குழுவாக உருவெடுத்தபோதிலும், தேசிய நீரோட்டத்துடன் எந்த ஒருங்கிணைப்பும் இல்லாமல் பொருளாதாரரீதியில் தனிமைப்படுத்தப்பட்டனர். 1931 இல் டொனமூர் அரசியலமைப்பின் கீழ் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டபோது அது இந்த சமூகத்தையும் உள்ளடக்கியது. அரசியல் வளர்ச்சியுடன் அவர்கள் வாக்காளர்களாக மாறி இலங்கை அரச சபைக்கு தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க முடிந்தது.

எவ்வாறாயினும், நாடு சுதந்திரம் பெற்று, இலங்கை குடியுரிமைச் சட்டம் 1948 நிறைவேற்றப்பட்டபோது, இந்த சமூகம் தமது குடியுரிமையையும் பின்னர் தமது வாக்குரிமையும் இழந்தது. 1946 தேர்தலில் இந்த சமூகம் ஏழு பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்க முடிந்தது ஆனால் 1952இல் அவர்களால் ஒருவரை கூட தேர்ந்தெடுக்க முடியவில்லை. இந்த நிலை 1977 வரை தொடர்ந்ததுடன் இந்த ஆண்டிலேயே அவர்களால் ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க முடிந்தது. ஆனால் இந்த இடைப்பட்ட காலத்தில், அவர்கள் நியமன உறுப்பினர்கள் மூலம் பிரதிநிதித்துவம் பெற்றனர். 2003ஆம் ஆண்டில் குடியுரிமைச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொண்டதன் மூலம் அவர்கள் அனைவரும் இலங்கையின் குடி மக்களாக அங்கீகரிக்கப்பட்டனர். அதுவரை அவர்கள் நாடற்றவர்களாகக் கருதப்பட்டு, அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்டு, நாட்டின் வளர்ச்சிப் பணிகளில் பங்கேற்பதில் இருந்து விலக்கப்பட்டிருந்தனர். 1964 இல் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான ஒப்பந்தத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக சுமார் 500,000 பேர் இந்தியாவிற்கு திருப்பி அனுப்பப்பட்டனர் என்பதையும் அது இந்த சமூகத்தின் அரசியல் பலத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இது அரசியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பெருமளவில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தி, மக்களின் வாழ்க்கை நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்தியது. சமூக வளர்ச்சிக் குறிகாட்டிகளை கருத்தில் கொள்ளும்போது, இந்த சமூகம் நாட்டின் மற்ற சமூகங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த மட்டத்தில் இருந்தது. எனவே பல்கலைக்கழக அனுமதி மற்றும் உயர்மட்ட வேலை வாய்ப்புகள் தொடர்பாக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. உத்தேச தேசிய செயல் திட்டம் (NPA) இந்த அபிலாஷைகளையும் எதிர்பார்ப்புகளையும் பிரதிபலிக்கும் வகையில் இருக்க வேண்டும். தேசிய செயல் திட்டம் என்பது பெருந்தோட்டங்களில் உள்ள பெருந்தோட்ட சமூகத்துடன் மட்டும் நின்றுவிடக்கூடாது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும், ஏனெனில் இந்த சமூகத்தவர்களில் பெரும்பான்மையோர் பெருந் தோட்டங்களில் வேர்களைக் கொண்டிருந்தாலும், இப்போது நகர்ப்புறங்களுக்கும் நகர்ந்துள்ளனர். ஆனால் அவர்கள் அனைவரும் மலையக தமிழர்கள் என்ற குடையின் கீழ்தான் வருவதோடு அனைவரும் மலையகத் தமிழர்கள் என்று அடையாளப்படுத்தப்படவே விரும்புகிறார்கள்.

## பொருத்தமான அமுலாக்கல் பொறிமுறை

எனவே தேசிய செயல் திட்டம் அனைத்து மலையக தமிழர்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். பொருத்தமான அமுலாக்கல் பொறிமுறை எந்தவொரு செயல் திட்டமும் அதன் இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைய அது சரியாக செயல்படுத்தப்பட வேண்டும். கடந்த காலத்தில் தேசிய செயல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படாததற்குக் காரணம் அரசியல் ஆட்சி மாற்றங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயல்படுத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமுறைகள் என்று கூறப்பட்டது. அதிர்ஷ்டவசமாக, தற்போது பெருந்தோட்டப் பகுதிக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை, (New Villages Development Authority for the Plantation Regions - NEVIDA) உருவாக்கப்பட்டுள்ளது. உண்மையில் இந்த அதிகார சபை (NEVIDA) அமைப்பதற்கான முன்மொழிவு உருவாக்கப்பட்ட போது, அது 5 ஆண்டு தேசிய செயல்திட்டத்தை செயல்படுத்தும் நோக்கத்தைக் கொண்டிருந்தது. எனவே எதிர்காலத்தில் ஒரு செயல் திட்டம் வகுக்கப்படும்போது, பொருத்தமான செயற்படுத்தல் பொறிமுறையாக இவ்வதிகார சபை இருக்கலாம். மனித வளங்கள் மற்றும் ஏனைய வளங்களின் அடிப்படையில் அதிகாரசபை உரிய முறையில் பலப்படுத்தப்பட வேண்டும் என்பது ஒரு முக்கிய பொது வான தேவையாகும்.

*- மாண்புமிகு மலையக மக்கள் அமைப்பு*
*மலையகம் - 200 குறித்து வெளியிடவுள்ள*
*ஆங்கில சஞ்சிகைக்கு எழுதப்பட்ட*
*கட்டுரையின் தமிழாக்கம்.*
*- ஆகஸ்ட் 2023.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3

# தமிழ் நாட்டில் இலங்கையின் தாயகம் திரும்பியோர் புனர்வாழ்வும் சவால்களும்: ஒரு மீள் பார்வை

## அறிமுகம்

தமிழ்நாட்டில் இலங்கையின் தாயகம் திரும்பியோர் மற்றும் அகதிகள் என்ற சொற்பதங்கள் இலங்கையிலிருந்து பல்வேறு காலகட்டங்களில் தமிழ்நாட்டில் குடியேறியோரை குறிப்பதற்காக மாறி மாறி எழுத்திலும் நடைமுறையிலும் குறிக்கின்றவையாக அமைந்துள்ளன. தாயகம் திரும்பியோர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் அமைய அகதிகள் தமது சுய விருப்பின் அடிப்படையில் இலங்கையின் கலவர சூழ்நிலை காரணமாக குடியேறியவர்களாவர்.

தாயகம்திரும்பியோர் 1965 -1984 காலப்பகுதியில் குடியேற அகதிகள் 1977க்குப் பின்னர் இன்று வரை தொடர்ந்து குடியேறிய வர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றனர். ஒப்பந்த அடிப்படையில் குடியேறியோரின் புனர்வாழ்வுக்காக பல திட்டங்களை உள்ளடக்கிய பொதி ஒன்று அமுல்படுத்தப்பட்டது. இது குறித்து பல அறிக்கைகளும் நூல்களும் கட்டுரைகளும் 1980களிலிருந்து வெளிவந்துள்ளன. தாயகம் திரும்பியோர் குறித்து அவர்களது தோற்றம் அவர்களின் புனர்வாழ்விற் காக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள் அவற்றினால் ஏற்பட்ட பிரச்சினைகள் சவால்கள் மற்றும் இவர்கள் குறித்து வெளிவந்த ஆவணப்பதிவுகளை மீள் நோக்கி தற்போதைய நிலையை விபரிப்பதற்கு இக்கட்டுரை முயல்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்புலம்**

இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் 1823ஆம் ஆண்டில் இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கைக்காக தமிழ்நாட்டிலிருந்து குடியேறியவர்கள் தனிநபர்களாக வந்து 1867க்குப் பின்னர் தேயிலை பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து குடும்பங்களாக குடியேறி நிரந்தரமாக வாழத்தொடங்கினர். 1850இற்கு முற்பட்ட காலத்தில் குடியேறியவர்களில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் நாடு திரும்ப பின்னர் குடிவருவதும் குடியகல்வதுமாக அமைய குடிவரவு நேர்கணியமாக அமைந்து வளர்ச்சி பெற்ற நிலையில் ஒரு நிரந்தர சமூகமாக உருவாகத் தொடங்கியது. இவர்களது குடிவரவானது மிகவும் துயரம் நிறைந்த ஒன்றாக அமைந்த சோகத்தை பல வரலாற்றாசிரியர்கள் பதிவு செய்துள்ளனர்[1].பல தமிழ்நாவல்களும்[2] இச்சோகத்தை கருப்பொருளாக மையப்படுத்தியுள்ளன. தமிழ்நாட்டின் அப்போது நிலமற்றவர்களாக, வறுமை நிலையில் சாதிய கொடுமைக்கு உட்பட்டவர்கள் இலகுவாக ஆள் திரட்டும் முகவர்களின் பசப்பு வார்த்தைகளுக்கு பலியாகி இலங்கையை நோக்கி நகரத் தொடங்கினர்.

இலங்கையின் சனத்தொகையில் ஒரு கூறாக உருவாகி வளர்ச்சி பெற்ற நிலையில் இந்திய வம்சாவழியினர் 1920ஆம் ஆண்டளவில் அரசியல் பிரதிநிநித்துவத்தை பெறத்தொடங்கினர். இந்த ஆரம்ப கால பிரதிநிதித்துவம் தோட்ட தொழிலாளர்களுக்கு அல்லாது வர்த்தக சமூகத்தினருக்கே மட்டுப்படுத்தப்பட்டதாக இருந்தது. தோட்ட தொழிலாளர்களை போல வர்த்தக நோக்கங்களுக்காகவும் குறிப்பிட்ட தொகையினர் இலங்கைக்கு குடிவந்தனர் என்பதும் அவர்கள் தொடர்ந்தும் இந்தியாவில் தங்களது தொடர்பினை மிக நெருக்கமாக பேணி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒப்பந்தங்கள் குறித்து பலத்த கண்டனங்கள் வெளியிடப்பட்டன. இவை மக்களின் கருத்துகளை அறியாமல் அவர்களது பிரதிநிதிகளோடு கலந்துரையாடாமல் அரசாங்க உயர் மட்டங்களில் தொகையளவின் அடிப்படையில் செய்யப்பட்டவை என எடுத்து காட்டப்பட்டன. இதன் அமுலாக்க நடைமுறை 7 பேர் இந்தியாவிற்கு குடியகன்றால் 4 பேர் இலங்கை குடியுரிமையைப் பெறுவர் போன்ற கட்டுப்பாடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு பலத்த பிரச்சினைகளை ஏற்படுத்தியது. புனர்வாழ்வு உதவிகள் குடும்ப அடிப்படையிலேயே வழங்கப்பட்டமையினால் பல குடும்பங்கள். பிளவுண்டன. விருப்பமின்றியே பலர் குடும்பமாக குடியகன்றனர். எவ்வாறாயினும் நாடற்றவர் என்ற நிலை நீங்கத் தொடங்கி 2003இல் இலங்கையில் வாழுகின்ற அனைவருக்கும் இலங்கை குடிஉரிமை வழங்கப்பட்டது. எண்ணிக்கை அடிப்படையில் ஒப்பந்தந்தின்படி, தீர்மானிக்கப்பட்டதற்கு மாறாக இந்தியாவிற்கு குறைந்தளவு எண்ணிக்கையினர் குடியகன்றதோடு ஒப்பீட்டளவில் அதிகமான எண்ணிக்கையானோருக்கு இலங்கை குடியுரிமை வழங்கப்பட்டது. 1984இற்கு பிற்பட்ட காலத்தில் கப்பற்சேவை உள் நாட்டு யுத்தம் காரணமாக தடைபட்டமையாலும் இலங்கையின் அரசியல் பரப்பில் இந்தியர்களின் வாக்குபலம் தேவை என்பதாலும் பறிக்கபட்ட குடியுரிமை மீளளிக்கப்பட்டது.ஒட்டு மொத்தத்தில் இந்திய வம்மசாவளி மக்களுக்கு ஒரு வகையில் சாதகமான நிலையில் இந்த நாடற்றவர் பிரச்சினை தீர்வுக்கு வந்தது.

அரசியல் பிரதிநிதித்துவம் (1920) சர்வசன வாக்குரிமை (1931) இனத்துவ அடிப்படையில் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டமை போன்ற காரணங்களினால் இந்தியர்களின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கத் தொடங்கியமையின் விளைவாக இந்தியர்கள் மீதான வெறுப்பு வளரத் தொடங்கியது. இதன் உயர்ந்தபட்ச குரலாக அமைந்தது இந்தியர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டுமென்பதாகும். இடது சாரி கட்சிகள் நீங்கலாக, பெரும்பான்மை இன கட்சிகள் அனைத்தினதும் ஒத்த குரலாக இது அமைந்திருந்தது. நிரந்தர வாழ்விட ஆர்வமின்றி இலங்கைக்கும் இந்தியாவிற்கும் பறந்து திரிகின்ற பறவைகளாக இவர்கள் பார்க்கப்பட்டதோடு இலங்கையிலிருந்து பணத்தை சம்பாதித்து இந்தியாவில் சேமிப்பு மற்றும் முதலீடு செய்ப வர்களாகவும் இவர்கள் கருதப்பட்டார்கள். இந்திய வர்த்தகர்களுக்கு இது பொருந்துமெனினும், தோட்ட தொழிலாள சமூகத்திற்கு இது பொருந்தாதவொன்றாகும். 1947இல் இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் ஏழு பேர் பாராளுமன்றத்தில் இம்மக்களின் பிரதிநிதிகளாக காணப்பட்டனர். சுதந்திர பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை குடியுரிமை சட்டத்தின்படி (1948) குடியுரிமையையும் தொடர்ந்து வாக்குரிமையையும் இழந்தனர். இந்திய பாகிஸ்தானிய வசிப்பிட குடியுரிமை சட்டத்தின்படி (1949) குடியுரிமை வழங்கு வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் இறுக்கமான கட்டுப் பாடுகள் காரணமாக குறைந்த எண்ணிக்கையினருக்கே குடியுரிமை கிடைத்தது. இதன் காரணமாக 1952இல் இடம்பெற்ற தேர்தலில் இந்தியர்கள் ஒருவரைக் கூட தெரிவு செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர். குடியுரிமைப் பிரச்சினையை தீர்ப்பத்தற்காக இரு நாடுகளுக்குமிடையே பல சுற்று பேச்சு வார்த்தைகள் இடம் பெற்றாலும் எவ்வித தீர்வும் எட்டப்படவில்லை. இறுதியில் நாடற்றவர்கள் என்ற புதிய சமூகம் பிரிவினர் தோற்றம் பெற்றனர்.

இந்த நாடற்றவர் நிலைமை காரணமாக இலங்கையில் வாழ்ந்த இவர்கள் ஒரு குடிமகனுக்குரிய உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாய் ஒரு தனி ஆளாக கருதப்பட்டனர். பாராளுமன்றத்தில், அரசாங்க செயற்பாடுகளிலிருந்து முற்றிலும் விலக்கப்பட்டனர். அரசாங்க அபிவிருத்தி திட்டங்களிலிருந்து ஒதுக்கப்பட்டவர்களாய் இச்சமூகம் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டது. நியமன பாராளுமன்ற பிரதி நிதித்துவம் 1960, 1965, மற்றும் 1970ஆம் ஆண்டுகளில் கிடைத்தாலும் 1977லேயே மக்கள் தெரிவின் மூலமாக ஒரு பிரதிநிதியை பெற்று கொள்ள முடிந்தது. இந்த அரசியல் பின்புலத்திலேயே 1964இல் பிரதமராகவிருந்த சிரிமாவோ பண்டாரநாயக்கவுக்கும் இந்திய பிரதமர் லால் பகதூர் சாஸதிரிக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் அடிப்படையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் படி அன்றைய நாடற்றவர்களின் எண்ணிக்கையான 975,000 பேரில் 525,000 பேர் இந்தியாவிற்கும் 300,000 பேர் இலங்கைக்குமென தீர்மானிக்கப்பட்டது. மீதமுள்ள 150,000 பேர் 1974ஆம் ஆண்டு பிரதமர்கள் சிரிமாவோ பண்டார நாயக்காவுக்கும் இந்திரா காந்திக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி சரிசமமாக பிரிக்கப்பட்டு நாடற்றோர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புனர்வாழ்வு திட்டம்**

தாயகம் திரும்பியோர் தொடர்பான விபரங்களின்படி 1984 இறுதி வரை 115,400 குடும்பங்களை சேர்ந்த 459,327 பேர் தாயகம் திரும்பியுள்ளனர். மொத்த குடும்பங்களில் 20,187 குடும்பங்கள் ரூபா 10,000 சொத்திற்கு மேற்பட்ட தொகையை இந்தியாவிற்கு எடுத்து செல்ல விரும்பினர் என்ற வகையில் புனர்வாழ்வு உதவிகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லை. ஏனைய 95,213 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு உதவிகள் வழங்கப்பட்டன. மொத்த்தில் 110,408 குடும்பங்கள் தமிழ்நாட்டிலும், 4992 குடும்பங்கள் வெளி மாநிலங்களிலும் மீள்குடியேற்றப்பட்டனர். இந்த உதவிகள் மூன்று பிரிவுகளாக வழங்கப்பட்டன. 1. கடன் திட்டம். 2.தொழில் வாய்ப்புகள் மற்றும் 3. காணி வழங்கல் திட்டம் ஆகியன அவையாகும். முதலாவதாது கடன் திட்டத்தில் 84%னரும் தொழில் வாய்ப்புகளின் கீழ் 13%னரும் காணித் திட்டத்தில் 3%னரும் உதவிகளைப் பெற்றனர். சொத்துக்களின் மதிப்பு, குடும்ப அளவு, திறன்கள் மற்றும் உளப்பாங்கு என்பவற்றை அடிப்படையாக கொண்டே புனர்வாழ்வு உதவிகள் தீர்மானிக்கப்பட்டன. இவற்றுள் அதிகம் விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் உட்பட்டது கடன் திட்டமாகும்.

இந்த கடன் திட்டத்தில் முக்கியமானது வியாபார கடனாகும். ஏறக்குறைய தாயகம் திரும்பிய மொத்த எண்ணிக்கையில் 69%மானவர்கள் ரூபா 5000/= பெறுமதியான வியாபார கடன் வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்டனர். முதல் தவணையாக ரூபா 3000/=ஆம் வியாபாரத்தில் கணிசமான முன்னேற்றத்தை காட்டினால் இரண்டாவது தவணையாக ரூபா 2000/= வழங்க திட்டத்தில் வசதி செய்யப்பட்டிருந்தது. இந்தக் கடன் திட்டத்தில், சுய உதவி திட்டம் என்ற வகையில் வங்கிகள் மூலமாக ரூபா 5000/= நிரந்தர வைப்பாக வைக்கப்பட்டு இதன்மூலம் சிறு முயற்சிக்களான கால்நடை வளர்ப்பு, சைக்கில் ரிக்ஷா போன்றவற்றிற்கு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டு, கடன் திருப்பி செலுத்தப்பட்டதன் பின்னர் 7 வருடங்களுக்கு பின்னர் வைப்புத் தொகை பயனாளிகளுக்கு மீளளிக்கப்பட வசதி செய்யப்பட்டது. காணித் திட்டத்தின் கீழ் 44 நிலக்காலனி திட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கப்பட்டன. நிலமற்றோருக்கு தனியாரின் விவசாய நிலங்களை வாங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டன. வேலை வாய்ப்புகள் திட்டத்தின் கீழ் தோட்டங்கள் நீலகிரி மாட்டத்தில் தேயிலை, கன்னியாகுமரி மாவட்டத்தில் இறப்பர், வால்பாறையில் சிங்கோனா போன்றவற்றின் பயிர்ச் செய்கைக்காக ஆரம்பிக்கப்பட்டு குடும்பத்திற்கு இருவர் என்ற அடிப்படையில் வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டு கூட்டுறவு நூல் ஆலைகளில் பலருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்பட்டன. தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி,வேலை வழங்கும் நிறுவனங்களுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கி வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன. அரச நூல் ஆலைகள், சீனி ஆலைகள், போக்குவரத்து கழகம், மத்திய மற்றும் பாரிய கைத்தொழில்களிலும் இத்தகைய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக வீடமைப்பு கடன், கல்வி மற்றும் பயிற்சி போன்றவையும் வழங்கப்பட்டன. அரசாங்க கல்லூரிகளில் பட்டப் படிப்பிற்காக மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற சில துறைகளில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. கல்வித்துறையைப் பொறுத்த வரை, புதுக்கோட்டை மாவட்டம் மாத்தூரில் வசிப்பிட வசதியுடன் கூடிய தாயகம் திரும்பிய சிறுவர்களுக்காக ஒரு விசேட பள்ளிக்கூடம் திறக்கப்பட்டது. தமிழ் மொழியில் படிக்க முடியாத, சொத்துக்கள் குறைவாக கொண்டுள்ள குடும்பத்தை சார்ந்த 6-14 வயதிற்கு உட்பட்ட இருபாலாருக்கும் அனுமதி வழங்கப்பட்டது. இவர்களுக்கு உணவு, உடை, மருத்துவ செலவுகள் என்பவை வழங்கப்பட்டன. 1984இல் இங்கு 800 பேர் வரை கல்வி கற்றனர். தமிழ் நாடு பொதுசேவை கமிஷன், ரயல்வே சேவை கமிஷன் போன்றவை நடாத்தும் பொதுத் தேர்வுகளில் வயது, தராதரம், பரீட்சைக் கட்டணம் போன்றவற்றில் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டன. கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறுவோர்க்கு உதவி தொகை வழங்கப்பட்டது.

அரசாங்க உதவி திட்டங்களுக்கு மேலதிகமாக அரச சார்பற்ற நிறுவனங்களும் பல உதவி திட்டங்களை அறிமுகப்படுத்தின. இவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அரச உதவிகளை பெற்று கொள்வதற்கு வசதி செய்வபவையாக அமைந்தன. சில தொழிற்சங்க அடிப்படையில் உரிமைகளுக்கு போராடுவனவாகவும் அமைந்தன. இவற்றில் 25க்கும் மேற்பட்ட அமைப்புக்களில் சில சமயம் சார்ந்தவையாகவும் காணப்பட்டன. இவை பிரதான நகரங்களில் செயற்பட்டதோடு அவற்றுள் சில கிளைகளை கொண்டதாகவும் அமைந்திருந்தன. இவைகளை ஒன்றுபடுத்தும் முயற்சிகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் அவை முற்றிலும் வெற்றி பெறவில்லை. இலங்கையில் தொழிற்சங்க அனுபவமிக்க பலர் இத்தகைய அமைப்புக்களை உருவாக்கி வழிநடாத்தினர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

**விளைவுகள்**

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்பட்ட புனர்வாழ்வு திட்டங்கள் முழுமையான பலன்களை தரவில்லை. வேலை வாய்ப்பு வசதிகள் குறிப்பிடத்தக்க அளவில் இம்மக்களின் வாழ்க்கை முறை மற்றும் தரம் என்பவற்றில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளன. தோட்டத் தொழிலாளர் என்ற அடைப்பிற்குள் ஓரே தொழிலை மையப்படுத்திய சமூகமாக இருந்த இச்சமூகம் தமிழ் நாட்டில் அரச துறை,போக்குவரத்து, வங்கிகள். நெசவாலைகள் என பல்வேறு துறைகளில் ஈடுபட வேண்டியேற்பட்டது. நிலக்காலனி திட்டம் எதிர்பார்த்த பலனை தருவதாக அமையவில்லை. கிராமங்களை அண்டி, நீர் வசதியற்ற நிலங்களில் இக்காலனிகள் அமைக்கப்பட்டமையால் இந்நிலங்கள் இவர்களுக்கு சொத்தாகவன்றி சுமையாக மாறின.

பாரிய தோல்வி கண்ட முறைமையாக அமைந்தது கடன் திட்டமாகும். தொழிலாளர் சமூகத்தை சிறு முயற்சியாளர்களாக மாற்ற முயன்ற இத்திட்டம் அவர்களது சமூக பண்புகளுக்கு, எதிர்பார்க்கைகளுக்கு ஏற்றதாக அமையவில்லை. சிறிய தொகை (ரூபா 3000/=) மற்றும் சொந்த நிதித்தேவை என்பவை காரணமாக பெரும்பாலார் இரண்டாவது தொகையை பெறுவதற்கு தகுதி பெறவில்லை. அதிகமானோர் திருச்சி, தஞ்சாவூர், சேலம், புதுக்கோட்டை, மதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற மாவட்டங்களில் தமது சொந்த கிராமங்களை அண்டிய பகுதிகளிலேயே குடியேறினர். இப்பிரதேசங்களின் கடும் வெப்பநிலை புனர்வாழ்வு உதவிகள் பயனளிக்காமை காரணங்களால் குளிர்பிரதே சங்களான நீலகிரி, கொடைக்கானல் போன்ற பிரதேசங்களுக்கு தொழிலாளர்களாக குடியகலத் தொடங்கினர். ஆரம்பத்தில் ஓரிடத்தில் குடியமர்ந்து பின்னர் அது நிலைபெறாத நிலையில் அங்கிருந்து இடம் பெயர்ந்து மலைப் பிரதேசங்களை நோக்கி குடியகன்ற கதையாகவே பலரது வாழ்வு அமைந்திருந்தது.

**சவால்கள்**

இம்மக்கள் தாயகம் திரும்பியோர் என்ற மரியாதைக்குரிய அந்தஸ்தோடு வாழ்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டாலும் உண்மையில் இதற்கு நேர் மாறான முறையில் தங்களது வாழ்வினை எதிர்நோக்க வேண்டிய நிலை பலருக்கு ஏற்பட்டது. இர.சிவலிங்கம் ''தாயகம் திரும்பிய மலையக தமிழர் போராட்ட வாழ்வின் ஆரம்ப பக்கங்கள்'' என்ற கட்டுரையொன்றில்[3] பல சவால்களை பதிவு செய்துள்ளார். ''சாதி வெறியால் இவர்களை தாழ்த்தி நடாத்துவதும் குறைந்த கூலி கொடுப்பதுவும், சுதந்திரமாக வீடுகளை கட்டி வாழ அனுமதி மறுப்பதுவும் காவல்துறையின் கெடுபிடிகளும் இம்மக்களுக்கு வேதனையான அனுபவத்தை தந்தது.'' 1991இல் ராஜீவ் காந்தியின் மறைவை தொடர்ந்து இந்தியாவில் அகதிகளாக வாழுகின்றவர்கள் தங்களை பதிவு செய்யும்படி கோரப்பட்டனர். இதேபோல் தாயகம் திரும்பியோரையும் அகதிகளாக கருதி அவர்களும் பதிவு செய்துகொள்ளுமாறு கோரப்பட்டனர். நீலகிரி மாவட்டத்தில் இதனை எதிர்த்து பதிவு செய்ய மறுத்த நூற்றுக்கனக்கானோர் சிறையில் அடைக்கப்பட்டனர். கொடைக்கானலில் இதற்கு எதிராக ஒரு குழுவினர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தபோது, இவர்கள் பதிவு செய்யவேண்டுமென தீர்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் இது மேன்முறையீடு செய்யப்பட்டு இந்த தீர்ப்பு மாற்றப்பட்டது. இந்தியர்களாக இருக்க வேண்டிய இவர்கள் கால்நூற்றாண்டு காலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையர்களாகவே கருதப்பட்டனர். இலங்கையில் இந்தியர்கள் இந்தியாவில் சிலோன்காரர்கள் என்ற நிலைமை காணப்பட்டது.

இந்த நிலை காரணமாக நீலகிரி மாவட்டத்தில் வீடமைப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பல சவால்கள் எதிர்நோக்கப் பட்டன. புனர்வாழ்வு திட்டம் மத்திய அரசாங்கத்தின் பொறுப்பாக இருக்க அதை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு மாநில அரசிற்கு ஒப்படைக்கப்பட்டது. வீடமைப்பிற்காக கடனை பெற்றுக் கொள்வதில் பல பிரச்சினைகள் எதிர்நோக்கப்பட்டன. நிலத்திற்கான் உரிமம் (பட்டா) பெற்று கொள்ளுதல், அதன் அடிப்படையில் கடன்பெறுதல் போன்ற செயற்பாடுகளில் ஒப்பந்தக்காரர்கள் தமது சொந்த பெயரில் அதிகார ஆவணத்தை (Power of Attorney ) எழுதிக் கொண்டமை பதிவு செய்யப்பட்டுள்ளது. ''காலி மனைகளும் கானல் நீராயின''[4] என்ற கட்டுரை பலரது அனுபவங்களை பதிவு செய்துள்ளது,வியாபார கடனை பெற்று கொள்வதில் தோல்வி கண்டதைப் போல வீடமைப்பு கடன் பெறுவதிலும் இவர்கள் பலத்த சோதனைகளையும் வேதனை களையும் எதிர்நோக்கினர். நிலத்தை பெறுதல், கடன்பெறுதல் மற்றும் வீட்டை நிர்மாணித்தல் வரை ஏமாற்றப்பட்டமை பலரின் அநுபவங்களாக பதிவு செய்யப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் குடிசை போடுவதற்கு நிலம் கொடுக்க மறுப்பு தெரிவிக்கப்பட் டுள்ளது. புறம்போக்கு நிலங்களில் அமைக்கப்பட்ட குடிசைகள் பொலிசாரின் கெடுபிடிகளால் தீக்கிரையாக்கப்பட்டன. நிலம்பெற்ற வர்களுக்கு காணி உரிமை (பட்டா) மறுக்கப்பட்டுள்ளது. பல போராட் டங்களுக்கு மத்தியில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டாலும் இன்னும். இது தொடர்ந்து செல்வதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.[5]

தமிழ்நாட்டைப்போல ஆந்திராவில் குடியமர்த்தப்பட்டோரின் அநுபவம் ஒன்றினை மு.சி.கந்தையா பதிவு செய்துள்ளார். மொழி தெரியாத காரணத்தினால் பல சிரமங்களை அநுபவித்தனர். ஆந்திரா ஓங்கூரில் நூல்நூற்பு வேலை வாய்ப்பு பெற்று சென்ற 91 பேர் அங்கு இருக்க முடியாது சென்னைக்கு திரும்பி வந்தமை சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.[6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடைக்கானல் கொத்தடிமை பிரச்சினை பலராலும் எடுத்துரைக்கப்பட்டவொன்றாகும். சவுக்கு மரங்களின் பட்டையை சீவி, அதனை உள்ளீடாக கொண்டு, டான் இந்தியா கம்பனி தோல் துணிகளுக்கு சாயமிடுதல் போன்ற பல வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டது. கொடைக்கானலில் இந்த தோல் அல்லது பட்டைகளை உரிப்பதற்காக தரகர்கள் மூலமாக புதுக்கோட்டை ராமநாதபுரம் போன்ற பகுதிகளிலிருந்து தாயகம் திரும்பியோர் அழைத்து செல்லப்பட்டு கொடைக் கானல் நகரிலிருந்து 30 மைல்களுக்கு அப்பால் பல கூப்புகள் (Coups) அமைக்கப்பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டு காலை முதல் மாலை வரை வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். உணவு, மருத்துவ செலவுகள் வழங்கப்பட்டு செலவுகள் அவர்களது கூலியிலிருந்து கழிக்கப்பட்டு அவர்கள் பெரும்பாலும் கடனாளிகளாக ஆக்கப்பட்டனர். கூப்புகளிலேயே அடைக்கப்பட்டு எவ்வித வெளித்தொடர்புமின்றி கொத்தடிமைகளாக வைக்கப்பட்டிருந்தனர் பின்னர் இவர்களின் விடுதலைக்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின்படி அவர்கள் விடுவிக்கப்பட்டனர். இதற்காக பல அமைப்புகள் போராடியமை பல நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.[7]

நீலகிரி மாவட்டத்தின் இன்னுமொரு பிரச்சினை அங்குள்ள உள்ளூர்வாசிகளான படுகர் இனத்தவரோடு ஏற்பட்ட முறுகல் நிலையாகும். புறம்போக்கு நிலங்களில் வீடமைத்தல், குடிசை போடுதல் போன்ற செயற்பாடுகளின் போது பலத்த முரண்பாடுகள் தோன்றின. தாயகம். திரும்பியோர், படுகர் இன சிறு விவசாயிகளிடமே தொழிலாளர்களாக வேலை செய்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. தாங்கள் வாழ்ந்த இடங்களில் தாயகம் திரும்பியோர் அமைத்த குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. அரச நிர்வாகம் உள்ளூர் வாசிகளுக்கு ஆதரவான நிலையில் தாயகம் திரும்பியோரை அகதிகளாக கணிக்கப்பட்ட நிலையில் பிரச்சினை தீவிரமடைந்தது.

இது குறித்து ஒத்த கருத்து நிலவவில்லை என்பதுவும் இங்கு குறிப்படத்தக்கது. ''அரசியல் அனாதைகளாய் நீலமலைத் திரும்பியோர்'' என்ற கட்டுரையில் சு. புஷ்பராஜ் படுக விவசாயிகளுக்கும் தாயகம் திரும்பிய தொழிலாளர்களுக்குமிடையே வேறுபாட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்க்கும் வண்ணம், மக்கள் மறுவாழ்வு மன்றத்தினரின் செயற்பாடு அமைந்திருந்தது என்ற விமர்சனத்தை முன்வைத்துள்ளார்[8]. அவர் மேலும் இந்த இரண்டு பிரிவினரும் அரசியல் அடிப்படையில் ஒன்று சேர வேண்டியவர்கள். இதனை இடதுசாரி அரசியல் வாதிகள் செய்யத் தவறி விட்டார்கள் எனவும், இந்த இடைவெளியை கொண்டு மக்கள் மறுவாழ்வு மன்றம் ஒரு அடையாள அரசியலை வெற்றிகரமாக செயற்படுத்தியது, எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**பதிவுகள்.**[9]

தாயகம் திரும்பியோர் பற்றிய எழுத்துக்கள் தொடர்ந்த வண்ண முள்ளன. ஆரம்பகாலத்தில் பல அறிக்கைகளாக ஆங்கிலத்தில் வெளிவந்தன. அந்த வகையில் 1976இல் வெளிவந்த தமிழ்நாட்டு பொருளாதாரத்தில் தாயகம் திரும்பியோரை உள்வாங்குதல் முதன்மை பெறுகிறது. இவற்றில் 1980இல் தாயகம் திரும்பியோர் பற்றிய ஓர் அளவீட்டு அறிக்கை முக்கியமானதாக அமைகிறது.

இவை கிறீஸ்தவ சமயம் சார்ந்தவை என்பது இங்கு குறிப்பிட தக்கது. தாயகம் திரும்பியோருக்காக ஆரம்பிக்கப்பட்ட IFPAAW மற்றும் UNI FRONT போன்றவற்றின் ஆண்டறிக்கைகள் பல தகவல் களை தருகின்றன. 1986இல் வெளிவந்த வர்த்தக வனவியலில் மானிட செலவு என்ற ஆய்வு அறிக்கையானது கொடைக்கானல் கொத்தடிமை களை மையப்படுத்தியதாக திகழ்கிறது. எம்.வாமதேவனின் தமிழ் நாட்டில் இலங்கை தாயகம் திரும்பியோரின் சமூக பொருளாதார நிலைமைகள் என்ற ஆய்வறிக்கை நோர்வே நாட்டின் நொராட் தாபனத்திற்கு 1987இல் சமர்ப்பிக்கப்பட்டது. இந்திய அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி, இவ்வறிக்கையின் பிரதி இந்திய அரசாங்கத் திற்கும் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் சுருக்க வடிவம் தமிழ்நாட்டில் இலங்கையின் தாயகம் திரும்பியோர் - புனர்வாழ்வும் ஒருங்கிணைதலும் - என்ற தலைப்பில் நூல்வடிவில் 1989இல் வெளிவந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை விட பல்கலைக்கழக மட்டங்களில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை பல்கலைக்கழகத்தில் 1984இல் ஆர் ராதாவின் இலங்கையின் தாயகம் திரும்பியோர் பற்றிய சமூகவியல் ஆய்வு முதுதத்துவமாணி பட்டத்திற்கும், எல்.வேதவள்ளியின் கோத்தகிரியில் இலங்கை தாயகம் திரும்பியோரின் சமூக பொருளாதார தோற்றம் என்ற மானுடவியல் ஆய்வு கலாநிதி பட்டத்திற்கும் 1988இல் சமர்ப்பிக்கப்பட்டன. வேதவள்ளியின் ஆய்வு நூலாக வெளி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் எம்.வாமதேவனின் தமிழ்நாட்டின் தாயகம் திரும்பியோரின் புனர்வாழ்வு : ஒரு மதிப்பீடு என்ற ஆய்வு கேரளா திருவனந்தபுரத்தின் அபிவிருத்தி கற்கை நிலையத்தினூடாக முதுதத்துவமாணி பட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது. கொடைக்கானலில் அமைந்துள்ள செராக் நிறுவனம் எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள் என்ற நூல் தமிழில் வெளிவந்தது. பண்புசார் ரீதியில் அமைந்த இந்த நூல் பலரதும் கவனத்தை ஈர்த்தவொன்றாக அமைந்தது. மற்றும் இந்த நூல் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இவைகளைத் தவிர பத்திரிகைகள், சஞ்சிகைகள் சிலவும் தமிழிலும், ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ளன. மக்கள் மறுவாழ்வு என்ற இதழ் சிக்கன்ராஜ் என்பவரால் 1980களில் வெளியிடப்பட்டது. இர.சிவலிங்கம் Exodus என்ற ஆங்கில இதழை 1980களில் ஐந்து ஆண்டுகளாக வெளியிட்டார். இவரது மக்கள் மறுவாழ்வு மன்றம் மூலமாக புனர்வாழ்வு பற்றிய தொகுப்பு ( Directory of Rehabilitation) ஒன்று வெளியிடப்பட்டது. பேராசிரியர் வி. சூரியநாரயணன் அவர்களால் இர.சிவலிங்கம், எம்.வாமதேவன், வீ. சூரிய நாராயணன் ஆகிய மூவரின் கட்டுரைகளை உள்ளடக்கிய நூலொன்றை இலங்கையின் தாயகம் திரும்பியோரின் புனர்வாழ்வு - ஒரு விம்ர்சனம் மதிப்பீடு 1986இல் ஆங்கிலத்தில் சென்னை பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டது. இதில் எம். வாமதேவனின் கட்டுரை அவரது நூலான 'மலையகம் சமத்துவத்தை நோக்கி' என்ற தமிழ் நூலில் இணைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2014இல் தமிழ் காவிரி என்ற இதழ் தாயகம் திரும்பியோர் சிறப்பு இதழாக வெளிவந்துள்ளது. இதன் ஆசிரியர் தமிழகன் மலையகமும் மறுவாழ்வும் என்ற கட்டுரை தொகுப்பு நூலொன்றினை 2020இல் வெளியிட்டுள்ளார். இதில் மறுவாழ்வு பற்றிய பயன்தரும் பல தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2015இல் வெளியிடப்பட்ட மு.சி. கந்தையாவின் சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள் என்ற நூலில் தாயகம் திரும்பியோர் பற்றிய பகுதியொன்று உள்ளடக்கப் பட்டுள்ளது. இந்நூல் 2022இல் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**தற்போதைய நிலை**

தாயகம் திரும்பியோர் நிலை 1983க்குப் பின்னர் இலங்கையின் இன கலவர நிலை காரணமாக ஏற்பட்ட அகதிகளின் குடியகல்வு புதிய ஒரு பரிமாணத்தை பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது. 2016இல் இந்திய குடியுரிமை சட்டத்தின் திருத்த மசோதா இந்திய பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டதை தொடர்ந்து தமிழகத்தில் தற்போது அகதிகளாக இருப்போரின் நிலை பலரின் கவனத்தை ஈர்த்தது. இங்கு முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியது, ஒரு இலட்சம் அகதிகளில், முப்பது ஆயிரத்திற்கு கிட்டிய எண்ணிக்கையினர் இந்திய வம்சாவழியினராக இருந்தமையாகும். இவர்கள் மலையகத்தை சார்ந்தவர்களாய் 1977இல் இனக்கலவரச் சூழ்நிலை காரணமாக, இலங்கையின் வடமாகாணத்து வன்னிப்பிரதேசத்திற்கு குடிபெயர்ந்து அங்கிருந்து தமிழ் நாட்டிற்குச் சென்று குடியேறியவர்களாக இருந்தனர். இந்த குடியுரிமை திருத்த மசோதா பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், நேபால் போன்ற நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு குடியேறிய முஸ்லீம் அல்லாதவர்களுக்கு குடி உரிமை வழங்கும் நோக்கம் கொண்டது. இந்த திருத்த மசோதாவில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு வந்து அகதிகளாக குடியேறியவர்களையும் சேர்க்க வேண்டும் என்பதே கோரிக்கையாக அமைந்தது. இந்த கோரிக்கை இந்திய தரப்பில் ஏற்று கொள்ளப்படவில்லை.இவர்களை நாடற்றவர்களாக கருதி 1964 மற்றும் 1974இல் இரு நாடுகளிடையே செய்து கொள்ளப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தத்தின்படி ஏற்றுகொள்ளப்படவிருந்த எண்ணிக்கையில் ஒரு குறைவு காணப்பட்டமையால் இந்த குறைவினை இந்திய அகதிகள் ஈடு கட்டலாம் என்ற வாதமும் முன்வைக்கப்பட்டது. 1984க்குப்பின்னர் ஒப்பந்த அடிப்படையில் இந்திய குடியுரிமை பெற்று இந்தியாவிற்கு வர முடியாத அனைவரும் இலங்கை குடியுரிமை சட்டத்தின் 2003ஆம் ஆண்டு திருத்தத்தின்படி இலங்கை குடிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டு நாடற்றவர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது. அத்தோடு இலங்கை அகதிகளை இலங்கையில் மீள்குடியேற்றுவதறகு 1987களிலிருந்து பல முயற்சிகள் செய்யப்பட்டன. எனினும் அவை எதிர்பார்த்த பலனை தரவில்லை. தற்போதைய பொருளாதார சூழ்நிலை அகதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதாக அமைந்துள்ளது. சமீபத்திய சில நீதிமன்ற தீர்ப்புகள் 1986ஆம் ஆண்டிற்கு முன்னர் இந்தியாவில் பிறந்தவர்களுக்கு குடியுரிமை பெற்று கொள்ள ஏற்பாடுகளை செய்தாலும் இதனால் ஏற்படக்கூடிய எண்ணிக்கை அதிகமாக அமைய வாய்ப்பில்லை. ஏனெனில் அதிகமான எண்ணிக்கை யினர் 1983ஆம் ஆண்டு கலவரத்தை தொடர்ந்து வந்தவர்கள். இப்பிரச் சினை குறித்து பேராசியர் வீ. சூரியநாராயணன், மு.சி.கந்தையா எஸ்.இஸட்.ஜெயசிங் போன்றவர்கள் தமது எழுத்துகளின் மூலம் குரல் எழுப்பி கொண்டிருந்தாலும் இதற்கான தீர்வை நோக்கிய முன்னேற்றம் குறைவானதாகவே காணப்படுகிறது.

## முடிவுரை

நிறைவாக, தாயகம் திரும்பியோரின் புனர்வாழ்வு உதவிகள் எவ்வளவு காலம் நீடிக்கும். இவர்களது அடையாளம் தொடர்ந்து பேணப்பட வேண்டுமா என்ற வினாக்கள் எழும்புகின்றன. ஆரம்ப காலத் தில் இந்த உதவிகள் 15 ஆண்டுகளுக்கு மட்டுப்படுத்தப்படுமென தெரிவிக்கப்பட்டது. இது பின்பற்றப்படுமாக இருந்திருந்தால் 2000 ஆண்டளவில் இவ்வுதவிகள் முற்றுப்பெற்றிருக்க வேண்டும். ஆனால் 20 ஆண்டுகளுக்கு மேலாக இந்த உதவிக்கான குரல் ஒலித்து கொண்டே இருக்கிறது. குறிப்பாக, வீட்டுக் கடனைப் பெற்றுக் கொள்ள முயன்றவர்கள், தங்களது பத்திரங்கள், குடும்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டை, கடவுச்சீட்டு போன்றவற்றை இழந்த நிலையில் இன்னும் உதவிக்கரம் ஏந்திய நிலையில் உள்ளனர். இத்தகைய குறிப்படத்தக்க விடயங்கள் இனங்காணப்பட்டு அதற்கான தீர்வுகளுக்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும். தாயகம் திரும்பியோர் என்ற அடையாளம் தொடர்ந்து மறைந்து செல்லும் போக்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இந்திய குடிமகனாக ஏற்றுக் கொள்ளப்பட்டு தங்களது சகல உரிமைகளையும் ஏனைய சமூக பிரிவினருக்கு சமமான நிலையில் அனுபவிக்கின்ற நிலையில் இந்த அடையாளம் இல்லாது போகலாம். அரசியல் அரங்கில் இந்திய பாராளுமன்றத்தில் தாயகம் திரும்பியோரின் வழித்தோன்றல்களான, ஏ. ராஜா நீலகிரி தொகுதியின் பாராளுமன்ற பிரதிநிதியாகவும் கூடலூர் சட்டமன்ற தொகுதியின் உறுப்பினராக பொன்.ஜெயசீலன் 2021இல் தெரிவு செய்யப்பட்டமை அரசியல் உரிமைகளை அனுபவிக்கின்ற போக்கை வெளிப்படுத்துவதாக உள்ளது. நிறுவனரீதியான அடையாளத்தை கொண்டிருப்பது ரெப்கோ (Repatriates Cooperative Bank) நிறுவனமாகும்.இது ஆரம்ப காலத்தில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு உதவி புரிவதாய் அமைந்து பின்னர் வணிக வங்கியாக செயற்பட தொடங்கியது. இதன் செயற்றிட்டங்கள் தாயகம் திரும்பியோரின் நலத்திட்டங்களையும் உள்ளடக்குவதாக உள்ளது. ஏறக்குறைய மொத்த நிதியில் 2%மான தொகையே இந்நலத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலையில் அதனது செயற்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையை புரிந்துகொள்ள முடிகிறது. ஓர் உத்தியோக பற்றற்ற மதிப்பீட்டின்படி தாயகம் திரும்பியோரின் எண்ணிக்கை 20 இலட்சமாக காணப்படுகிறது. இது அதிகமாக அமைந்திருந்தாலும் 85%மானவர்கள் தமிழ் நாட்டிலும் 15%மானோர் ஆந்திரா, கர்நாடகா, கேரளா, உள்ளிட்ட வேற்று மாநிலங்களில் வாழுகின்றனர். தமிழ்நாட்டில் வாழ்வோரில் 12%மானோர் நீலகிரி மாவட்டத்தில் செறிந்தும் மிகுதி 73%மானோர் ஏனைய மாவட்டங்களில் சிதறியும் வாழுகின்றனர். இவர்களது வாழ்விடங்களுக்கேற்பவே இவர்கள் எதிர்நோக்கும் சவால்களும் அமைந்துள்ளன. தமிழ்நாட்டிற்கு அப்பால் வெளி மாட்டங்களில் வாழ்வோர் பற்றிய தகவல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமளவிற்கு பதிவு செய்யப்படவில்லை. இது குறித்தும் ஒட்டு மொத்தமாக அனைவரினதும் தற்போதைய நிலை குறித்து ஆய்வு ஒன்றின் தேவை குறித்து பலராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்திய சமூகத்தில் குறிப்பாக இலங்கை தாயகம் திரும்பியோரின் ஒன்றிணைதல் (Integration) மொழி, பண்பாட்டு சூழல் போன்ற காரணங்களால் துரிதமாக இடம்பெற்று, தமிழ்நாட்டில், தமது அடையாளத்தை இழந்து ஒன்றுகலத்தல் (Assimilation) போக்கும் இடம் பெறுவதற்கு வாய்ப்புகள் அதிகமுள்ளன.

### குறிப்புகள்

1. வெசும்பெருமா, டி., (1979) ஒப்பந்த பிணைப்பில்லாத வெளிநாட்டில் இந்தியர்கள், பிரிட்டிஸ் இலங்கையில் தோட்டத்தொழிலாளர், ஹீயூ டிங்கர், 1974 அடிமைத்தனத்தின் புதிய முறைமை, வெளிநாடுகளுக்காக இந்திய தொழிலாளர்களின் ஏற்றுமதி, 1830-1920
2. சடகோபன் ஆர்., (2016) கண்டிச் சீமையில், மு. சிவலிங்கம் (2015) பஞ்சம் பிழைக்க வந்த பூமி, தமிழ் மகன் (2012), வனசாட்சி, மாத்தளை சோமு (2018) கண்டிச்சீமை.
3. இர.சிவலிங்கம் மலையக சிந்தனைகள் 2001 பக்கம் 78.
4. தமிழ் காவிரி - தாயகம் திரும்பியோர் சிறப்பிதழ் 2014 பக்கம் 7.
5. அதே.
6. மு.சி. கந்தையா - சிதைக்கப்பட்ட மலையகத்தமிழர்கள். 2015..பக்கம் 199
7. எம்.வாமதேவன் - தமிழ்நாட்டில் இலங்கை தாயகம் திரும்பியோர் 1989, பக்கம் 143

   ஆர்.வித்தியாசாகர் - வர்த்தக வனவியலின் மனித செலவு. 1986.
8. தமிழ்காவிரி, தாயகம்திரும்பியோர், 2014, பக்கம் 24.
9. தாயகம் திரும்பியோர், ஆவண அட்டவணையை பார்க்கவும்.

   தாயகம் திரம்பியோர் குறித்த ஆவணங்கள்

### அறிக்கைகள் (ஆங்கிலத்தில்)

1. Absorption of Srilanka Repatriates in Tamil Nadu.Institute for Techno Economic Studies,Madras 1976.
2. A Report on the Survey of Repatriates from SriLanka,Centre for Research onNew International Economic Order.Madras 1980.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. M.Vamadevan, Socio Economic Conditions of Sri Lankan Repatriates in Tamil Nadu(1984-1986) Report submitted to NORAD and Govt of India,1987.
4. Annual Reports of IFPAAW,UNIFRONT, and UFFR.1980s

## நூல்கள் (*ஆங்கிலத்தில்*)

CERAC,Alienated Everywhere, Kodaikanal, 1989.

L.Vedavalli,Socio Economic Profile of Srilankan Repatriates in Kotagiri 1994.

M.Vamadevan,Srilankan Repatriates I Tamil Nadu.1989.

V.Suriyanarayanan, Rehabilitation of SriLankans Repatriates. A Critical Appraisal Monograph7, University of Madras 1986.

Exodus Magazine published in 1980s

## நூல்கள் மற்றும் இதழ்கள்

*செராக் நிறுவனம், (1984) எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டவர்கள்.*
*தமிழகன், (2018) மலையகமும் மறுவாழ்வும், கட்டுரைத் தொகுப்பு.*
*தமிழ்க்காவிரி, (2014) தாயகம் திரும்பியோர் சிறப்பிதழ்.*
*மக்கள் மறு வாழ்வு, 1980களில்.*
*ஜோதிகுமார், எல்., (2022) பிளம்ஸ் மரங்களும் சடை சவுக்குகளும்.*
*என் கொடைக்கானல் மனிதர்கள்.*

*தஞ்சை பல்கலைக்கழகத்தில், 2022 டிசம்பரில் நடைபெறவிருந்த மலையக இலக்கிய மாநாடொன்றில், வெளியிடப்படவிருந்த சஞ்சிகை ஒன்றிற்காக எழுதப்பட்ட கட்டுரை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



4

# தோட்டத்துறையின் உருவாக்கமும் இந்தியத் தமிழரும்

## அறிமுகம்

இலங்கையில் தோட்டத்துறையின் அறிமுகத்தோடு இணைந்து கொண்ட இந்திய தமிழர்கள் குறித்து தற்போது மலையகம் 200 என்ற மகுடத்தில் பலதளங்களிலும் பல மட்டங்களிலும் பேசப்பட்டு வருகிறது. 1823ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சி காலத்தில் தோட்டப் பயிர்ச் செய்கை ஆரம்பிக்கப்பட்டபோது உழைப்பு என்ற உற்பத்தி காரணியாக அறிமுகமான இவர்கள் ஆரம்பத்தில் கூலிகளாக அடையாளப்படுத்தப்பட்டு, பின்னர் தொழிலாளர் சமூகமாக உருமாறி, இந்திய தமிழர்களாக அறியப்பட்டு தற்போது மலையகத் தமிழர்களாக அடையாளப்படுத்தப்படுகிறார்கள்.

மலையகம் 200 என்று நினைவு கூரப்படும் இக்காலப்பகுதியில் (1823-2023) இம்மக்கள் குழுவினரின் வருகை, அவர்களை தோட்டத் துறை எந்தளவிற்கு பாதித்தது அதன், விளைவாக ஏற்பட்ட சமூக, பொருளாதார, அரசியல் விளைவுகள் யாவை? என்பது பற்றி கலந்துரையாடுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தோட்டத்துறை

பிரித்தானியர் தங்களது ஆட்சியை நிலை நிறுத்திய உடனேயே பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபாடு காட்டத்தொடங்கினர். முதலாவது பரீட்சார்த்தம் கோப்பி பயிர்ச்செய்கையாகும். பொருத்தமான நிலம் உள்நாட்டில் கிடைக்க, தேவையான மூலதனம் வெளிநாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து கிடைக்கக்கூடியதாகவிருந்தது. உழைப்பு (Labour) என்ற உற்பத்தி காரணியை உள்நாட்டில் பெற்றுக்கொள்ள எடுத்த முயற்சிகள் தோல்வி காண, ஏனைய நாடுகளை நாட வேண்டியிருந்தது. சீனா பொருத்தமில்லாது போகவே, அண்டைய நாடான இந்தியா இதற்குப் பொருத்தமானதாக அடையாளம் காணப்பட்டது.

அந்த வகையில் 1823இல் ஆரம்பிக்கப்பட்ட கோப்பி பயிர்ச் செய்கைக்கு தேவையான தொழிலாளர்கள் தென்னிந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டதைத் தொடர்ந்து தோட்டத்துறையை நோக்கிய இந்தியரின் வருகை ஆரம்பித்தது. கோப்பிப் பயிர் 1860கள் வரை இலாபமீட்டும் பயிராக அமைந்து பின்னர் ஏற்பட்ட நோய் காரணமாக உற்பத்தியாளர்கள் அதனை கைவிட்டு தேயிலை பயிர்ச்செய்கையில் ஈடுபடலாயினர்.

கோப்பிப் பயிரச்செய்கை ஒரு பருவகால நடவடிக்கையாக அமைந்தமையினால் தொழிலாளர்கள் நிரந்தரமாக தேவைப்பட வில்லை. எனவே கோப்பிப் பயிர்ச் செய்கைக்காக வருகை தந்தவர்கள் பெரும்பாலும் ஆண்களாகவே இருந்தனர். குடும்பங்களாக அவர்கள் வராததோடு கோப்பி நடுகை முடிந்ததன் பின்னர் அவர்கள் தாய்நாட்டிற்கே திரும்பிச் சென்றனர். இதனால் ஒரு நிலையான தொழிலாளர் படை உருவாவதற்கு வாய்ப்புக்கள் அமையவில்லை. ஆனால் தேயிலை உற்பத்தி ஆரம்பித்ததன் பின்னர் நிலைமை மாறத் தொடங்கியது.

### தேயிலை பயிர்ச் செய்கையும் நிரந்தர தொழிலாளர்களுக்கான தேவையும்

1860க்கு பின்னரான காலப்பகுதியில் தேயிலை பயிர்ச் செய்கையோடு ஒரு நிரந்தர தொழிலாளர் சமூகம் உருவாகத் தொடங்கியது. தேயிலை ஒரு தோட்டம் என்ற ஒரு அமைப்பு முறைமையின் கீழேயே உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. தோட்டம் என்பது ஒரு முழுமையான நிறுவன மாகும். இது ஏற்றுமதி பயிரொன்றை தொடர்ந்து அதிக அளவிலான திறனற்ற தொழிலாளர்களைக் கொண்டு நெருக்கமாக மேற்பார்வை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதன் மூலமாக உற்பத்தி செய்கின்ற முறைமை என பெக்பேர்ட் (G.L. Beckford) என்பவர் வரைவிலக்கணப்படுத்தியுள்ளார். இந்த வரைவிலணக்கத்திலிருந்து பல அம்சங்களை உய்த்துணரலாம்.

அதிக எண்ணிக்கையிலான திறனற்ற தொழிலாளர் தொடர்ந்து வேலையில் ஈடுபட வேண்டும். இதனால் இவர்களுக்கு குறைந்த கூலியே வழங்கப்பட்டது. அதிக எண்ணிக்கையானவர்கள் தொடர்ந்து தேவைப்பட்டதால் அவர்கள் தோட்டத்திலேயோ அல்லது தோட்டத்திற்கு அருகாமையிலேயோ வசிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதனால் இவர்கள் வசிப்பிடத் தொழிலாளர்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர்.

நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டிய நிலை காணப் பட்டமையினால் ஒரு அதிகார ஒடுக்கு முறைமை உருவாக வழி வகுத்தது. இந்த உற்பத்தி முறைமையை ஒரு இராணுவ விவசாயம் எனக் கூட சில ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலதிகாரிகளுக்கு கட்டுப்படுதல் ஒரு முக்கிய அம்சமாக பரிணமித்தது.

வசிப்பிட தொழிலாளர்கள் என்பதால் இவர்களுக்கு இலவச வசிப்பிடங்கள் வழங்க வேண்டிய தேவை உருவானது. வீட்டு வசதி, சுகாதாரம், மருத்துவ வசதி, குழந்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, கல்வி வசதிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டன. தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களை தொட்டிலிருந்து சுடுகாடு மட்டும் பாதுகாப்பதாக பெருமைப்பட்டு கொண்டது, இதனது முக்கிய விளைவு, இந்த சமூகம் முற்று முழுதாகவே, ஒரு தங்கியிருக்கும் கலாசாரத்திற்கு உட்பட்டு சுயமாக செயலாற்றக் கூடிய நிலையை இழந்திருந்தது.

அந்த வகையில் தோட்டங்கள் ஒரு அடைபட்ட பொருளாதாரமாக உருவம் பெற்றதோடு சமூக ரீதியாகவும் ஏனைய துறைகளோடோ, சமூகங்களோடோ தொடர்பில்லாது, தனிமைப்பட்ட நிலையில் வாழத்தொடங்கினர். வெளியார் தோட்டங்களுக்கு உள் நுழைவது அங்கீகரிக்கப்படவில்லை, அதேபோன்று தமது தோட்டங்களை விட்டு வேறு இடங்களில் வேலை தேடிச் செல்லும் சுதந்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு இருக்கவில்லை. வேலையை விட்டு விலகி சென்றால் தொழிலை இழக்கக்கூடிய அபாயம் நிலவியது.

இந்த பின்புலத்தில் இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட முறைமையும் தோட்ட முறைமையில் காணப்பட்ட அடக்குமுறைமைக்கு வலு சேர்த்தது. இதனாலயே தோட்ட முறைமை அடிமை முறைமைக்கு ஒத்த ஒன்றாக விளங்கியது என குமாரி ஐயவர்தன மற்றும் ரிச்சேல் குரியன் (2015) போன்றோர் குறிப்பிட்டுள்ளனர். இக்காலகட்டத்தில் தென்னிந்தியாவில் காணப்பட்ட வரட்சி, வறுமை, சாதிக்கொடுமை என்பன இந்த மக்களை அங்கிருந்து இலங்கைக்கு தள்ளுகின்ற காரணிகளாக (Pushing factors) செயற்பட இவர்களை அழைத்து வருவதற்குப் பொறுப்பாகவிருந்த முகவர்கள் குறிப்பாக கங்காணிகள் இலங்கையின் நிலைமையை மிகவும் பிரகாசமான தோற்றத்தை காட்டினர்.

நல்ல கூலி, இலவசமான வீட்டு வசதிகள், மருத்துவ வசதிகள் இலவச குழந்தை, சிறுவர் பராமரிப்புகள், போக்குவரத்திற்கான முற்பணம் என்பன, இவர்களை இழுக்கின்ற காரணிகளாக (Pulling factors) செயற்பட்டன. ஆள் திரட்டலோடு அவர்களை தோட்டங்களிலேயே தங்க வைக்கின்ற செயற்பாட்டில் பிரதான பங்கு வகித்தவர்கள் கங்காணிகளாவர். இவர்கள் தோட்ட நிர்வாகிகளுக்கும் தொழிலாளர்களுக்குமிடையே தொடர்பாடலாளர்களாக செயற்பட்டமை அவர்களது பலத்தை மேலும் பெருக்கியது. ஒவ்வொரு தோட்டத்திலும் உருவாகிய பெரிய கங்காணிகள் சில்லறை கங்காணிகளும், தொழிலாளர்களின் வாழ்வியல் அம்சங்களிலும் சம்பந்தப்பட்டு அவர்களது சுகதுக்கங்களிலும் பங்கு பற்றினர்.

அவ்வப்போது அவர்களுக்கு ஏற்படும் நிதித் தேவைகளை நிறைவேற்ற கடன் கொடுப்பவர்களாகவும் இவர்கள் செயற்பட்டனர். இத்தகைய செயற்பாடுகள் காரணமாக பெரிய கங்காணிகள் சக்தி உள்ள வர்களாகவும் பணரீதியாக செல்வாக்குள்ளவரகளாகவும், தோட்டங்களை கொள்வனவு செய்யுமளவிற்கு செல்வந்தர்களாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறினர். தோட்டங்களில் நீண்டகாலமாக தொழிற்சங்கங்கள் உருவாவதற்கு பிரதான தடையாக இருந்தவர்கள் இவர்களேயாவர்.

**சமூக உருவாக்கம்**

இத்தகைய நிலைமைகள் கிட்டத்தட்ட ஒரு நூற்றாண்டு காலம் நிலவியதெனலாம். 1920க்கு பின்னரேயே இவர்கள் ஒரு தொழிலாளர் சமூகமாக உருப்பெறத்தொடங்கினர். இக்காலப்பகுதியில் சட்ட சபைக்கு இன ரீதியாக பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டபோது இந்தியத் தோட்டத்தொழிலாளர்களுக்கு பிரதிநிதித்துவம் மறுக்கப்பட்டது. இவர்கள் இந்த நாட்டின் குடிமக்கள் அல்ல என்ற வாதமே இவ்வாறு மறுக்கப்பட்டமைக்கான காரணமாக அமைந்தது. அரசியல் பிரதிநிதித்துவம் இந்தியர்களுக்கு வழங்கப்படக்கூடாது என்பதில் உள்நாட்டு அரசியல் தலைவரகள் மிக மும்முரமாக செயற்பட்டனர்.

இந்த எதிர்ப்பின் உச்சம் இந்தியர்கள் அனைவரையும் நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டும் என்ற குரலாக அமைந்தது. எனினும் இதுகுறித்து காரசாரமான விவாதம் இடம்பெற்ற நிலையில் 1931இல் டொனமூர் யாப்பு சீர்திருத்தத்தின் படி வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமை, இந்திய தோட்ட தொழிலாளர்கள் உட்பட அனைவ ருக்கும் வழங்கப்பட்டது. இது அன்றைய உள்நாட்டு சிங்கள தலை வர்களுக்கு ஏற்புடையதாக அமையவில்லை. இந்த வாக்குரிமை வழங்கப்பட்டதன் விளைவாகவே, 1946ஆம் இடம்பெற்ற பராளுமன்ற தேர்தலில் இந்திய வம்சாவளியினர் 7 பேரை தெரிவு செய்யக் கூடிய நிலைமை உருவானது. டொனமூர் யாப்பின் படி உருவான அரசாங்க சபையிலும் மூவர் பிரதிநிதித்துவம் பெற்ற அதேவேளை ஒருவர் மந்திரி சபையிலும் இடம் பெற்றார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசியல் ரீதியாக இத்தகைய வளர்ச்சி ஏற்பட்ட அதே வேளை பொருளாதார ரீதியாக இவர்களுக்கான எதிர்ப்பு மிகவும் வலுவான நிலையில் காணப்பட்டது. அரசாங்கம் கையகப்படுத்திய நிலத்தை விற்பனை செய்த போது இந்தியர்களுக்கு வழங்கப்படுவது மறுக்கப் பட்டது. தோட்டத்தொழிலாளர்கள் தோட்டங்களில் வசிக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கிய காலம் முதல் சிங்கள கிராமிய மக்களின் நிலங்களை அந்நியர்கள் பறித்துவிட்டனர் என்ற நிலைப்பாடு அன்றைய அரசியல் தலைவர்களிடம் காணப்பட்டது.

உண்மையில் இந்த காட்டு நிலங்கள் கிராமத்தவர்களுக்கு சொந்தமானதாக இல்லாதிருந்தும் இவர்களின் சனத்தொகை விரிவிற்கேற்ப கிராமங்களின் விஸ்தரிப்பின் போது இது இவர்களுக்கு சொந்தமாகும் என்ற நிலைப்பாடே காணப்பட்டது. அரசியல் நிலையில் அபிவிருத்தி ஏற்பட்டு சுதந்திரத்திற்கு பின்னர் வீழ்ச்சி கண்டாலும் காலப்போக்கில் இழந்த உரிமைகளை படிப்படியாக பெறக்கூடிய நிலை உருவானது. ஆனால், நிலவுரிமையை பொறுத்த வரையில் தோட்ட தொழிலாளர்களுக்கு அது தொடர்ந்து மறுக்கப் பட்டே வந்துள்ளது.

**தோட்டத்துறை சாராத இந்தியர்கள்**

இலங்கை வந்த இந்தியர்கள் எனும் போது அதிக அளவில் தோட்டத் தொழிலாளர்களையே அது குறித்தாலும் தோட்டத்துறை சாராத இந்தியர்களும் கணிசமான எண்ணிக்கையில் இங்கு வந்துள்ளனர் என்பதுவும் குறிப்படத்தக்கதாகும். பெரும்பாலும் இவர்கள் வியாபாரம் மற்றும் பல்வேறு துறைகளில் ஈடுபடுவதற்காக வந்துள்ளனர். கோப்பி பயிர்ச்செய்கை ஆரம்பிப்பதற்கு முன்னரேயே இவர்களது வருகை ஆரம்பித்துள்ளது.

பிரித்தானியர் 1818 இல் இடம்பெற்ற உள்நாட்டு கலவரத்தை அடக்குவதற்காக 5000 பேரை இந்தியாவிலிருந்து அழைத்துள்ளனர். இதைவிட புகையிரத பாதை மற்றும் பொதுபாதைகள் கட்டுமானம், கொழும்பு துறைமுக நிர்மாணம் என்பவற்றிற்காகவும் இந்தியர்கள் இங்கு வந்துள்ளனர். கோப்பி ஒரு பருவகால பயிர் என்பதால் தோட்டங்களில் வேலை இல்லாதபோது இவர்கள் இத்தகைய பணிகளில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். 1936 காலப்பகுதியில் இந்தியாவில் பொருளாதார பிரச்சினைகள் உருவாகியபோது அதிலிருந்து மீட்சிப் பெற பலர் இலங்கை வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சோ.சந்திரசேகரம் தனது 'இலங்கை இந்திய வரலாறு' என்ற நூலிலே என்.கே. சர்க்கார் அவரது இலங்கையின் சனத்தொகை 1957 என்ற நூலை சான்றாதாரம் காட்டி பல புள்ளிவிபரங்களை தந்துள்ளார். 1933 -1935 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில், மொத்தமாக 224,660 பேர் இலங்கை வந்துள்ளனர். இவர்களில், நேரடியாக தோட்டத்தொழிலாளர்களாக வந்தவர்கள் 5,454 பேர் மாத்திரமே ஆவர். ஏனையவர்கள் பல தொழில்களுக்காக வந்துள்ளனர். இவர்களை விவசாயத்தொழில்கள் அல்லாத தொழில்கள் , வர்த்தகம், போக்குவரத்து, பொருட்கள் தயாரிப்போர், அரசாங்க சேவை, ஆசிரியர்கள், நடிகர்கள், இசை கலைஞர்கள், மற்றும் பிற தொழில்களுக் காகவே, இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் வந்துள்ளனர்.

இவர்களில் வர்த்தகம் போக்குவரத்திற்காக வந்த 121, 218 பேரில் கடை சிப்பந்திகள் 41,589 பேரும், வர்த்தகர்கள் 76,947 பேரும் அடங்குவர். எனினும, 1946ஆம் ஆண்டு தோட்டத்தில் தொழிலாளர்க ளாகவும் அவர்களில் தங்கி வாழ்ந்தவர்களுமாக மொத்தம் 665,000 பேர் காணப்பட 1943இல் நகர்ப்புறத் தொழில்களில் (அரசாங்கம், வர்த்தக துறைகளில்) நாட் சம்பளம் பெறுவோர் தொகை 160,000 ஆக காணப்பட்டது. சுதந்திரத்திற்கு பின்னர் நகர்புறத் தொழிலில் ஈடுபட்டிருந்த இந்தியர்களின் தொகை, கணிசமான அளவு குறைய நேரிட்டது. தோட்டத்துறை சாராத இந்தியர்கள் பெருமளவிற்கு இலங்கையில் உறுதியற்ற தொடர்புகளை கொண்டிருந்தனர் (சந்திர சேகரம், 2001).

இந்தியர்கள், இலங்கையின் தோட்டங்கள் அமைந்திருந்த மலைப்பகுதியான மாவட்டங்களான நுவரெலியா, கண்டி, மாத்தளை, பதுளை மொனராகலை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி, மாத்தறை, களுத்துறை போன்ற மாவட்டங்களில் மாத்திரமல்லாது ஏனைய மாவட்டங்களான கொழும்பு, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டகளப்பு, யாழ்ப்பாணம், ஆகிய மாவட்டங்க ளிலும் தற்போது கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களிலும் வாழ்கின்றனர். ஆரம்பத்தில் தோட்டத்துறைக்கு அப்பால் தொழிலைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடி வந்தவர்கள் பிற மாவட்டங்களில் தொழில் தேடிச்செல்ல 1958 தொடக்கம் 1977, 1983 ஆகிய ஆண்டுகளில் இடம்பெற்ற இனக்கலவரம் காரணமாக பாதுகாப்பு நிமித்தமாக இலங்கை தமிழர் செறிந்து வாழும் மாவட்டங்களை நோக்கி நகரத்தொடங்கினர். அத்தோடு 1980ஐ தொடர்ந்து உள்நாட்டு போர் காரணமாக இந்த நகர்வுப் போக்கு உத்வேகம் அடையத்தொடங்கியது. இதனுடைய முக்கிய விளைவு தோட்டப்புற மாவட்டங்களில் வாழ்ந்த இந்தியர்களின் சனத்தொகை குறைவடையத் தொடங்கியமையாகும்.

## இந்திய தமிழர்களின் எண்ணிக்கையின் வீழ்ச்சி

இந்திய தமிழர்களது மொத்த தொகையில் ஏற்பட்ட வீழ்ச்சி மற்றுமொரு முக்கிய விடயமாகும். 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்தபோது, இலங்கையின் சனத்தொகையில் ஏறக்குறைய 12 சதவீதமாக, சிங்களவர்களுக்கு அடுத்ததாக இரண்டாவது இடத்தில் இருந்த இந்திய தமிழர்கள் தற்போது 4.5 சத வீதமாக குறைவடைந் துள்ளது. இந்த வீழ்ச்சிக்கு பிரதானமான காரணங்களாக இரண்டை குறிப்பிடலாம்.

முதலாவது நாடற்றவர் பிரச்சினையை தீர்ப்பதற்காக இலங்கையும் இந்தியாவும் செய்துகொண்ட ஒப்பந்தங்கள் ஆகும். மற்றையது இந்திய தமிழர்கள் சனத்தொகை கணக்கெடுப்பின் போது தங்களை இலங்கை தமிழர்களாக பதிவு செய்துக்கொண்டமையாகும். இலங்கை சுதந்திரமடைந்தவுடன் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றிய இலங்கை குடியுரிமை சட்டம் 1948இன் படி அந்த சட்ட ஏற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதவர்கள் தங்களது குடியுரிமையை இழந்தனர்.

இவ்வாறு குடியுரிமையை இழந்தவர்கள் தங்களது குடியுரிமையை பெற்று கொள்ள வசதியாக இந்திய பாகிஸ்தானிய வசிப்பிட சட்டம் 1949 இயற்றப்பட்டது. இதன் சரத்துக்கள் மிகவும் கடுமையாக இருந்த காரணத்தினால் அதிகமானோர் தமது குடியுரிமையை பெற்று கொள்ள முடியாது போயிற்று. இதன் விளைவாக குடியுரிமை இழந்த நிலையில் இரண்டு நாடுகளும் இவர்களை பொறுப்பேற்காத நிலையில் இவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடற்றவர்கள் என்ற நிலைக்கு தள்ளப்பட்டனர். இது இவர்களது சமூக, பொருளாதார, அரசியல் வாழ்வில் பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியது.

நாடற்ற பிரச்சினை தீர்க்கப்படும் சூழ்நிலையின்போது இந்தியர்களின் மொத்த சனத்தொகை 975,000 ஆகும். 1964இல் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்ததின்படி இந்தியா 525,000 பேரோடு அவர்களது இயற்கை அதிகரிப்பையும், இலங்கை 300,000 பேருடன் அவர்களது இயற்கை அதிகரிப்பையும் பொறுப்பேற்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப் பட்டது. பின்னர் 1974இல் மீதமுள்ள 150,000 பேரை தலா அரை வாசியாக பொறுப்பேற்க ஸ்ரீமா-இந்திரா ஒப்பந்தம் வழிவகுத்தது. ஆகவே இந்தியா 600,000 பேரையும் இலங்கை 375,00 பேரையும் பொறுப்பேற்பதாக தீர்மானிக்கப்பட்டது. ஆனால், இந்தியாவிற்கு விண்ணப்பித்தவர்கள் 506,000 பேராகவும் இலங்கைக்கு விண்ணப்பித்த வர்கள் 625000 பேராகவும் காணப்பட்டனர்.

1988 ஆம் ஆண்டளவில் இவர்களில் இந்திய குடியுரிமை 423,000 பேருக்கும் இலங்கை குடியுரிமை 220,000 பேருக்கும் வழங்கப்பட்டன. எனவே இரு நாட்டைப் பொறுத்த வரைக்கும் குடியுரிமையை பொறுத்தவரை இடைவெளிகள் காணப்பட்டன. இலங்கைக்கு விண்ணப்பித்தவர்கள் தொகை ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக காணப்பட்டமையினால் 1986 குடியுரிமை சட்டப்படி மேலும் 94,000 பேர் இலங்கை குடியுரிமை பெறத் தகுதி பெற்றனர். ஆக மொத்தம் இலங்கைக்கு 469,000 பேர் குடியுரிமை பெற வேண்டியவர்களாக கணிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் இந்திய குடியுரிமை பெற்றவர்கள் இந்தியா செல்வதற்கான கப்பற்சேவை 1984இற்குப் பின்னர் உள்நாட்டு போர்ச் சூழல் காரணமாக நிறுத்தப்பட்டமையினால் குடியகல்வில் தடை ஏற்பட்டது. இந்தியாவிற்கு சென்றவர்களின் தொகை இயற்கை அதிகரிப்புடன் ஐந்து இலட்சமாக காணப்பட்டது. இலங்கை குடியுரிமையை பொறுத்தவரை 2003ஆம் ஆண்டு குடியுரிமை திருத்தச் சட்டத்தின்படி மீதமுள்ள அனைவருக்கும் இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடியுரிமை வழங்கப்பட்டு நாடற்றவர் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டது.

### தோட்டத்துறையில் மாற்றங்கள்

இக்காலகட்டத்தில் தோட்டத்துறையானது பலத்த மாறுதல்களுக்கு உட்பட்டு வந்தது. 1970களில் சர்வதேச தொழிலாளர் நிறுவனத்தின் ஆய்வு ஒன்றின்படி தோட்டத்துறையில் இளைஞர்களின் எதிர்பார்க்கை களுக்கும் தொழிற்சந்தையில் காணப்படும் சந்தர்ப்பங்களுக்கு மிடையே ஒரு சமநிலை காணப்பட்டது என குறிப்பிட்டுள்ளது. உண்மையில் இந்த ஆய்வு 1971இல் நாட்டில் ஏற்பட்ட ஏப்ரல் கிளர்ச்சிக்கான காரணங்களை ஆராயவே முற்பட்டது. நாட்டில் உயர் கல்வி கற்ற இளைஞர்களின் எதிர்பார்க்கைகளுக்கும் தொழில் வாய்ப்புகளுக்குமிடையே காணப்பட்ட சமநிலையின்மையே, இந்த கிளர்ச்சிக்கான காரணம் என இவ்வாய்வு கண்டறிந்தது.

தோட்டத்துறையில் ஆரம்ப கல்வி பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் மாத்திரமே காணப்பட்டன. தோட்டத்துறையில் 800க்கும் மேற்பட்ட பாடசாலைகள் காணப்பட்டாலும் அங்கு ஐந்தாம் தரம் வரையே வகுப்புகள் நடாத்தப்பட்டன. அங்கு படிப்பை முடித்தவுடன், தோட்டங்களில் வேலை வாய்ப்புகள் கிடைத்தன. இதனாலேயே ஆய்வறிக்கை சமநிலை பற்றி குறிப்பிட்டது. ஆனால் பின்னர் கல்வித் துறையில் ஏற்பட்ட வளர்ச்சி இந்த சமநிலையை பாதித்தது. 1970களின் நடுப்பகுதியில் இது வரைக்கும் தோட்ட நிர்வாகத்தின் கீழிருந்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றதன் பின்னர் அவை தரமுயர்த்தப்பட்டன. இதனால் க.பொ.த. சாதாரண வகுப்பு வரை (10, 11ஆம் வகுப்புகள்) படித்தவர்கள் பெருமளவில் தோட்டத் தொழில்களை கைவிட்டு நகர்ப்புறங்களை நோக்கி நகரத்தொடங்கினர்.

தோட்டத்தொழில் ஒரு கூலித்தொழிலாக கருதப்பட்டமையும் அது சமூக மட்டத்தில் ஒரு கீழான மட்டத்தில் பாரக்கப்பட்டமையும் இந்த வெளியேற்றத்திற்கு காரணமாக அமைந்தது. இதனுடைய மொத்த விளைவாக தோட்டங்களில் தொழிலாளர் பற்றாக்குறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படத் தொடங்கியது. இதனால் தோட்டங்களை பராமரிப்பதில் பிரச்சினைகள் ஏற்பட்டன. தோட்ட நிலங்கள் முழுமையாக உற்பத்திக்கு உட்படுத்தப்படவில்லை. இதனால் பயிரிடப்படாத நிலங்களின் அளவு அதிகரித்து அவைகள் காடுகளாக மாறத் தொடங்கின. இவ்வாறு இருந்தபோதிலும் நாட்டினது மொத்த தேயிலை உற்பத்தியில் பாரிய வீழ்ச்சி ஏற்படவில்லை.

வெளிநாட்டு கம்பனிகள்மற்றும் தனியார் கம்பனிகளிடமிருந்த தோட்டங்களை 1972, 1975 ஆண்டுகளில் அரசாங்கம் பொறுப்பேற்றது தொடக்கம் ஜனவசம மற்றும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டு அரச அமைப்புகளின் கீழ் இயங்கி வந்தன.

அதன்பின்னர் 1992இல் இவைகள் தனியார் மயப்படுத்தப்பட்டு 23 பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் உருவாக்கப்பட்டன. அத்தோடு அரச நிறுவனங்களான மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (State Plantation Corporation) மற்றும் தனியார் தோட்டங்கள் (Private Estates) போன்ற நிறுவனங்களாலும் சிற்றுடைமையாளர்கள் (Small holders) என்ற பிரிவினராலும் உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது.

அரசாங்கம் 1972இல் பொறுப்பேற்றதன் பின்னர் கிராமிய மக்களுக்கு தோட்ட நிலங்கள் பல்வேறு நிலப்பங்கீட்டு திட்டங்களின் மூலமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதன் காரணமாக தேயிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சிற்றுடைமையாளர்களின் எண்ணிக்கை அபரிமிதமான வளர்ச்சியை காட்டியது. சிற்றுடைமை என்பது 10 ஏக்கருக்கு குறைவான பரப்பினை கொண்டது. அதேவேளை தோட்டம் என்பது 10 ஏக்கருக்கு மேற்பட்டதாகவும் 20 வசிப்பிட தொழிலாளர் களை கொண்டதாகவும் இருக்க வேண்டும் என வரையறுக்கப் பட்டுள்ளது. தற்போது மொத்த தேயிலை உற்பத்தியை நோக்கினால் ஏறக்குறைய 70 சதவீதம் சிற்றுடைமையாளர்களிடமிருந்தும், தோட்டத் துறையிடமிருந்து 30 சதவீதமும் பெறப்படுகின்றது.

இந்த பின்னணியில் தோட்டத்துறை தற்போது தன்னை நிலை நிலைநிறுத்திக் கொள்ள முயற்சித்து கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள் சமூகம் என்ற வகையில் நிலவுரிமையற்றவரகளாய், வசிப்பிட தொழி லாளர்களாக அல்லாதவர்கள் ஒரு பாரிய பிரச்சி னையை எதிர்நோக்கி யுள்ளனர்.

தொழிலாளர்களை தோட்டத்தில் நிலை நிலைநிறுத்தவும் தினக்கூலியை அதிகரிக்க முடியாத நிலையில் தோட்ட நிர்வாகம் வெளிவாரி உற்பத்தி முறைமை அல்லது வருமான பங்கீட்டு முறை மையை (Revenue Sharing Model) அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முறைமையின் படி தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் குறிப்பிட்ட நாட்களுக்கு தோட்டத்தில் வேலை செய்ய வேண்டும். ஏனைய நாட்களில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பில் காணப்படும் தேயிலை செடிகளின் விளைச்சலை பறித்து தோட்ட நிர்வாகத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு விற்க வேண்டும். ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பினை தொழிலாளர்களே தமது செலவில் பராமரித்து கொள்ள வேண்டும். இது குறித்து தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படும். ஒப்பந்த கால முடிவிலோ அதற்கு முன்னரோ வழங்கப்பட்ட நிலத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் நன்மை என்னவெனில் குறிப்பிட்ட காலத்திற்கு தொழி லாளர்களாக அல்லாது சிறு உடமையாளர்கள் போல செயற்படலாம். ஒரு நிலப்பரப்பை நிர்வகித்து அதிலிருந்து விளைச்சலை அதிகரிக்க கூடிய சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. எனினும் இதன் நடைமுறை குறித்து ஒருமித்த கருத்து காணப்படவில்லை. பயனாளிகள் தெரிவு, ஒதுக்கப்பட்ட நிலப்பரப்பின் செழிப்புத்தன்மை, நிர்வாகத்தின் தலையீடு என்பன காரணமாக இந்த முறைமை எல்லா இடங்களிலும் முழுமையாக வரவேற்கப்படவில்லை. சில தோட்டங்களில் இம் முறைமை சிறப்பாக செயற்படுவதை அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிலவுரிமையின் முக்கியத்துவம்

தற்போது நிலவுரிமையே பிரதான கோரிக்கையாக பல இடங்களிலும் பல மட்டங்களிலும் பேசும் பொருளாக மாறியுள்ளது. இந்த மக்கள் நிலவுரிமையற்று இருப்பது இந்த மக்களை ஏனைய மக்களிடமிருந்து வேறுபடுத்தி காட்டுவதாவும் இவர்களின் அடிப்படை பிரச்சினையாகவும் அமைந்துள்ளது. ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல நிலவுரிமை வழங்குவதற்கு ஆரம்பம் முதல் எதிர்ப்பு காணப்பட்டது.

1935 காணி அபிவிருத்தி சட்டம் உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் இந்தியர்களுக்கு காணி வழங்கப்படக் கூடாது என்பதில் இலங்கையின் அன்றைய தலைவர்கள் ஒரு இறுக்கமான நிலைப்பாட்டை கொண்டிருந்தனர். இந்தியரின் வருகை பொருளாதார ரீதியாக வரவேற்கப்பட்டாலும், அவர்கள் நிலவுரிமையோடு இங்கேயே நிரந்தரமாக வாழ்ந்து விடுவதை இவர்கள் விரும்பவில்லை

## போராட்டங்களும்- தியாகங்களும்

1946ஆம் ஆண்டு ஜூன் மாதம் கேகாலை மாவட்டத்தில் நிவ்ஸ்பரி தோட்டத்தில் (தமிழில் உருளை வள்ளி) அன்றைய அரசாங்கம் கிராம விஸ்தரிப்பிற்காக தோட்டத் தொழிலாளர்களை வெளியேற்ற எடுத்த முயற்சியை எதிர்த்து அந்தப் பிரதேச தொழிலாளர்கள் மட்டுமன்றி ஏனைய பிரதேச தொழிலாளர்களும் ஒன்று திரண்டு மாபெரும் போராட்டத்தை அனைத்து தொழிற்சங்கங்களும் இணைந்து நடாத்தின. இப்பிரச்சினை பல்வேறு மட்டநீதிமன்றங்களில் எடுத்து கொள்ளப்பட்டு இறுதியில் பிரிவு கவுன்சில் வரை சென்று இவ்வழக்கு இறுதியாக்கப்பட்டது.

உருள வள்ளி போராட்டம் தொழிலாளர்களுக்கு முழுமையாக வெற்றி அளிக்காவிட்டாலும் இதுவே நிலவுரிமைக்கான முதற் போராட்டமாக கருதப்படுகிறது. இதேபோல பல போராட்டங்கள் பல்வேறு உரிமைகளுக்காக இடம்பெற்றுள்ளன. இதன்போது முல்லோயா கோவிந்தன், டெவன் சிவனு லட்சுமணன், டயகம ஆபிரகாம் சிங்கோ, ஸ்டலர்ன் பேர்க் வீராசாமி, வேலாயுதம் போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலரின் தியாகங்களும் பல எழுத்தாளர்களால் (மாத்தளை ரோகினி, சு.முரளிதரன், சாரல்நாடன் ஏ.பி. கணபதிபிள்ளை) நூல் வடிவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

### வீட்டுரிமையும் நிலவுரிமையும்

நில உரிமை வீட்டு உரிமையோடு இணைந்தவொன்றாகும். தோட்டத் தொழிலாளர்கள் வசிப்பிடத்தொழிலாளர்களாக கருதப்பட்டமை யினால் தொழில் செய்யும் வரை வசிப்பிட உரிமை பிரச்சினையாக அமையவில்லை. ஆனால், தோட்டங்களை விட்டு வேறு தொழில் களை தேடி வெளியேறுவோர் தொகை அதிகரித்து செல்லும் நிலையில் இது ஒரு பெரும்பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தோட்டங்களில் தற்போது வேலை செய்வோர் மற்றும் வேலை செய்யாதோர் (Worker and Non Worker) என இரு பிரிவினர் உருவாகியுள்ளனர். வீடுகள் வழங்கப்படும் போது வேலை செய்வோருக்கே முன்னுரிமை வழங்கப்படுகின்றது.

இடர்நிலை ஏற்பட்டு வீடுகள் வழங்கப்பட்டு அவர்களுக்கு தமது வீடுகளுக்கு சட்ட ரீதியான உரிமம் வழங்கப்படும் போது வேலை செய்யாதோர் அத்தோட்டத்தில் சட்ட ரீதியாக் வாழ்பவர்கள் எனில் அவர்களுக்கும் இந்த உரிமம் வழங்கப்பட்டுள்ளது. சட்ட ரீதியாக குடியிருப்போர் என்பது வாக்காளர் டாப்பினால் (Voters List) உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தற்போது தனி வீடுகள் 7 பேர்ச்சஸ் காணியில் நிரமாணிக்கப்பட்டு, அவற்றுக்கு சட்ட ரீதியான உரிமம் வழங்கப்படுவது அரசாங்கத் தினால் கொள்கை ரீதியாக ஏற்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் வாழ்வாதரத்திற்காக 20 பேர்ச்சஸ் காணி தேவை என்ற கோரிக்கை பல மட்டங்களில் எழுப்பப்பட்டு வருகிறது. இத்தகைய சூழ்நிலையில் அனைவருக்கும் 10 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும் என்பது அரசாங்க கொள்கையாக சம்பந்தப்பட்ட அமைச்சர்களால் 2023 ஆகஸ்ட் 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கொள்கை அறிவிப்பு இன்னும் அமைச்சரவை மட்டத்தில ஏற்றுக்கொள்ளப்பட்டு அரசாங்க தீர்மானமாக அறிவிக்கப்படவில்லை. இது வீடமைப்பிற்கும் வாழ்வதாரத்திற்கும் உரியதாக அமையும் என அறியக்கூடியதாக உள்ளது. இது எவ்வாறு நிறைவேற்றப்படப் போகிறது. அது எந்தளவிற்கு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டியதாகவுள்ளது.

இதேவேளை, எதிர்கட்சியினர் இத்தொழிலாளர்களை விவசாயிகளாக ஆக்குவோம் என தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டுள்ளனர். விவசாயிகளாக ஆக்குவது என்பது நடைமுறையில் இவர்களை சிற்றுடைமையாளர்களாக்க ஆக்குவது என்பதாகும். ஏற்கனவே, குறிப்பட்டதைப் போல் தேயிலை உற்பத்தி தோட்ட முறைமையை விட சிற்றுடைமையிலிருந்தே அதிக அளவில் இடம்பெறுகிறது.

தோட்டங்களில் தற்போது ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் பேர் நிரந்தர தொழிலாளர்களாக தொழில் புரிகின்றனர். அதேவேளை ஐந்து இலட்சத்திற்கு மேற்பட்ட சிற்றுடைமையாளர்கள் காணப்படுகின்றனர். எனவே, தோட்டத் தொழிலாளர்கள் தங்களை சிற்றுடைமையாளர்களாக மாற்றி கொள்வார்களா? தோட்ட முறைமையினின்றும் தங்களை விடுவித்து கொள்ளத் தயாரா? இதுவரை காலமும் தோட்ட நிர்வாகம் வழங்கி வந்த வரப்பிரசாதங்களை இழக்கத் தயாரா? ஓய்வுக்கு பின்னர் தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய சேமலாப நிதி வசதி (Provident Fund) போன்றவற்றை இழக்கத் தயாரா? என்ற பல கேள்விகள் எழும்புகின்றன. இத்தகைய பின்னணியில் தோட்டத் தொழிலாளர் சமூகமானது ஒரு தீர்மானகரமான சூழ்நிலையை எதிர் நோக்கியுள்ளதெனலாம்.

## முடிவுரை

தொழிலாளர்களாக வந்து 200 வருடங்களை பூர்த்தி செய்கின்ற இந்த சந்தர்ப்பத்தில் இவர்கள் ஒரு சமூகமாக தங்களை உருவாக்கி இன்று தேசிய அரங்கில் ஒரு தனித்துவ இனமாக பரிணாமம் பெற்றுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுகையில் பல குறிகாட்டிகளின் அடிப்ப டையில் ஒரு சமத்துவமற்ற நிலையிலேயே காணப்படுகின்றனர். இவர்களின அடிப்படை அபிலாசைகள் மற்றும் எதிர்பார்க்கைகள் எல்லாம் தாங்கள் ஏனைய சமூகங்களோடு சமத்துவமான நிலைமையில் தேசிய நீரோட்டத்தில் ஒன்று சேர வேண்டும் என்பதாகும்.

இந்த எதிர்ப்பார்ப்பிற்கு பிரதான தடையாக விளங்கியது இவர்கள் வாழ நேர்ந்த தோட்ட முறைமையாகும். இந்த முறைமை தற்போது தன்னுடைய வரலாற்று முக்கியத்துவத்தை இழந்த நிலையில், மாற்றங்களை எதிர் நோக்கியுள்ளது.

அரசியல் கட்சிகள தங்களது தேர்தல் விஞ்ஞாபனத்தில் (Election Manifesto) குறிப்பிட்ட உறுதி மொழிகளை அரசியல் மாற்றங்கள் காரணமாக நிறைவேற்றாமல் போகலாம். எனினும் நிலவுரிமைக்கான குரல் இன்று வலுவடைந்தவொன்றாக மாறியுள்ளது. இதன் நிறை வேற்றம் தோட்டத்தொழிலாளர்களின் நிலைமையிலும், தோட்ட முறைமையிலும் அடிப்படை மாற்றங்களை தோற்றுவிக்கும் என்பது பெருமளவில் எதிர்பார்க்கக்கூடியவொன்றாகும்.

**உதவிய நூல்கள்**

Beckford G. L. (1972) Persistent Poverty
Roshan Rajadurai, Revenue Sharing Model, Un published document
Kumari Jayawardane, Rachel Kurien (2015) Class, Patriarchy and Ethnicity on Srilankan. Plantations, Two centuries of Power and Protest
Kanapathy Pillai, A.P.(2023) Glimpses of a Tea Bud
*சந்திரசேகரம், சோ (2001) இலங்கை இந்திய வரலாறு.*
*மாத்தளை ரோகினி (1993 ) உரிமை போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகள்*
*முரளிதரன்.சு. (1990) தீவகத்து ஊமைகள்*
*சாரல் நாடன். (2022) வானம் சிவந்த நாட்கள்*

*- தமிழ்நாடு கோயம்புத்தூரில் 20 ஒக்டோபர் 2023இல் நடைபெற்ற மலையகம் : பன்னாட்டு கருத்தரங்கில் வெளியிடப்பட்ட சஞ்சிகைக்காக எழுதப்பட்ட கட்டுரை*
*- செப்டம்பர், 2023.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையக மக்களின் நிலவுரிமையில் தோட்ட பொருளாதார அமைப்பின் தாக்கம்

## அறிமுகம்

'மலையகம் 200' என்ற தொனிப்பொருள் இன்று அதிகம் பேசும் பொருளாக மாறியுள்ள வேளையில் மலையகத்தின் வேரை மீட்டு உரிமைகளை வென்றிடும் முயற்சிகள் பலமட்டங்களில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. வரலாற்று ரீதியிலான அம்சங்களுக்கு அழுத்தம் கொடுக்கின்ற இந்தப் போக்கில் நிலவுரிமை இன்றியமையாததாக முக்கியத்துவம் பெற்றவொன்றாக வடிவம் பெற்றுள்ளது. ஏன் இந்த மக்களுக்கு நிலவுரிமை கிடைக்கவில்லை அல்லது ஏன் மறுக்கப் பட்டது என்ற கேள்விகள் பரவலாக பேசப்படுவதோடு அரசியல் ரீதியில் விடைகாண முயற்சிக்கப்பட்டு வருகிறது. இச்சூழ்நிலையில் அதிகம் கவனிக்கப்படாத ஒரு விடயம் தோட்டப் பொருளாதார முறைமை இந்நில உரிமையில் எத்தகைய தாக்கத்தினை செலுத்தி யுள்ளது என்பதாகும். இதனை விரிவாக எடுத்து விளக்க முனைவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தோட்ட பொருளாதார முறைமை

தோட்ட முறைமை என்பது பொருளாதார உற்பத்தி முறைமையும் சமூக நிறுவனமாகும் எனக் கூறும் ஜி.எல் பெக்பேட் (G.L.Beckford) தோட்ட உற்பத்தி முறைமையை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்து கிறார்.'' விவசாய உற்பத்திப் பொருளை விற்பனைக்காக, அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிலான இத்திறனற்ற தொழிலாளர்களை ஈடுபடுத்தி, அவர்களை மிக நெருக்கமாக மேற்பார்வை செய்து உற்பத்தி செய்கின்ற முறைமையாகும்.'' இந்த வரைவிலக்கணத்திலிருந்து பின்வருவனவற்றை உய்த்துணரலாம்.

1. திறனற்ற தொழிலாளர்கள் என்பதால் அவர்கள் நெருக்கமாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். (Closly Supervised)

2. உற்பத்திக்காக அதிக எண்ணிக்கையானவர்கள் தொடர்ந்து தேவைப்படுவதால் அவர்கள் நிரந்தரமாக தங்க வேண்டிய தேவை உருவானது. எனவே, இவர்கள் வசிப்பிட தொழிலாளர்களாக ஆக்கப்பட்டனர் (Residential Labour)

3. திறனற்ற தொழிலாளர்கள் என்பதால் இவர்களுக்காக கூலி குறைவாக கொடுக்கப்படுவது நியாயப்படுத்தப்பட்டது. கோப்பி உற்பத்தியின் போது தொழிலாளர்கள் காலத்திற்கு காலம் (Seasonal) தேவைப்பட 1860களில் தேயிலையின் அறிமுகத்தோடு நிரந்தர தொழிலாளர்கள் தொடர்ச்சியாக தேவைப்பட்டனர். தேயிலை உற்பத்தி தொடர்ந்தமையினால் இந்த முறைமையை தொடர்ந்தது.

இந்த முறைமையின் முதல் விளைவு, இது ஓர் அடைப்பட்ட பொருளாதாரமாக உருவெடுத்தமையாகும். தொடர்ச்சியாக பெருந்தொகையான தொழிலாளர்கள் தேவை என்பதால் இவர்களது கட்டுப்படுத்தப்பட வேண்டும். உற்பத்தி இடையறாது இடம்பெறுவதால் தொழிலாளர்களின் வரவு நிச்சயப்படுத்தப்பட்டவொன்றாக இருக்க வேண்டும். தொழிலாளர்கள் வெளியேறாது கண்காணிக்கப்பட்ட அதேவேளை வெளியாட்களின் உள்நுழைவும் தடுக்கப்பட்டது. இந்த நிலைமை காரணமாகவே தொழிலாளர்கள் தொழிற்சங்கமாக அணிதிரள்வதும் காலம் தாமதித்தே இடம்பெற்றது. வெளித்தொடர்புகள் அற்ற நிலைமை இவர்களது பின்னடைவிற்கு பெருமளவில் பங்கு செலுத்தியது.

இரண்டாவதாக உற்பத்தி முறை நெருக்கமாக மேற்பார்வை செய்யப்படுவதால் அடக்கு முறைமை இயல்பாகவே உருவாகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கியது. உயர் மட்டத்தில் தோட்டத்துரை அதற்கு அடுத்த மட்டத்தில் உத்தியோகத்தர்கள் (Staff) களத்திலும் (Field) காரியாலயங்களிலும் (Office) தொழிற்சாலைகளிலும் (Factory) பணிக்கமர்த்தப் பட்டனர். கணக்கப்பிள்ளைகள் கிளார்க், டீமேக்கர் ஆகிய பெயர்கள் தோட்ட முறைமையில் பயன்படுத்தப்படுகின்றன. அடுத்ததாக மேற்பார்வை செய்ய பெரிய கங்காணி, சில்லறை கங்காணிகள் என்ற முறைமை வலுவானதாக இருந்தது. தென்னிந்தியாவில் தொழிலாளர் களை திரட்டி அங்கிருந்து தோட்டப் பகுதிக்கு கொண்டு வருவது வரைக்கும் மாத்திரமல்லாது அவர்களை தோட்டத்திலேயே தங்க வைக்கவும் இந்த முறைமை செல்வாக்குச் செலுத்தியது. இவர்களே தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்குமிடையே தொடர்பாடல் செய்பவர்களாக திகழ்ந்தனர். சம்பளம் வழங்கல், கடன் கொடுத்தல், மீளப்பெறுதல் போன்ற பல நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக இவர்களது பண பலம் கூடியதோடு சமூகத்தில் செல்வாக்குமிக்க குழுவினராகவும் உருவாகினர். இவர்களில் பலர் தோட்ட முதலாளிகளாக மாறி தொழிற்சங்க தலைவர்களாகவும் மாறினர். இந்த முறைமை நிலவுடமை அம்சங்களைக் கொண்டதாக காணப்பட்டமைக்கு இந்திய சமூக அமைப்பில் நிலவிய ஜமீந்தார்கள் முறைமை, சாதி அமைப்பு முறைமை ஆகியன இங்கும் தொடர்ந்தமையை சுட்டிக்காட்டலாம். இருபதாம் நூற்றாண்டின் நவீன அடிமைத்தனமாகவும் இது வர்ணிக்கப்படுகின்றது. அடைப்பட்டு அடக்கப்பட்ட நிலையில் தொழிலாளர்கள் தங்கள் நிலையிலிருந்து மேல் நோக்கிய அசைவின்மை (Upward mobility) இல்லாதிருந்தமை சுட்டிக் காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

தொழிலாளியாக சேர்கின்ற ஒருவன் தொழில் புரியும் காலம் வரை ஓய்வுபெறும்வரை தொழிலாளியாகவே இருக்க வேண்டும். ஆரம்பத்தில் சேருகின்ற ஒருவனுக்கு வழங்கப்படுகின்ற கூலியே ஓய்வு பெருகின்ற ஒருவனுக்கும் வழங்கப்படுகின்றது. திறனற்ற தொழிலாளி என்பது வழங்கப்படுகின்ற கூலி என்ற அடிப்படையில் தொடர்ந்து நிலைநாட்டப்படுகின்றது. தொழிலாளர்கள் உயர்ந்தபட்சம் கங்காணியாக பதவி உயர்வு பெறலாம். ஆனால் வழங்கப்படுகின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலியில் எவ்வித மாற்றமுமில்லை. சில வேளைகளில் கணக்கப் பிள்ளையாக உயர்வு பெறலாம். அதுதான் அவர்கள் தங்களை உயர்த்திக் கொள்ள கிடைத்த ஒரே சந்தர்ப்பமாக காணப்பட்டது. வேறு உத்தியோக நிலைப் பதவிகள் (Staff Level) இவர்களுக்கு மறுக்கப் பட்டன. இந்த இருபிரிவுகளுக்குமிடையே காணப்பட்ட வர்க்கப் பிரிவுகள் இறுக்கமாக பேணப்பட்டன. வீடமைப்பு வசதிகளும் கூலி தொழிலாளர்களுக்கு லயன்கள் போன்ற வரிசை வீடுகள் தோட்ட உத்தியோகத்தர்களுக்கு தனி வீடுகளான குவாட்டர்ஸ்கள் தோட்டத் துரைகளுக்கு பங்களாக்கள் என்ற வகையில் தான் அமைந்திருந்தது. இவர்களுக்கிடையே எந்த தொடர்பும் காணப்படவில்லை. ஒரே தோட்டத்தில் வாழ்கின்ற தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்ட நிலையில் வேறு இனத்தவர்களுக்கு அல்லது வேறு தோட்டத்திலிருந்தே இப்பதவி நிலைமை நிரப்பப்பட்டன. இவர்கள் உயர்நிலைக்கு செல்ல வேண்டுமெனில் அவை தோட்டத்திற்கு வெளியே தான் இடம்பெற்றன.

இவர்கள் வசிப்பிட தொழிலாளர்களாக தோட்டத்திற்குள்ளே அடைபட்டு வாழ்ந்து வந்தமையினால் தென்னிந்தியாவிலிருந்து தாங்கள் வாழ்ந்த அந்த வாழ்க்கை முறைமையை அப்படியே இங்கு பெயர்த்து வந்து வாழ்ந்தார்கள் என்று கூறப்பட்டது. ஆரம்ப காலத்தில் லயன் வீடுகள் ஒதுக்கப்பட்ட வேளை பெரும்பாலும் சாதி அடிப்படை யிலேயே அவை அமைக்கப்பட்டிருந்தன. எனவே தென்னிந்திய சாதி முறைமை தொடர செய்தது. இத்தகைய அமைப்பின் காரண மாக கூலிகளாக வந்தவர்கள் ஒரு சமூகமாக வலுப்பெற்று வந்தார்கள். ஒரு இறுக்கமான சமூகமாக ஒரே பிராந்தியத்தில் தோட்டப்பயிர் உற்பத்தி செய்யப்படுகின்ற பரந்த பிரதேசத்தில் வாழ்வதால் மொழி, சமயம், பண்பாட்டு என்ற பொதுமை காரணமாக இந்திய வம்சாவளி மக்களாக இவர்கள் அடையாளம் காணப்பட்டு இன்று மலையக பிராந்தியத்தில் வாழ்வதால் மலையகத் தமிழ் மக்களாக இன்று இனங்காணப்பட்டுள்ளனர். இத்தகைய ஒற்றுமை காரணமாக தங்களது பண்பாடுகளை கலாசார மரபுகளை தொடர்ந்து பேணியமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக இது அவர்களது அடையாளத்தை உறுதி செய்ய உதவியதெனலாம்.

தோட்ட லயன்களில் இவர்கள் தொழிலாளர்களாக வேலை செய்யும் வரை வாழக்கூடிய வாய்ப்பு காணப்பட்டமையால் இவர்ளுக்கு வசிப்பிட உரிமை கிடைத்தது. ஆனால், இது சட்டரீதியான உரிமை அல்ல. வேலைக்கு செல்லவில்லையென்றால் வீட்டை விட்டு வெளியேற வேண்டும் வீட்டுரிமையும் அதோடு ஒட்டியதாக காணி உரிமையும் அற்ற ஒரு சமூகமாகவே இவர்கள் இன்றும் அடையாளப்படுத்தப்படுகின்றனர்.

பொருளாதார ரீதியில் அடைபட்டு, அடக்கப்பட்டு ஒதுக்கப்பட்டு, இவர்கள் தொடர்ந்து வாழ்ந்தாலும், நாட்டில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் காரணமாக இவர்களது வாழ்வியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டன.

இவ்வாறு 1823-1920 வரை மாற்றமின்றி வாழ்ந்த மக்கள் கூட்டத்தில் 1920களில் அரசியல் விழிப்பு ஏற்பட ஆரம்பித்தது. சட்டசபையில் இந்தியர்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்ட போது இவரில் ஒருவராக தோட்டத் தொழிலாளர்களை பிரதிநிதித்துவப் படுத்த கோ. நடேசய்யர் நியமிக்கப்பட்டமை குறிப்பிடப்படுகின்றது. அதன் பின்னர் 1931இல் டொனமூர் அரசியலமைப்பின் படி அனைவருக்கும் வாக்குரிமை வழங்கப்பட்டபோது அது இந்தியத் தோட்டத் தொழி லாளர்களுக்கும் வழங்கப்பட்டது. இதன் காரணமாகவே 1947இல் தேர்தலில் 7 பேரை பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யக்கூடிய நிலை உருவானது. அரசியல் ரீதியான வளர்ச்சியோடு கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியும் குறிப்பிடத்தக்கது. தோட்டப் பாடசாலைகளின் உருவாக்கம் பின்னர் 1970களில் அரசாங்கம் பொறுப்பேற்றல் காரணமாக இன்று 17,000 பேரளவில் ஆசிரியர்களாக உருவெடுத் துள்ளனர். அதேபோல கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கத் துறையில் அரசியல் பிரதிநிதித்துவம் காரணமாக அமைச்சுப் பதவிகளை பெற்றுக் கொண்டமையால் பல மாற்றங்கள் ஏற்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயன் முறைக்கு பதிலாக தனிவீட்டுத் திட்டங்கள் சுகாதாரத்துறை இன்னும் அரசாங்கம் பொறுப்பேற்காத நிலையிலும் அங்குமிங்கும் அரச ஈடுபாடுகள் இடம்பெற்று வருகின்றன. சிறுவர்கள்/ குழந்தைகள் நலத்திட்டங்களை (Child Development Centre) என்பவை உருவாக்கப் பட்டமை காரணமாக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அரசாங்க துறை யில் வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இத்தகைய முன்னேற்றங்கள் மத்தியில் இன்னும் நிறைவேறாத கனவாக இருப்பது காணி உரிமையாகும்.

## மாறுதல்களுக்கு உள்ளாகாத காணி உரிமை

காணி உரிமை என்பது உணர்வுபூர்வமாகவும், சிக்கலானதாகும் வரலாற்று ரீதியாக இதனைப் பார்த்தால் 1935 காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் (LDO) உருவாக்கப்பட்ட காலம் தொடக்கம் இந்தியர்களுக்கு நிலம் வழங்கப்படக் கூடாது என்பது இலங்கையின் அரச தலைவர்கள் ஒரு இறுக்கமான போக்கை கடைப்பிடித்துள்ளனர். இந்தியரின் வருகை பொருளாதார ரீதியாக வரவேற்கப்பட்டாலும் அவர்கள் நிலஉரிமையோடு இங்கேயே நிரந்தரமாக வாழ்ந்து விடுவதை இலங்கையின் தேசிய தலைமைகள் விரும்பவில்லை. காடுகளாக இருந்த நிலமே தோட்டங்களாக மாறின என்பது உண்மையாக இருந்தாலும், இவை கிராமிய மக்களுக்கு உரியவை அவற்றையே இந்தியர்கள் பறித்தெடுத்தார்கள் என்ற கருத்து அடிப்படையிலே அவர்களுக்கெதிராக எதிர்ப்பு உருவம் பெற்றது. அரசியல் சுதந்திரம் மற்றும் பிரதிநிதித்துவம் பேசப்பட்டபோது இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்குவதும் கடுமையான எதிர்ப்புக்குள்ளாகியது. நில உரிமை வழங்குதலும் வாக்குரிமை வழங்குதலும் இந்திய எதிர்ப் பலையை மேலும் பெருப்பிப்பதாகவே அமைந்திருந்தது.

## அரசியல் அரங்கில் ஏற்பட்ட மாற்றங்கள்

அரசியல் அரங்கில் இதனை தெளிவாக பார்க்கக்கூடியதாக இருந்தது. 1920களில் வாக்குரிமை வழங்கப்பட்டபோது இந்தியர்களுக்கு வழங்கு வதற்கு பலத்த எதிர்ப்புகள் இருந்தாலும் டொனமூர் அரசியல் சீர்திருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தின்படி முன்மொழியப்பட்ட 1931இல் சர்வசன வாக்குரிமையில் இந்தியர்கள் இணைக்கப்பட்டமை அன்றைய தேசிய தலைவர்களுக்கு உவப்பாக அமையவில்லை. இதற்கான எதிர்வினையாகவே 1948இல் சுதந்திரம் பெற்ற உடனே இயற்றப்பட்ட குடியுரிமை சட்டம் இந்தியர்கள் அனைவரின் குடியுரிமையை பறிப்பதாக அமைந்தது. அதன் விளைவாக சுதந்திரத்திற்கு பின்னர் பிரதிநிதிகள் இருந்த நிலை போய் அதற்கு பின்னர் 1977 வரை 30 ஆண்டுகளாக ஒருவரைக்கூட தெரிவு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. அதற்குப் பின்னர் ஏற்பட்ட அரசியல் வளர்ச்சி நாடற்றவர் என்ற நிலை நீக்கப்பட்ட தன் காரணமாக படிப்படியாக அரசியல் பிரதிநிதித்துவம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. 2003ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்ட சீர்த்திருத்தம் காரணமாக நாடற்றவர் நிலை முற்றாக நீங்கியதெனலாம். இந்த அரசியல் வளர்ச்சி போக்கின் அடிப்படையிலேயே சமாந்தரமாக நிலவுரிமையையும் பார்க்க வேண்டியுள்ளது.

### வீடமைப்பும் நிலவுரிமையும்

நில உரிமை வீட்டு உரிமையோடு இணைந்தவொன்று. தோட்டத் தொழிலாளர்கள் வசிப்பிடத் தொழிலாளர்களாக கருதப்பட்டமை யினால் தொழில் செய்யும்வரை வசிப்பிட உரிமை பிரச்சினையாக இருக்கவில்லை. ஆனால் தோட்டப் பொருளாதாரம் இத்தொழிலா ளர்கள் அனைவரையும் உள்வாங்க முடியாத நிலையில் தோட்ட உற்பத்தி பலத்த மாறுதல்களுக்கு உட்பட்டு வருகின்றது. 5ஆம் வகுப் பிற்கே கல்வித்தகுதி மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் தோட்ட வேலை வாய்ப்புகளுக்கும் இளைஞர்களின் எதிர்பார்க்கைகளுக்கும் ஒரு சமநிலை காணப்பட்டது. ஆனால் தோட்டப் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்று ஆரம்பப் பாடசாலைகள் இடைநிலை மற்றும் உயர்தரம் கொண்ட பாடசாலைகளாக தரம் உயர்த்தப்பட்டபோது அங்கு படித்து வெளியேறிய இளைஞர்கள் தோட்டத்திற்கு வெளியே வேலை வாய்ப்பை நாடத் தொடங்கினர். தோட்டங்களில் வழங்கப்படுகின்ற கூலியும் அவர்களை திருப்திப்படுத்துவதாக அமையவில்லை. தோட்டத்தொழில் ஒரு மரியாதைக்குரிய தொழிலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதப்படவில்லை. அது கீழ்மட்ட கூலித்தொழிலாக கருதப்பட்ட மையும் இளைஞர் வெளியேற்றத்திற்கு காரணமாக அமைந்தது. நகரப்புறத்தை நோக்கிய வெளியேற்றம் தோட்டங்களில் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் அல்லாதவர்கள் (Non Worker) என்ற இரு பிரிவுகள் உருவாகத் தொடங்கின. தொழிலாளர்கள் அல்லாதவர்கள் தொழிலாளர்களை அண்டியிருந்தமையினால் வீட்டில் வசிப்பிட உரிமை பிரச்சினையாக எழவில்லை. இந்தப் பின்புலத்தில் லயன் வீடுகளுக்கு பதிலாக தனி வீட்டுத் திட்டம் அரசாங்க கொள்கையாக வளர்ச்சி பெற்றுவருகின்றது. இதன் அடுத்தக் கட்டமாக இவற்றிற்கு சட்ட ரீதியான உரிமைகளை கோரிக்கை அரசாங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தற்போது சட்டரீதியான உரிமம் வழங்கப்பட்டு வருகின்றது. வீட்டிற்கான பரப்பு 7 பேர்ச் காணி என்பது போதாது என்ற அடிப்படையில் வீட்டிற்கான நிலப்பரப்பு 10 பேர்ச் என அரசாங்கம் தற்போது கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளது.

இது எவ்வாறு நடைமுறைப்படுத்தபடப் போகின்றது என்பது பற்றி எவ்வித அறிவிப்புகளும் இன்னும் வெளியாகவில்லை. 10 பேர்ச் காணி வழங்கப்படும் எனவும் அதில் வசதி உள்ளவர்கள் வீடுகளை கட்டிக் கொள்ளலாம் என்பது இப்போதைய நிலைமை யாகும். அரசாங்கம் இலவசமாக கட்டிக் கொடுக்கின்ற வீடுகள் எத்தகையதாக அமையும் 7 பேர்ச் பெற்றவர்களுக்கும் தங்களுக்கும் இன்னும் 3 பேர்ச் அதிகமாக கோரிக்கைகள் முன்வைப்பார்களா என்பது விடை காணவேண்டிய விடயங்களாகும்.

### வாழ்வாதாரத்திற்கான காணி

வாழ்வாதாரத்திற்கான காணி என்பது இதுவரையில் வெறுமனே கோரிக்கை மட்டத்திலேயே இருந்து வருகின்றது. 20பேர்ச் காணி தேவை, பயிரிடப்படாத நிலங்களை பகிர்ந்தளிக்க வேண்டும் போன்ற கோரிக்கைகள் தற்போது பரவலாக முன்வைக்கப்படுகின்றது. இந்தச் சூழ்நிலையில் இரண்டு விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினக்கூலி ரூபா 1000/ - என்ற கோரிக்கை வலுவடைந்த நிலையில் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் இதனை வழங்க முடியாத நிலையில் இதற்கு மாற்றீடாக வெளிவாரி உற்பத்தி முறை அல்லது வருமான பகிர்வுமுறை (Out Grower System or Revenue Sharing Model) என்ற மாதிரியை தோட்ட நிருவாகங்கள் உற்பத்திக்காக அறிமுகப்படுத்தியுள்ளது. பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் (Regional Plantation Companies) பலவற்றில் இம்முறை பின்பற்றப்படுகின்றது.

இம்முறைமையின் கீழ் ஒரு குறிப்பிட்ட பரப்பு அல்லது தேயிலை செடிகள் ஒரு தொழிலாளிக்கு ஒரு வருடம் அல்லது 6 மாதம் குத்தகைக்கு விடப்பட்டு அந்த நிலப்பரப்புகளை பராமரித்து அதன் விளைச்சலை கம்பெனி நிர்வாகத்திற்கு நிச்சயிக்கப்பட்ட விலையில் கையளிக்க வேண்டும். தேயிலை மலையின் பராமரிப்பு வேலைகளான புல் வெட்டுதல், மருந்தடித்தல், உரமிடுதல், கவ்வாத்து வெட்டுதல் போன்றவற்றை தங்களது செலவிலே செய்து முறையாக கொழுந்தை பறித்து நிர்வாகத்திற்கு அளிக்க வேண்டும். இவற்றை செய்ய தவறின் வழங்கப்பட்ட நிலப்பரப்பை எந்த நேரமும் தோட்ட நிர்வாகம் திரும்ப பெற்றுக் கொள்ளும். வழங்கப்படும் வேலை நாட்கள் தோட்டத்திலே வேலை செய்ய வேண்டும். இந்த வருமானத்தில் அவர்களுக்குரிய சேமலாப நிதி தொழிற்சங்க சந்தா போன்றவை கழிக்கப்படும். இதனால் இவர்களது வருமானம் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது. தோட்ட நிர்வாகத்தின் மேற்பார்வை இன்றி சுதந்திரமாக இவர்கள் தங்களுக்கு விரும்பிய நேரத்தில் வேலை செய்ய வாய்ப்பு ஏற்படுகின்றது. குறிப்பிட்ட காலத்திற்கு சொந்தக் காணி என்ற உணர்வேற்படுகின்றது. இவர்களுக்கு முயற்சியான்மையில் (Entrepreneurship) பயிற்சி ஏற்படுகின்றது. இதனால் ஒரு சிற்றுடைமை யாளர்களாக மாறுவதற்கு சந்தர்ப்பம் ஏற்படுகின்றதென இந்த முறைமையை அறிமுகப்படுத்தி தோட்ட முதலாளிமார் சம்மேளன அதிகாரி ரொஷான் இராஜதுரை (2020) தனது அறிக்கையொன்றில் குறிப்பிடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த முறைமை பல தோட்டங்களில் நடைமுறைப்படுத்தப் பட்டிருந்தாலும் இவை முற்றிலும் வெற்றியளித்துள்ளது அல்லது தோல்வியடைந்துள்ளது என்று சொல்வதற்கில்லை. எல்லா தோட்டங் களிலும் ஒரே மாதிரியான முறைமை பின்பற்றப்படாமை, ஒப்பந்த நிபந்தனைகள் சரியாக விளங்கப்படுத்தப்படாமை ஆகிய நடைமுறை பிரச்சினைகளும் காணப்படுகின்றன.

வழங்கப்பட்ட நிலப்பரப்பு விளைச்சல் குறைவான பகுதி என்ப தால், அங்கிருந்து போதிய விளைவினை பெற்றுக் கொள்ள முடிய வில்லை. தொழிலாளர் பற்றாக்குறையை போக்கவே இந்த முறைமை மாற்று உபாயமாக முன்வைக்கப்படுகின்றது. தொழிலாளர் தெரிவில் பாராபட்சம் காண்பிக்கப்படுகின்றது என்றவாறு பல விமர்சனங்கள் வைக்கப்பட்டுள்ளது. இவை சில இடங்களில் வெற்றி பெற்றதாகவும் (தெனியாய தோட்டம்) தோல்வியடைந்ததாக (மகாஊவா, கந்தப்பளை) உதாரணங்களாக காட்ட முடியும். இந்த முறைமை காரணமாக இவர்கள் சிற்றுடைமையாளராக மாற்றம் பெறுவதற்கான பயிற்சி ஏற்படுகின்றது என்ற அவதானம் கவனத்திற்குரியது. இரண்டாவது விடயம் தேயிலை உற்பத்தியில் தற்போது முக்கியத்துவம் வகிக்கின்ற சிற்றுடைமையாளர் முறைமையாகும். தேயிலை உற்பத்தியில் 4 வகையானவர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

01 பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் (Regional Plantation Companies)

02 (i) அரச நிறுவனங்களான மக்கள தோட்ட அபிவிருத்தி சபை (Janatha Estate Development Board - JEDB)

(ii) அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் (State Plantation Corporation - SPC)

03. தனியார் தோட்டங்கள் (Private Estate)

04. சிற்றுடமைகள் (Small Holdings)

வரலாற்று ரீதியாக நோக்குகையில் 1972ஆம் ஆண்டு காணிச் சீர்த்திருத்த சட்டம் அறிமுகப்படுத்தும் வரை அனைத்து தோட்டங்களும் தனியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் வெளிநாட்டு கம்பனிகள் வசமே இருந்து வந்தன. 1975ஆம் காணிச் சீர்த்திருத்த சட்டத்தின் பின்னர் வெளிநாட்டு கம்பனிகளிடம் இருந்த தோட்டங்கள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்று கொண்டது. அத்தோடு உள்நாட்டு தனியாருக்கு சொந்தமாக இருந்த தோட்டங்களின் உரிமையாளர் ஒருவர் 50 ஏக்கர் தோட்டத்தையே சொந்தமாக வைத்திருக்கலாம் என்ற உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டு ஏனையவற்றை அரசாங்கம் பொறுப்பேற்று கொண்டது.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு மேல் இருந்தால் ஒவ்வொருவருக்கும் 50 ஏக்கர் பெற்றுக் கொள்ளலாம் என்ற வசதி இருந்தமையினால் சில தனியார் தோட்டங்கள் 200-250 ஏக்கர் பரப்பினைக் கொண்டதாக காணப்படுகின்றன. நான்காவதாக சிற்றுடைமையானது 10 ஏக்கருக்கு குறைவாக உள்ள நிலப்பரப்பாகும். இவற்றில் தனியார் தங்களது குடும்ப அங்கத்தினரையோ அல்லது பிற தொழிலாளர்களை வேலைக்கமர்த்தி இந்த நிலப்பரப்பினை பராமரித்து விளைச்சலைப் பெற்று தனியார் தொழிற்சாலைக்கு சந்தை விலையில் விற்பனை செய்யலாம். 1967இல் இம்முறைமை உருவாக்கப்பட்டு தற்போது அது ஒரு பாரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. இத்தகைய உடைமைகள் 1980களில் ஒரு இலட்சமாக இருந்து 2020களில் நான்கு இலட்சமாக உயர்ந்துள்ளது. நாட்டின் மொத்த தேயிலை உற்பத்தியில் தற்போது 70 சதவீத பங்கினையும் பெருந்தோட்ட கம்பனிகள் 30 சதவீத பங்கினை கொண்டுள்ளன.

இன்றைய தோட்ட கம்பெனிகள், பரந்த நிலப்பரப்பை கொண்டிருந்தாலும் தொழிலாளர் பற்றாக்குறைக் காரணமாக அவை முழுக்கவும் பயன்படுத்த முடியாத நிலை காணமுடிகின்றது. பயிரிடப்படாத நிலங்களின் அளவும் அதிகமாகி செல்வதும் தோட்டத் தொழிலாளர் களின் எண்ணிக்கையும் பாரிய அளவில் வீழ்ச்சிக் கண்டுவருகின்ற மையும் அவதானிக்கத்தக்கது. தொழிலாளர்களின் பற்றாக்குறை வேறு பகுதிகளிலிருந்து தொழிலாளர்களை கொண்டு வருதல் போன்றவை இடம்பெற்று வருகின்றது. இத்தகைய பின்புலத்தில் நிலவுரிமை வழங்குதல் என்பது எவ்வாறு நிறைவேறும். அதற்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறிமுறை என்ன என்பதே இறுதியாக விடைக் காணப்பட வேண்டிய வினாவாகும்.''

தேயிலையை மையமாகக் கொண்ட மலையக மக்கள் நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, மாத்தளை, கண்டி, பதுளை, களுத்துறை, மாத்தறை, மொனராகலை போன்ற மாவட்டங்களில் செறிந்தும் அரிதாகவும் வாழ்ந்து வருகின்றனர். வெளிவாரி உற்பத்தி முறை குறிப்பாக இரத்தினபுரி, மாத்தறை, பதுளை, நுவரெலியா போன்ற மாவட்டங்களிலேயே பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்த பகுதிகளில் விமர்சனங்களுக்கு மத்தியில் இம்முறைமை தொடர்கின்ற நிலைமை காணப்படுகின்றது. ஏறக்குறைய பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளே இதை நடைமுறைப்படுத்துகின்றன. சில மாவட்டங்களில் பதுளை, இரத்தினபுரி, தெனியாய போன்ற பகுதிகளில் நிர்வாகம் வழங்கிய உள்வாரி உற்பத்தி முறைக்கும் மேலதிகமாக வெறுமனே பயிரிடப்படாத நிலங்களை கையகப்படுத்தி தேயிலை உற்பத்தி செய்கின்ற போக்கு காணப்படுகின்றது. சில தோட்டங்களில் தோட்ட நிர்வாகத்தின் அனுமதியுடனே இது இடம்பெறுகின்றது. சில தோட்டங்களில் இவற்றிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப் பட்டுள்ளன. தொழிலாளர்கள் தங்களை சிற்றுடைமையாளர்களாக மாற்றிக் கொள்ள முயற்சிக்கின்றனர் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

இந்த நிலைமையில் வாழ்வாதாரத்திற்காக நிலவுரிமை வழங்குதல் என்பது 10 பேர்ச் காணியோடு மட்டுப்படுத்தப்படுவதா? அல்லது சிற்றுடைமையாளர்களாக அவர்களை மாற்றுவதா? என்பதில் முதலாவது அம்சத்தினை வெளிவாரி உற்பத்தி முறைமையில் காணக்கூடியதாக உள்ளது. இதனை நீண்டகால குத்தகையாகக் கொடுக்கலாம். ஆனால் தோட்ட நிர்வாகத்திற்கு உட்பட்டதாகவே அது தொடர்ந்திருக்கும். தோட்ட உற்பத்தி அமைப்பு முறை தொடர்ந்திருக்கும். சிற்றுடைமையாளர்களாக மாறும் பட்சத்தில் அவர்கள் சுதந்திர விவசாயிகளாக மாறிவிடுவர்.

தோட்ட நிர்வாகம் பயிர்ச்செய்கையில் (Cultivation) தம்மை ஈடுபடுத்திக் கொள்ளாது பதப்படுத்தலில் (Processing) தேயிலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்சாலை மூலமாக பங்கெடுத்துக் கொள்ளும். இவ்வளவு காலமாக தொழிலாளர்களுக்கு நிர்வாகம் வழங்கி வந்த வசதிகள், சலுகைகள் என்பவற்றை நிறுத்திக் கொள்ளும். குழந்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு, தாய்மாருக்கும் கர்ப்பினிகளுக்கும் வழங்கும் சில சலுகைகள், இறப்பின்போது வழங்கப்படும் சில உதவிகள், மருத்துவ வசதிகள் போன்றன வழங்கப்படமாட்டாது. தொழிலாளர்கள் என்ற நிலையை இழப்பதால் ஊழியர் சேமலாபநிதி போன்ற ஓய்வுநிலைக்கு பின்னராக பாதுகாப்பு இல்லாது போகும். இந்த வகையில் தோட்டப் பொருளாதாரம் என்பது மாறி கிராமமாக மாறும். தோட்டங்கள் அனைத்தும் புதிய கிராமங்களாக உருப்பெறும்.

## முடிவுரை

இந்த முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் அரசாங் கத்தின் கொள்கைத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே அது அமைய வேண்டும். இந்த வகையில் கவனத்திற்குரியவைகளாக அமைவது 2005இல் வெளியிடப்பட்ட மகிந்த சிந்தனை என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தில் (எதிர்கால நோக்கு 2010) தோட்ட சமுதாயத்தை வீட்டினை சொந்தமாக கொண்ட ஒரு சமுதாயமாக உருவாக்கப்படும் என கூறப்பட்டுள்ளது. பெருந்தோட்ட பொருளாதாரத்திற்கு அதிகம் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ள இவ்வாவணத்தில் சிறு உரிமை யாளர்கள் மிகவும் மும்முரமாக ஊக்குவிக்கப்படுவார்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவினால் 2015இல் வழங்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தின் இறுதி அத்தியாயத்தில் தோட்ட சனத் தொகை என்ற பகுதியில் சில உறுதிமொழிகள் வழங்கப்பட்டுள்ளன. எல்லோருக்கும் சமமான உரிமையையே அனுபவித்து சமமானவர்கள் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்றவாறு பல விடயங்கள் கூறப்பட்டிருந்தாலும் வீட்டுரிமை பற்றியோ நிலவுரிமை பற்றியோ ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இது மகிந்த சிந்தனையிலிருந்து வேறுபட்டதொன்றாக இருந்தமையினை இங்கு குறிப்பிட வேண்டியதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிந்த சிந்தனை 2005இன் படி 'ஒவ்வொரு தோட்டத் தொழிலாளர் களுக்கும் ஒரு நிலத்துண்டு வழங்குவேன். ஏனைய பிரஜைகளைப் போல சொந்தமாக இந்தச் சமுதாயம் நிற்க நான் உதவி செய்வேன்' தாங்கள் வசிக்கும் வீடுகளில் வசிக்கின்ற நிலத்திற்கு சட்டரீதியான உரிமங்கள் வழங்குவதற்கு கொள்கை தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் எவ்வித செலவுமின்றி மேற்கொள்ளப் படும். தற்போதைய நிகழ்ச்சித் திட்டத்தின்படி 20 வருடங்களின் பின்னர் தொழிலாளர்களுக்கு சட்ட ரீதியான உரித்து வழங்க தகுதி உள்ளவர்களின் அத்தகைய நிலங்களுக்கு நான் உரிமம் வழங்குவேன் (மகிந்த சிந்தன 2006) எனக் கூறப்பட்டுள்ளது. ஆனால் 2010இல் தேசிய திட்டமிடல் திணைக்களம், இதனை ஒரு கொள்கை ஆவணமாக வெளியிடப்பட்டபோது அதில் இவைபற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தகது. 'கந்துரட்ட உதானய' என்ற மாகாண மட்டத்திலான அபிவிருத்தி முனைப்புகளில் தோட்டங் களுக்கும் கிராமங்களுக்குமிடையில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள் வித்தியாசங்கள் நீக்கப்படும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது.

இதே காலப்பகுதியில் ஒரு 'பலம் பொருந்திய தேசமும் நியாய பூர்வமான சமூகமும்' என்ற தலைப்பில் சஜித, பிரேமதாசாவின் புதிய ஜனநாயக முன்னணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'மலையக மக்கள்' என்ற தலைப்பில் ஒரு அத்தியாயத்தில் நில உரிமைகள் பற்றிய விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த மலையக தமிழ் மக்களின் நிலமின்மையையும் வீட்டுப் பிரச்சினையும் தீர்த்து வைப்போம், 7 பேர்ச் உரிமையோடு கூடிய சொந்தக் காணியில் வீடுகளை அமைப்பதற்கு வசதிகள் செய்துகொடுக்கப்படும். ஜனாதிபதி செயலணி ஒன்று நிறுவப்பட்டு மலையக மக்களின் வாழ்வினை உயர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இத்தகைய பிரதான கட்சிகளின் நிலைப்பாடுகள் முக்கியமானது. வரலாற்று ரீதியாக நிலம் வழங்களுக்கு காட்டப்பட்ட எதிர்ப்புகளுக்கு மத்தியில் தேர்தல் விஞ்ஞாபனங்கள் வாக்குகளை சேகரிக்க முன் வைக்கும் ஒரு ஆவணமாக இருப்பினும் அவற்றை முன்வைக்கும் கட்சி ஆட்சி அமைக்குமாயின் அதனை மையப்படுத்திய தனது கொள்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானங்களை மேற்கொள்ளும். சில கட்சிகள் தாம் வழங்கிய தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் போன சந்தர்ப்பங்களும் உண்டு. எனினும் தற்போதைய எதிர்கட்சித் தலைவர் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியதைவிட ஒருபடி மேலே சென்று தோட்டத் தொழிலாளர்களை விவசாயிகளாக ஆக்குவோம் என ஒன்றுக்கு மேற்பட்ட தடவை அரசியல் மேடைகளில் கூறியமை பதிவு செய்யப் பட்டுள்ளது. ஆகஸ்ட் 10ஆம் திகதி பாராளுமன்றத்தின் மலையக மக்களின் பிரச்சினை பற்றிய விவாதத்தின்போது ஜனாதிபதி தேசிய ஆணைக்குழு ஒன்று அமைத்து அதன் சிபாரிசுகளை நடைமுறைப் படுத்த ஜனாதிபதி செயலணி ஒன்று நிறுவப்பட வேண்டும் என்று கூறியமை பதிவு செய்யப்படவேண்டியது. எனவே அரசியல் மட்டத்தில் தோட்ட மக்களுக்கு காணி வழங்க வேண்டும் என்பது சாத்தியமாகக்கூடிய வாய்ப்பு உண்டு என கருத இடமுண்டு. தொழி லாளர்களின் நிலவுரிமை அவர்கள் தொழிலாளர்களாக இருந்துகொண்டு பெற்றுக்கொள்வது தற்போது தோட்ட உற்பத்தி முறை பொருளாதார அமைப்பில் முரண்நிலையான ஒன்று. தோட்ட உற்பத்திமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தி தொழிலாளர்களை சிற்றுடைமையாளர்களாக மாற்றினால் நிலவுரிமை பூரணத்துவமுள்ளதாக அமைவதோடு புதிய கிராமங்கள் பிறக்கவும் வழிபிறக்கும்.

**உதவிய நூல்கள்**

Beckford, G.I.Persistent poverty (1972).

Roshan Rajadurai, Revenue Sharing Model, unpublished document

மகிந்த சிந்தனை , 2005

Gotabaya Vistas of Prosperity and Splendour (no year)

New Democratic Front, There is no limit to what Srilankacan achieve (no year)

- ஸ்ரீதர் மலர் - ஆகஸ்ட் 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



6

# தோட்ட தொழிலாளர்கள் சிற்றுடைமையாளர்களாக.....

## அறிமுகம்

பாராளுமன்றத்தில் 2021ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதை தொடர்ந்து மலையகத்தை பொறுத்தவரை அதிகம் பேசப்படும் விடயம் 1000 ரூபா சம்பள அதிகரிப்பாகும். இந்த அதிகரிப்பு கிடைக்கும் அல்லது கிடைக்காது என்பது குறித்த வாத பிரதிவாதங்கள் இடம்பெற்று வந்தன. கம்பனிகள் அந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட உடனேயே தங்களது எதிர்ப்பை தெரி வித்தனர். அத்தோடு அவர்கள் ஒரு மாற்று யோசனையையும் முன்வைத்தனர். இந்த மாற்று யோசனைக்கு தற்போதைய அரசாங் கத்திற்கு எதிரணியில் உள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் மற்றும் பிரதி தலைவர் ப.திகாம்பரம் ஆகியோர் இவர்களை சிற்றுடைமையாளர்களாக மாற்ற வேண்டும் என குரல் எழுப்பி வருகின்றனர். இதே போலவே அரச சார்பில் உள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஜீவன் தொண்டமானும் இதே போன்ற ஒரு கருத்தையே வெளியிட்டுள்ளார். இது குறித்து ஊடகங்களில் கருத்துகள் வெளியிடப்பட்டு வருகின்றன. எனவே இது பற்றிய ஒரு தெளிவான விளக்கத்தை காண முயல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்புலம்**

தோட்ட தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு என்பது தோட்ட தொழிற்சங்களுக்கும் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளுக்கும் இடையே செய்து கொள்ளப்படுகின்ற கூட்டு ஒப்பந்தத்தின் விளை வாகும். இங்கு அரசாங்கத்தின் தலையீடு இடம்பெறுவதற்கு ஒரு பொறிமுறை கிடையாது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் செய்துக் கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் போது 50 ரூபா ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு கொடுப்பனவாக கொடுப்பதற்கு அரசாங்கம் முயற் சித்தும் ஒரு பொறிமுறை இல்லாத காரணத்தினால் அது கைக்கூட வில்லை. மேலும் இந்த அதிகரிப்பு வரவு செலவு திட்டத்தில் வெளி யிடப்பட்ட உடனேயே பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் இது குறித்து தங்களோடு கலந்தாலோசிக்கப்படவில்லை. இந்த அதிகரிப் புக்கு பதிலாக அவர்கள் முன்வைத்த வெளிவாரி உற்பத்தி முறைமை / வருமானத்தினை பங்கீடும் வேதன முறை என்பதே பொருத்தமானது என கூறினர். ஆகவே இந்த நிலைப்பாட்டின் மத்தியிலேயே தோட்ட தொழிலாளர்களை சார்ந்த தலைமைகளின் சிற்றுடைமையாளர்களாக மாற்றுவது என்ற நிலைப்பாட்டை ஆராய வேண்டியுள்ளது.

வெளிவாரி உற்பத்தி முறைமை / வருமானத்தினை பங்கீடும் வேதன முறைமை குறித்து பேராசிரியர் சந்திரபோஸ் ஞாயிறு வீரகேசரியின் (22.11.2020) குறிஞ்சி பகுதியில் மிக விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இக் கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளவாறு கடந்த சில வருடங்களாக கம்பனிகளால் பல தோட்டங்களில் இம் முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி தோட்டத்திலே உள்ள எல்லா தொழிலாளர்களில் தெரிவு செய்யப்பட்ட வர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பரப்பினை குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகை ரீதியில் கொடுத்து சில நிபந்தனைகளின் அடிப்படையில் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட கொழுந்தினை பெற்றுக்கொள்ளும் முறையாகும். இங்கு தொழிலாளர்களுக்கு இத்தோட்டங்களில் ஒரு குறிப்பிட்ட நாட்கள் வேலை கொடுக்கப்பட்டு அந்த நாட்களுக்கு அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட கூலி வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய நாட்களில் அவர்கள் கொடுக்கப்பட்ட நிலப்பரப்பில் இருந்து கொழுந்து பறித்து ஒரு குறிக்கப்பட்ட தினங்களில் தவறாமல் அவர்கள் தோட்ட நிர்வாகத்திற்கு அதை குறிக்கப்பட்ட விலையில் விற்கலாம். இதை குறித்த தோட்டத்திற்கு வெளியே உள்ள வேறு தொழிற்சாலைகளுக்கு விற்கமுடியாது. சந்தையில் விற்கப்படும் தேயிலையின் விலைக்கு ஏற்ப இந்த கொழுந்தினுடைய விலை முன்கூட்டியே நிர்ணயிக்கப்படும். இது இரண்டு தரப்பினருக்கும் அதாவது தொழிலாளருக்கும் கம்பனியினருக்கும் நன்மை பயக்க கூடிய விடயமாகும். தொழிலாளர்களை பொறுத்தவரை அவர்களுக்கு 10 நாட்கள் தான் வேலை கிடைத்தாலும் அவர்களது வருமானம் ஒரு உயர்நத நிலையில் அமையக் கூடியதாக இருக்கும். இது நடைமுறைப்படுத்தப்படும் தோட்டங்களில் இந்த வருமான அதிகரிப்பு அடையப்பெற்றுள்ளது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

கம்பனிகளை பொறுத்தவரை முழு தோட்டமும் உற்பத்திக்கு உட்படுத்தப்படுகின்றது. தொழிலாளர்களுக்கு மாதம் முழுவதும் வேலை கிடைக்கின்றது. எனவே அவர்கள் தோட்டங்களிலேயே இருக்க வேண்டிய சூழல் உருவாகின்றது. வெளி வேலைகள் செய்துக்கொண்டாலும் தோட்டங்களில் நிரந்தமாக இருப்பதற்கு இது வழி வகுக்கின்றது. தொழிலாளர்களை பொறுத்தவரை இதனு டைய பாதகமான அம்சங்களாக இவர்களது ஊழியர் சேமலாப நிதி, வேலை செய்யும் பத்து நாட்கள் மாத்திரமே கிடைக்கக்கூடியதாக உள்ளது. மற்றையது குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ள நிலப்பரப்புகள் விளைச்சல் குறைந்த செடிகளை கொண்டதாகவும் காணப்படுகின்றது. இரு தரப்பினரும் செய்துக் கொண்ட ஒப்பந்தத்தில் சில சரத்துக்கள் தொழிலாளர்களுக்கு பாதகமாக அமைந்துள்ளன எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. உதாரணமாக கொடுக்கப்பட்ட நிலப்பரப்பு முறையாக பேணப்படாது இருந்தால் தோட்ட நிர்வாகம் குறிக்கப்பட்ட காலத் திற்கு முன்னரே அதை மீள பெற்றுக்கொள்ள முடியும் என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பறிக்கப்படுகின்ற கொழுந்திற்கான தற்போதைய நடைமுறை விலை அல்லாது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விலைக்கே கொடுக்க வேண்டும் என்ற நிபந்தனையினால் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் கிடைப்பதில்லை என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது. இந்த குத்தகை காலத்தின் போது தோட்ட நிர்வாகமே முழுமையாக இதனை முகாமைத்துவம் செய்யும். கொடுக்கப்பட்ட நிலப்பகுதியினை பராமரிக்க வேண்டியது தொழிலாளர்களை சார்ந்த ஒன்றாகும். இதற்கான மருந்து மற்றும் உரங்கள் போன்றவற்றை தோட்ட நிர்வாகம் வழங்கினாலும் இதனுடைய செலவை தோட்ட தொழிலாளர்களிடம் இருந்தே மீண்டும் பெற்றுக் கொள்கின்றது.

எனவே ஆரம்ப காலத்தில் இந்த முறைமை பல தோட்டக் கம்பனிகளில் நடைமுறைப்படுத்தினாலும் தற்போது மடுல்சீமை போன்ற ஒரு சில கம்பனிகளே நடைமுறைப்படுத்தி வருவதாக அறியக்கூடிதாக உள்ளது. இதனுடைய நடைமுறைபடுத்தல் பற்றிய ஒரு முறைமையான ஆய்வு இன்னும் வெளிவரவில்லை. பேராசிரி யர்கள் எஸ்.சந்திரபோஸ் மற்றும் எஸ்.விஜயசந்திரன் ஆகியோர் இத்தகைய ஒரு ஆய்வை மேற்கொண்டுள்ளனர் என்றாலும் அந்த ஆய்வு முடிவுகள் இன்னும் வெளிவரவில்லை. அவை வெளிவந்தால் இது குறித்து மேலும் ஒரு தெளிவு ஏற்படலாம்.

இத்தகைய சூழலில் தான் 2021 ஜனவரி மாதம் முதல் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு செய்யப்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பை தொடர்ந்து இந்த வருமானத்தினை பங்கீடும் வேதன முறைமையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதில் கம்பனிகள் ஆர்வம் காட்டுவதாக தெரிகின்றது. ஜனவரியில் இது குறித்து பேச்சு வார்த்தை இடம்பெறுமாயின் கம்பனிகள் இந்த முறைமையை வற்புறுத்தும் என எதிர்பார்க்கலாம்.

### சிற்றுடைமையாளர்கள்

இலங்கையின் தோட்ட உற்பத்தியை பொறுத்த வரையில் பெருந் தோட்ட கம்பனிகளும் அரச கூட்டுத்தாபனங்களும் சிற்றுடைமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் ஈடுபட்டு வருகின்றனர். கிடைக்கக்கூடிய புள்ளிவிபரங்களின் படி இரு தரப்பினருடைய வகிபாகம் நிலப்பரப்பு மற்றும் உற்பத்தி ஆகிய இரண்டையும் பொறுத்தவரையில் மாற்றம் அடைந்து வருவது காணக்கூடியதாக உள்ளது. 1995 இல் தோட்ட மொத்த நிலப்பரப்பில் கம்பனிகளுக்கு 49 சதவீதமும் அரச கூட்டுத்தாபனங்களுக்கு 5 சத வீதமும் சிற்றுடைமையாளர்களுக்கு 46 சதவீதமும் ஆக காணப் பட்டது. ஆனால் இது 2012 இல் கம்பனிகளின் பங்கு 35 சதவீத மாகவும். அரச கூட்டுத்தாபனங்களின் பங்கு 6 சதவீதமாகவும் சிற்று டைமையாளர்களின் பங்கு 59 சதவீதமாகவும் மாற்றம் அடைந்துள்ளது. கம்பனிகளின் பங்கு குறைந்த செல்லுகின்றமையும் சிற்றுடை மையாளர்களின் பங்கு அதிகரித்து செல்கின்ற போக்கு இங்கு கவனித்தக்கது. இதற்கேற்ப தற்போது கம்பனிகள் உற்பத்தியை பொறுத்த வரையில் 28 சதவீதத்தை மாத்திரமே கொண்டிருக்க சிற்றுடைமைகள் 72 சதவீதத்தை கொண்டுள்ளது. இந்த வகையில் முழு உற்பத்தியை பொறுத்த வரையில் சிற்றுடைமைகளின் வகிபாகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறி வருவது வெளிப்படையான தொன்றாகும்.

மலையக அரசியல் மற்றும் தொழிற்சங்க தலைமைகளின் வாதமான தொழிலாளர்களுக்கு தோட்டங்களை பகிர்ந்தளித்து சிற்று டைமையாளர்களாக அல்லது சிறு விவசாயிகளாக ஆக்குவதே ஒரு நிரந்தரமான வழி என்பது சாத்தியமானதா என்பதே இங்கு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். 1980 ஆம் ஆண்டில் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் (ILO) மேற்கொண்ட தேயிலை பெருந்திட்ட ஆய்வில் (Tea Master Plan Study) இந்த தோட்ட தொழிலாளர்களுக்கு தோட்டங் களை பிரித்து சிறிய அளவில் நடைமுறையில் இருந்த சிற்றுடைமை களை போன்று இவர்களுக்கும் வழங்கப்படுவது குறித்து கவனத்தை செலுத்தியிருந்தது. அப்போது நாட்டில் தேயிலை உற்பத்தியில் ஏறக்குறைய ஒரு இலட்சம் அளவிலான சிற்றுடைமையாளர்கள் காணப்பட்டனர். தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த முறைமையை வழங்குவதில் பிரதான தடையாக அடையாளம் கண்டது தொழிலா ளர்களில் பெரும்பாலானோருக்கு இலங்கை குடியுரிமை இல்லாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்தமையாகும். இதே ஆண்டில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் மறைந்த எஸ். தொண்டமான் அவர்களுடைய முனைப்பின் படி மார்கா என்ற (Marga) நிறுவனம் செய்த ஒரு ஆய்வில் சிற்றுடைமை யாளர்களாக இவர்களை ஆக்குவது பற்றி சிபாரிசு செய்தது. ஆனால் இந்த அறிக்கை சில காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை. அதற்கு பின்னர் ஏறக்குறைய 4 தசாப்த காலத்திற்கு பின்னரே மீண்டும் இந்த குரல் எழுப்பப்படுகின்றது.

**முன்மொழிவுகள்**

- கம்பனிகள் தற்போது முன்வைத்துள்ள வெளிவாரி உற்பத்தி முறைமையின் / வருமானத்தினை பங்கீடும் வேதன முறைமையின் படி ஒரு தோட்டத்தின் சில பகுதிகளே பல கட்டுப்பாடுகளின் அடிப்படையில் குத்தகை முறைமை மூலமாக தோட்ட தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. ஆகவே தோட்ட தொழிலாளர்களாகவும் குத்தகையாளராகவும் காணப்படுகின்ற ஒரு நிலைமையை அவதானிக்கலாம். முதல் கட்டமாக இவர்கள் முழுமையாக குத்தகையாளர்களாக ஆக்கப்பட வேண்டும். இடை மாறும் காலக்கட்டத்தில் (Transitional period) இவற்றை தோட்ட கம்பனிகள் முகாமைத்துவம் செய்யலாம்.
- இந்த நிலப்பரப்புக்கான தொழிலாளர்களை தெரிவு செய்கையில் தோட்டங்களில் தொழிலாளர்களாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை அளித்து குடும்ப எண்ணிக்கையினர் அடிப்படையில் குத்தகை இடப்படும் நிலப்பரப்புகள் நிர்ணயம் செய்யப்படலாம். தோட்டங்களில் சட்ட ரீதியாக வாழ்பவர்களுக்கும் (Legal Resident) இந்த குத்தகை முறைமையில் சேர்த்துக் கொள்ளப்படலாம்.
- இந்த நிர்ணயிக்கப்பட்ட இடை மாறும் காலம் முடிவடைந்ததற்கு பின்னர் இந்த தோட்டங்களை கம்பனிகளிடம் இருந்து அரசாங்கம் மீள பெற்று நேரடியாக இந்த குத்தகை முறைமையை அரசாங்கமே அமுல்ப்படுத்தலாம். கம்பனிகள் தேயிலை பறிக்கும் உற்பத்தி அம்சத்தில் (Cultivation) இருந்து படிப்படியாக நீக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு தேயிலையை பதப்படுத்தும் (Manufacturing) பொறுப்புக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படட வேண்டும். குத்தகை ஒப்பந்தம் தோட்ட தொழிலாளர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலாக அமையும். இதனை மேற்பார்வை செய்கின்ற பொறுப்பு கம்பனிகள் இல்லாத நிலையில் தோட்டங்களிலேயே அமைந் துள்ள தோட்டத் தொழிலாளர்கள், வீடமைப்பு கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படலாம். இவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு மலைநாட்டு புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபைக்கு கொடுக்கப்படலாம்.

## இம்முன்மொழிவுகளின் முக்கியத்துவம்

வரலாற்று ரீதியில் இம்முன்மொழிவு ஒரு புரட்சிகரமான ஒன்றாகும். கடந்த 150 வருட கால தேயிலை உற்பத்தி வரலாற்றில் கம்பனி முறையே தேயிலை உற்பத்திக்கு பொறுப்பாக அமைந்து வந்துள்ளது. இந்த தோட்ட அடிப்படையிலான உற்பத்தி முறைமையை முற்றாக மாற்றி அமைப்பது என்பது மிக இலகுவான ஒன்றல்ல. தோட்ட உற்பத்தி முறைமைய ஒரு பொருளாதார அமைப்பு மாத்திரம் அன்றி ஒரு அடைப்பட்ட சமுதாய அமைப்பாகவும் உருவாகி வந்ததுள்ளது. இங்கு தோட்ட தொழிலாளர்கள் கம்பனிகளையே தங்களுடைய தேவைகள் அனைத்திற்கும் எதிர்பார்த்திருந்தனர். தோட்ட தொழிலாள ருடைய நலனை கருவறையில் இருந்து கல்லறை வரைக்கும் கவனித்து கொள்ளுகின்ற பொறுப்பு தோட்ட நிர்வாகத்திற்கே உரியது என கருதப்பட்டது. தங்கியிருக்கும் ஒரு நோய்குறியாக (Dependency Syndrome) இது இணங்காணப்பட்டது. எனவே தான் நாடு சுதந்திரம் அடைந்த காலத்திற்கு பின்னரும் குடியுரிமைகளை பெற்றதற்கு பின்னரும் அரசாங்கத்தினுடைய ஆட்சி பரப்பில் இவர்கள் உள்வாங்கப் படவில்லை. தோட்ட சமுதாயத்தை இந்த அரசாங்க ஆட்சி பரப்புக்குள் ஒன்றிணைக்க வேண்டும் என்பதே பிரதான தேவையாக இருந்து சமீப காலத்தில் அரசியல் கோரிக்கையாக மாறியது. தங்களுடைய சமூக பொருளாதார அரசியல் உரிமைகளை முழுமையாக நிறை வேற்றிக் கொள்வதற்கு தோட்ட நிர்வாக முறைமை ஒரு பிரதான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடைக்கல்லாக அடையாளம் காணப்பட்டது. இத்தொழிலாளர்கள் கம்பனி நிர்வாகத்தில் இருந்து விடுபடுபவர்களேயானால் அதுவே அவர்களது பூரண விடுதலைக்கு வழிகாட்டியாக அமையும்.

## மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

இம்முன்மொழிவுக்கு பலத்த எதிரப்புகள் உருவாகலாம். காரணம் இந்த தோட்ட மக்களுக்கு ஏழு பேர்ச் காணி உரிமை வழங்க எடுக்கப் பட்ட முயற்சிக்கு பலத்த எதிர்ப்பு இருந்து வந்தது. தோட்ட கம்பனிகள் இலகுவாக ஏழு பேர்ச் காணியை விட்டுக்கொடுப்பதற்கு தயாராக இருக்கவில்லை. பலத்த எதிர்ப்புகளின் மத்தியிலேயே வீட்டிற்கான ஏழு பேர்ச் காணி உரிமையை பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது.

கம்பனிகள் இந்த மக்களின்மேல் கொண்டிருந்த முகாமைத்துவ அதிகாரத்தினை இலகுவாக விட்டுவிட மாட்டார்கள். தற்போதைய இனத்துவ அரசியல் சூழலில் தோட்ட தொழிலாளர்களில் பெரும்பான் மையோர் சிறுபான்மை இனக்குழுவினரை சார்ந்திருப்பதால் அரசியல் மற்றும் அரசாங்க உயர் பீடங்களில் இதற்கான ஆதரவினை பெற்றுக் கொள்வதும் இலகுவான ஒன்றல்ல. எனவே இந்த தோட்ட சமுதா யத்தை பொறுத்தவரையில் இம்முன்மொழிவு குறித்து அரசியல் வேறுபாடுகளை கடந்து ஒரு ஒருமித்த கருத்து உருவாக்கப்பட வேண்டும். இதற்கான கலந்துரையாடல்கள் மக்கள் மத்தியிலே அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், புத்திஜீவிகள், ஏனைய சமூகம்சார் அமைப்புகள் இதனுடைய சாதக பாதகங்கள் குறித்து ஆராய வேண்டும். அதன் பின்னர் ஒரு ஒத்தக்கருத்து உருவாகுமானால் அதுவே அரசியல் கோரிக்கையாக பரிணமிக்கும்.

மக்கள் மத்தியிலே ஒரு ஒருமித்தக் கருத்து உருவானதன் பின்னால் இதற்கான ஆதரவு தளம் ஏனைய சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை மக்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். இனத்துவ ரீதியான எதிர்ப்புகளின் மத்தியில் முற்போக்கு எண்ணம் கொண்ட அரசியல் அமைப்புகள், மற்றும் பெரும்பான்மையின புத்திஜீவிகள் மற்றும் சிவில் அமைப்புகள் போன்ற தரப்பினரின் ஆதரவு பெறப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் மற்றும் அரசாங்க மட்டத்திலே இது ஏற்றுக்கொள்ளப் படுவதற்கு இது குறித்த ஒரு தொழில்நுட்ப முன்மொழிவு உருவாக்கப் படல் வேண்டும். இத்துறையில் விஷேட நிபுணத்துவம் கொண்ட அறிஞர்களால் முன்மொழிவு உருவாக்கப்பட வேண்டும். இதற்கு வெளிநாட்டு உதவிகளும் பெற்றுக் கொள்ளப்படலாம்.

மலையகத்தின் பிரதான அரசியல் கட்சிகள் இதை தங்களுடைய பேரம் பேசும் சக்தயினூடாக பேச்சுவார்தை நடத்த வேண்டும். இந்த படிமுறைகள் பின்பற்றப்படுமாக இருந்தால் தோட்ட தொழிலாளர்கள் சிற்றுடைமையாளர்களாக மாறுகின்ற ஒரு இலட்சியம் நிதர்சன மாகலாம்.

- தினக்குரல், வீரகேசரி - 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



7

## மு.சி. கந்தையாவின்
## 'சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்'

இலங்கையின் தேசிய இனங்களில் சுதந்திரமடைந்த காலப்பரப்பில் இரண்டாவது நிலையிலிருந்த இந்திய வம்சாவளித் தமிழர்களின் அடையாளம் காலப்போக்கில் மலையக மக்கள் என்று மாற்றமடைந்த நிலையில், சனத்தொகையில் நான்காவது நிலையை அடைந்துள்ள உருக்குலைந்த வரலாற்றினைச் சான்றாதாரங்களுடன் தனது அரசியல் நிலைப்பாட்டில் உணர்வு ரீதியாக வெளிப்படுத்துவதாக அரசியல் செயற்பாட்டாளர் மு.சி.கந்தையா எழுதியுள்ள ''சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்'' என்ற நூல் அமைந்துள்ளது. நூலாசிரியர் இலங்கையில் அவரது இளமைக்காலம் வரை அரசியல் சமூக இலக்கியத் துறைகளில் ஈடுபாடு காட்டியவராய் வாழ்ந்து, 1980களில் ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தம் காரணமாக நாட்டை விட்டகன்ற இலட்சக்கணக்கானவர்களில் ஒருவராகத் தமிழ்நாட்டின் கூடலூர் பிரதேசத்தில் குடியேறி தனது ஈடுபாடுகளைத் தொடர்ந்து கொண்டிருப்பவர் ஆவார். அவரது சமூக, அரசியல் ஈடுபாடு மற்றும் அக்கறை காரணமாக உருவானதாக இந்நூல் திகழ்கின்றது.

இந்த நூல் மலையக மக்கள் தென்னிந்தியாவிலிருந்து இலங்கையில் பிரித்தானியர்களின் ஆட்சி நிலைபெறத் தொடங்கிய காலப் பகுதியான 1820களில் ஆரம்பிக்கப்பட்ட கோப்பி பின்னர் தேயிலை, இறப்பர் பயிர்ச் செய்கைக்காகத் தொழிலாளர்களாகக் குடிவந்தவர்கள் ஒரு சமூகமாக உருவாகிப் பின்னர் தேசிய இனங்களில் ஒன்றாகப் பரிணமித்து பின்னர் சிதைக்கப்பட்ட துயரந் தோய்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றை உணர்வுபூர்வமாக எடுத்துக் கூறுகின்றதாய் அமைந் துள்ளது. இச்சமூகத்தினரின் இருநூற்றாண்டு கால வரலாறு மூன்று பகுதிகளாகப் பிரித்து நோக்கப்பட்டுள்ளது. முதலாவது பகுதி 1820 முதல் 1920 வரை உள்ளடக்கியதாயும், இரண்டாவது பகுதி 1920முதல் 1970 வரையான காலப் பகுதியும் மூன்றாவது பகுதி 1970 முதல் 2015 வரை காலப்பகுதியையும் கொண்டதாக வரலாற்றுச் சம்பவங்கள் தொகுத்து அரசியல் விமர்சன ரீதியில் புலமை சார்ந்த வகையில் விளக்கப்பட்டிருப்பது சிறப்பானதாகும்.

இத்தகைய வரலாற்று நூல்கள் பல புலமை சார்ந்தும், புலமை சாரா அடிப்படையிலும் ஆங்கிலத்தில் அதிக எண்ணிக்கையிலும் தமிழில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் வெளிவந்துள்ளன. புலமை சாரா என்ற வகைப்படுத்தலுக்குள் உள்ளடக்கப்படக்கூடிய கந்தை யாவின் நூலை ஒத்ததாக எஸ். நடேசன் ஆங்கிலத்தில் எழுதியுள்ள இந்தியத் தமிழர்களின் வரலாறு என்ற நூலை குறிப்பிடலாம். இவரும் இலங்கைக் கம்யூனிசக் கட்சியைச் சார்ந்தவர். இந்த வரிசையில் அடக்கக்கூடிய இன்னுமொரு ஆங்கில நூல் யோகேஸ்வரி விஜயபாலன் எழுதிய முடிவில்லா சமத்துவமின்மை (Endless Inequality) அமைகின்றது. இது மலையக மக்கள் வரலாற்று ரீதியாக எவ்வாறு அனைத்து அம்சங்களிலும் புறக்கணிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டனர் என்பதைச் சட்ட ரீதியாக ஆவணப்படுத்துகின்ற ஒரு புலமை சார்ந்த நூலாகும். ஒப்பீட்டு அடிப்படையில் நூல்களுக்கான சான்றாதாரங்களை நடேசன் மற்றும் யோகேஸ்வரி ஆகியோர் ஆங்கில மொழியிலிருந்து பெற்றுக் கொள்ள, கந்தையா பெருமளவில் தமிழில் வெளியான நூல்களிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளார் என்பது குறிப்பிட வேண்டியதொன்றாகும்.

ஆரம்ப வரலாற்றைக் கூறும் முதலாம் பகுதியில் ஒரு முக்கிய வாதத்தினை முன்வைத்துள்ளமை குறிப்பிட்டுக் கூறக்கூடியதாகும். கோப்பிக் காலத் தொழிலாளர்கள் குடியேறிய பின்னர் அவர்கள் நீண்ட காலம் தோட்டங்களில் தங்கியிருக்கவில்லை. கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு நிரந்தர தொழிலாளர்கள் தேவைப்படாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணத்தினால் மீண்டும் அவர்கள் சொந்த நாட்டிற்கே திரும்பிச் சென்றனர். இதன் காரணமாக அவர்கள் நிரந்தர குடியேறிகளாக இருக்கவில்லை. 1860களுக்குப் பின்னர் தேயிலைப் பயிர்ச்செய்கைக்குப் பின்னரேயே அவர்கள் நிரந்தரமாகத் தங்கியிருக்கத் தொடங்கினர் என்ற ஒரு பரவலான கருத்து நிலவியது. இருப்பினும் தொடர்ந்த காலங்களிலும் இம்மக்கள் தொடர்ந்து தமது தாய்நாட்டிற்குப் போவதும் வருவதுமாக இருந்தனர். இலங்கையில் இவர்கள் நிரந்தரமாக வாழ்வதற்காக விருப்பம் கொண்டிருக்கவில்லை என்ற வாதம் இவர்களுக்குக் குடியுரிமை வழங்குகின்ற சட்ட ஏற்பாடுகள் இடம் பெற்ற வேளையிலும் முன் வைக்கப்பட்டது. இதற்கு எதிராக கந்தையா அவர்கள் ஆரம்ப காலத்திலிருந்தே இவர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்தனர் என்பதைப் புள்ளி விபரங்களுடன் நிறுவ முயற்சி செய்துள்ளார். இது குறித்து புலமை சார் ஆய்வாளர்கள் ஆய்வுக்குட்படுத்துவதற்கு இடமுள்ளது.

இன்னுமொரு முக்கிய அம்சமாக நூலாசிரியரால் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது யாதெனில் தேசிய நீரோட்டத்தில் இம்மக்கள் இணையாமல் இருப்பது குறித்து இம்மக்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளமையாகும். இதுவும் இவர்களை இந்தியாவுக்குக் குடியகற்ற எடுக்கப்பட்ட முயற்சிகளின் போது முன்வைக்கப்பட்ட வாதமாகும். தோட்டங்கள் என்ற ஒரு பொருளாதார உற்பத்தி முறைமைக்கு உட்படுத்தப்பட்டு அடைபட்ட நிலையில் தோட்ட நிர்வாகமே கரு முதல் கல்லறை வரை தொழிலாளர்களின் வாழ்வில் செல்வாக்கு செலுத்தக்கூடிய வகையில் கொத்தடிமை நிலையில் இவர்களை வைத்திருந்த காரணத்தினால் இவர்கள் தேசிய நீரோட்டத்தில் இணைவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைவாகவே காணப்பட்டன. உள்ளூராட்சித்தாபனங்கள் தோட்டங்களை உள்ளடக்கவில்லை. 1931இல் வாக்கரிமை வழங்கப்பட்ட நிலையில் உள்ளூராட்சித் தாபனத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கான உரிமை மறுக்கப்பட்ட நிலை காணப்பட்டது. 1948இல் குடியுரிமை மறுக்கப்பட்ட நிலையில் இவர்கள் அரசியல் ரீதியாகப் புறந்தள்ளப்பட்டனர். தொடர்ந்த காலத்தில் அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பில் தோட்டங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கப்படவில்லை. 1987இல் உருவாக்கப்பட்ட பிரதேச சபைகளில் தோட்ட மக்கள் வாக்களித்தாலும், சபைகளின் நடவடிக்கைகள் தோட்டங்களைச் சென்றடைவதில் சட்ட ரீதியான தடைகள் காணப்பட்டன. ஆகவே இம் மக்கள் தேசிய நீரோட்டத்தில் கலந்து கொள்ளாமைக்கு இவர்களைக் குற்றம் சுமத்துவது ஏற்றுக்கொள்ள முடியாதவொன்று என நூலாசிரியர் தர்க்க ரீதியாக வாதிட்டுள்ளார்.

இரண்டாவது காலப்பகுதியாகிய 1920முதல் 1970 வரையில்இம் மக்கள் அரசியல் பிரதிநிதித்துவம் பெற்ற வரலாற்றையும் அதனை இழந்ததையும் எடுத்துக்கூறுவதாகவுள்ளது. ஆரம்ப காலப் பிரதிநிதித்துவம் இந்தியவணிகர் குழுக்களைச் சார்ந்தவர்களாலும் பெரிய கங்காணிகளாலுமே வழங்கப்பட்டதென்பதைச் சுட்டிக்காட்டும் ஆசிரியர் இம் மக்களின் அரசியல் பரதிநிதித்துவமும் தலைமையும் இப்பண்பையே கொண்டிருந்தமையை எடுத்துக் காட்டுகிறார். இந்திய வம்சாவளி என்ற அடையாளம் மலையகத் தமிழர் என உருவாகியதை எடுத்துரைத்து இந்திய சார்புத் தன்மை தொடர்ந்திருப்பதையும் அதன் காரணமாக அரசியல் பரப்பில் ஏற்பட்ட விளைவுகளையும் சுட்டிக்காட்டுகிறார். மார்க்சியக் கொள்கைகளைக் கொண்டிருந்த ஜனதா விமுக்தி பெரமுன கட்சியினரும் இந்தியத் தொழிலாளர்களை இந்திய விஸ்தரிப்புவாதிகளின் ஒரு பகுதியினராகக் காட்ட முயன்ற வரலாற்றுச் சோகத்தையும் கவலையுடன் பதிவு செய்துள்ளார்.

இம் மக்களின் குடியுரிமை 1948இல் பறிக்கப்பட்டதைத் தொடர்ந்து வாக்குரிமை இழந்து அரசியல் அனாதைகளாகிப் பின்னர் நாடற்றவர்களாகிய சம்பவங்களைப் பதிவு செய்யும் இந்நூல் 1970களைத் தொடர்ந்த காலத்தில் எவ்வாறு சிதைவுற்றது என்ற நூலின் மையக் கருத்தை மிக விரிவாக எடுத்துரைத்துள்ளது. இக்காலகட்டத்தில் பல நிகழ்வுகள் இடம்பெற்று மலையக மக்களின் சிதைவைத் துரிதப்படுத்தின. 1964 அல்லது ஸ்ரீமா சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் நாடற்றவர்களாக அடையாளப்படுத்தப்பட்ட 975,000 பேரில் 525,000 பேர் இந்தியாவிற்கும் 300,000 பேர் இலங்கைக்குமாக ஒதுக்கப்பட்டனர். மீதமுள்ள 150,000 பேர் சமபாதியாக இரண்டு நாடுகளுக்குமிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974இல் ஸ்ரீமா இந்திரா ஒப்பந்தத்தின்மூலம் பிரிக்கப்பட்டனர். இவ்வொப்பந்தங்களின் நிறைவேற்றம் 1970க்குப் பின்னரேயே துரிதப்படுத்தப்பட்டது. 1972ஆம் ஆண்டளவில் பெருந்தோட்டங்கள் நிலச்சீர்திருத்தச் சட்டத்தின்படி அரச மயப்படுத்தப்பட்டன. அதே ஆண்டில் (1972) இலங்கையை சோஷலிசக் குடியரசு ஆக்கும் வகையில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்படி பௌத்த மதம் அரச மதமாக ஆக்கப்பட்டது. சிறுபான்மை மக்களுக்கு முன்னைய அரசியலமைப்பில் 29ஆம் சரத்தின்மூலம் காணப்பட்ட பாதுகாப்பு நீக்கப்பட்டது. இந்தியர்கள் குடியேறிய காலந்தொட்டு அவர்களுக்கெதிரான சிங்கள பௌத்த நிலைப்பாடு கூர்மையடைந்து வந்துள்ளது. இந்தப் பின்னணியில் பெருந்தோட்ட மக்கள் முற்போக்கு நடவடிக்கையென ஆதரித்த அரசமயப்படுத்தலால் அடைந்த நன்மைகளை விட தீமைகளே அதிகம் என நூலாசிரியர் நிறுவியுள்ளார். தோட்ட நிலங்கள் துண்டாடப்பட்டு கிராமத்தவர்களுக்குப் பகிர்ந்தளித்தல் இடம்பெறத் தொடங்கியது. சிறு உடைமையாளர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வளர்ச்சி இதனை எடுத்துக்காட்டுவதாகக் கூறும் நூலாசிரியர் தொடர்ந்த வன்முறைச் சம்பவங்கள் தோட்ட மக்களைத் தங்கள் வாழ்விடங்களைவிட்டு வெளியேற வைத்தது என்பதைப் புள்ளிவிபரங்களுடன் பதிவு செய்கிறார். இந்த நிகழ்ச்சிப் போக்கு 1977, 1981இல் காணப்பட்டதோடு 1983இல் இது உச்ச நிலையை அடைந்தது. இவற்றின் விளைவாக இம்மக்கள் பாதுகாப்புக் காரணமாக வட கிழக்குப் பகுதிகளுக்கும் தமிழ் நாட்டிற்கும் குடிபெயர்ந்தனர். இதுவே மலையக மக்களின் சிதைவு எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மலையக மக்கள் தாயகம் திரும்பியோர் வட கிழக்கிற்கு குடியகன்றவர்கள் தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்த அகதிகள் என உப பிரிவுகள் தோற்றம் பெற்றதை இனங்கண்டு அவர்கள் தங்கள் வாழ்விடங்களில் எதிர்நோக்கும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சினைகளும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையில் தொடர்ந்து வாழும் மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி இங்கு அதிக அக்கறை காட்டப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளது. அரசியல் அரங்கில் அனைத்துத் தலைமைகளையும் விமர்சிக்கின்ற நூலாசிரியர் மலையகத் தலைமைகள் நாட்டின் ஜனநாயக சக்திகளோடு இணைந்து தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு தேட வேண்டும் எனப் பரப்புரை செய்கிறார். இதற்காக ஒரு பரந்துபட்ட கருத்தாடல் அவசியம் என வற்புறுத்தப்பட்டுள்ளது. தற்போது நிலவுகின்ற சிங்கள பௌத்த மேலாண்மைக்கு மத்தியில் அரசியல் அதிகாரத்திற்காகத் தேர்தலை நாடி இருக்கின்ற பெரும்பான்மை அரசியல் கட்சிகளில் சிறுபான்மைக் கட்சிகளின் ஜனநாயக உரிமைகளை மதிக்கின்ற மற்றும் குரல் கொடுப்பதை அடையாளம் காணுதல் பகீரதப்பிரயத்தனமாகவே இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. பொருளாதார ரீதியாகத் தோட்ட மக்களின் விடிவிற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ள தொழிலாளர்களைச் சிறு விவசாயிகளாக மாற்றுதல் என்பது கவனத்தை ஈர்க்கக் கூடியவொன்றாக உள்ளது. தற்போது தோட்டத்துறையின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி என்பவற்றில் செல்வாக்கு செலுத்துவது சிற்றுடைமையாளர்களேயாவர். ஏறக்குறைய நான்கு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் சிற்றுடைமையாளர்கள் தாழ்மற்றும் மத்திய நிலப்பரப்பில் தற்போது காணப்படுகின்றனர். உயர் நிலப்பரப்பில் தோட்டக் கம்பனிகளே அதிகம் ஈடுபாடு காட்டுகின்ற சூழலில் அவற்றிற்குப் பிரதியீடாகச் சிற்றுடைமையாளர்களை அறிமுகம் செய்வதும் இலகுவான கைங்கரியமல்ல. எனினும், மலையக அரசியல் தலைமைகள் மத்தியில் இந்தக் குரல் சமீபகாலமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளமை வரவேற்கத்தக்கவொன்றாகும்.

**முடிவுரை**

நிறைவாக, இந்நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பல ஒதுக்கல் நடவடிக்கைகளுக்கு தற்போது தீர்வுகள் காணப்பட்டு வருகின்றன. 1987 பிரதேச சபை சட்ட சீர்திருத்தம் (2019) நுவரெலிய மாவட்டத்தில் பிரதேச சபைகளின் எண்ணிக்கையை ஐந்திலிருந்து பத்தாக அதிகரித்தமை என்பன இம் மக்களைத் தேசிய நீரோட்டத்தில் இணைய வைக்கும் செயல் போக்கினைத் துரிதப்படுத்தி வருகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்கான சான்றாகும். எனினும், இந்நூல் சுட்டிக்காட்டும் பல குறைபாடுகள் தீர்வை எதிர்பார்த்து நிற்கின்றன. மலையக மக்களின் வரலாற்றை அரசியல் விமர்சன ரீதியில் எடுத்துக் கூறுகின்ற இந்நூல் உணர்வுபூர்வமாக ஒரு நாவலைப் போல் எழுதப்பட்டுள்ளமை பலதரப்பட்ட வாசகர்களை ஈர்ப்பதாய் அமையும். நூலாசிரியர் தனது தேடல் முயற்சிகளைப் பல்வேறு மூலங்களிலிருந்து பெற்றிருக்கிறார். வரலாற்று நூல்கள், இலக்கியப் படைப்புக்கள், நாட்டார் பாடல்கள் போன்ற பல்வேறு சான்றாதாரங்கள் அவரது வாதங்களுக்கு வலிமை சேர்க்கின்றன. நூலாசிரியர் விரும்பியுள்ளதைப் போல, இவர் முன்வைத்துள்ள வாதங்கள் குறித்த கருத்தாடல்கள் இடம்பெற வேண்டும்.

- மு.சி.கந்தையாவின்
'சிதைக்கப்பட்ட மலையகத் தமிழர்கள்'
நூலுக்கு எழுதப்பட்ட முன்னுரை - 2022.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8



## இரா.சடகோபனின் வலி சுமந்த வரலாறு: ‘சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு’

எழுத்தாளர் இரா. சடகோபனின் ''சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு'' என்ற இந்த நூல் அவரது முன்னைய வரலாற்று நூலான ''கண்டிச் சீமையிலே கோப்பிக் கால வரலாற்று நூலின் தொடர்ச்சியாக மலையக மக்களின் முழு வரலாற்றையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளமை, காலத்தின் தேவையாக அமைந்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். டொனோவன் மொல்ட்ரிச் அவர்களின் ''கசந்தகோபிக்கால அடிமைகள்'' (Bitter Berry Bondage) என்ற வரலாற்று நூலை அடிப்படையாகக் கொண்டு இலக்கிய வடிவில் உருவாக்கப் பட்டதே கண்டிச் சீமையிலே என்ற நூலாகும். ஆனால் இந்த இரண்டாவது நூல் சுயமான ஆய்வு அடிப்ப டையில் கோப்பிக்குப்பின் இலங்கையின் பொருளாதாரத்தில் அறிமுகமான தேயிலை பயிர்ச் செய்கைக்காக தென்னிந்தியாவிலிருந்து இலங்கை வந்த தொழிலாளர் களின் அரசியல் வரலாறு பற்றிய நூலாகும். இதனது வடிவம், விடையப்பரப்பு, கதை சொல்லும் உத்தி என்பன முன்னையதை விட முற்றிலும் மாறுபட்டதாகும்.

எழுத்தாளர் சடகோபன் ஒரு பன்முக ஆளுமைமிக்க ஒருவராவார். அவர் சட்டத்தரணி, ஆய்வாளர், ஊடகவியலாளர், மொழிபெயர்ப்பாளர், கவிஞர் என பல்துறைகளிலும் தனதுமுத்திரையை ஆழமாக பதித்தவர். இந்தநூல் அவரை ஒரு ஆய்வாளராகவும் ஊடகவியலாளராகவும்; மிகத் திறன்மிக்க வகையில் அடையாளப்படுத்துகிறது என்று கூறலாம். இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 2023, ''மலையகம் 200'' என்ற மகுடத்தில் பல இடங்களிலும் பல மட்டங்களிலும் பல தரப்பினாலும் நினைவு கூறப்படுகின்றது. இதனது தொனிப்பொருளை ஒருசாரார் ''வேர்களை மீட்டெடுத்தலும் உரிமைகளை வென்றெடுத்தலும்'' என்று மிகப் பொருத்தமாக குறிப்பிட்டிருந்ததை இங்கு அடையாளப்படுத்த வேண்டி உள்ளது.

கோப்பிப்பயிர் செய்கையில் ஈடுபடுத்துவதற்கென 1823ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கூலித்தொழிலாளர்கள் ஒரு சமூகமாக உருவாகி இன்று தேசிய இனங்களில் ஒன்றாக பரிணமித்து தேசிய நீரோட்டத்தில் ஏனைய சமூகத்தவரோடு சமமான நிலையில் ஒன்றிணைவதற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் இந்தநூலை அவர்களது உரிமைகளை வென்றெடுக்கும் ஒரு பொருத்தமான காலகட்டத்தில் சிருஷ்டித்து வழங்கியமைக்காக நூலாசிரியர் பாராட்டப்பட வேண்டியவர் ஆவார். அத்துடன் தற்போது இடம்பெற்று வரும் வென்றெடுக்கும் போராட்ட செயல்முறைக்கு இந்நூல் வலுசேர்ப்பதாகவும் அமைந்துள்ளது.

நூலின் விடையப் பரப்பு மலையக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, வரலாறாகவே காணப்படுகிறது. இந்த வரலாற்று ஓட்டத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளை தேர்ந்தெடுத்து அந்நிகழ்வு குறித்து தனது விளக்கங்களையும் வியாக்கியானங்களையும் எளியநடையில் சாதாரண வாசகனும் விளங்கிக்கொள்ளும் வகையில் எழுதப்பட்டுள்ளமை இதன் சிறப்பாகும். தினக்குரல் வாரப்பத்திரிகையில் 50 வாரங்களாக ஒவ்வொரு அத்தியாயமாக உணர்வுபூர்வமான தலைப்புக்களுடன் வெளிவந்த கட்டுரைகளின் தொகுப்பே இந்நூலாகும். இந்த தலைப்புக்கள் இந்தநூலுக்கு ஓர் இலக்கிய மணத்தையும் சுவையையும் உயர் பரிமாணத்தையும் தருகின்றது எனலாம். உதாரணத்துக்கு சில எடுத்துக்காட்டுகளாக பின்வரும் தலைப்புகளைகூறலாம். 'கட்டிப்போட்ட கயிறுகளும் சங்கிலிகளும்', 'கல்வி அறிவு காததூரம் வைக்கப்பட்டுள்ளது', 'இவர்களை இனிமேலும் தோட்டங்களுக்குள் கட்டிப்போட முடியாது', 'மூக்குநுனி வேர்க்கக் காரணம் என்ன', 'வெந்த புண்ணில் வேல் பாய்ச்சிய செயல்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த தலைப்புகளும் கூட வரலாற்றை உணர்வுபூர்வமாக வெளிப் படுத்துவதற்கு ஒரு உத்தியாக பயன்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதுடன் இன்னொருவகையில் நூலாசிரியரின் உணர்வுகளை வெளிப்படுத்தி வாசகனை ஈர்க்கின்ற ஒன்றாகவும் அமைந்துள்ளமை இதன் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

மலையக மக்களின் வரலாறு குறித்து ஆங்கிலத்திலும் தமிழிலும் பல நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன. தொழிற்சங்கவாதி எஸ்.நடேசன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய இலங்கையில் மலையக தமிழ் மக்கள் வரலாறு (History of Upcountry Tamils in Srilanka), பேராசிரியர் சோ. சந்திரசேகரன் எழுதிய இலங்கை இந்தியர் வரலாறு (2001), ஆய்வாளர் யோகேஸ்வரி விஜயபாலனின் முடிவில்லா சமத்துவமின்மை Endless Inequality எழுத்தாளர் மு. சி.கந்தையாவின்'' சிதைக்கப்பட்ட மலையக தமிழர்கள்'' (2015) முதலான நூல்கள் குறிப்பிடத்தக்கவை. இவற்றோடு பேராசிரியர் ராஜன்ஹூல் மற்றும் கிருபைமலர்ஹூல் ஆகியோர் எழுதியுள்ள இறந்து பிறந்த சனநாயகம் (Still Born Democracy) என்ற நூல் முழுமையான வரலாற்றை தராவிட்டாலும் 1920க்கு பின்னர் இலங்கை சுதந்திரம் அடைந்தது வரை ஒரு விரிவானபுலமை சார் ஆய்வாக அமைந்துள்ளது. இவற்றுடன் ஒப்பிடுகையில் சடகோபனின் நூல் சகல வரலாற்று அம்சங்களையும் ஒருசேர உள்ளடக்கியதாகவும் அதனை எடுத்தியம்பும் பாணியில் தனக்கே உரிய தனி சிறப்பையும் தொனியையும் கொண் டுள்ளதுடன் சாதாரண வாசகனை கண்ணூடாக கவர்ந்து விடுவதாகவும் அமைந்துள்ளது.

இவரது நூலில் உள்வாங்கப்பட்டுள்ள பிரதான நிகழ்வுகளாக பின்வருவனவற்றை சுட்டிக் காட்டலாம். தேயிலையின் தோற்றம், தொழிலாளர்களின் வருகை, ஒரு சமூகத்தின் உருவாக்கம், இந்திய வம்சாவழி மக்களுக்கான எதிர்ப்பு தொழிற்சங்கங்களின் தோற்றம், அரசியல் பிரதிநிதித்துவம் பெறுகின்றமை, ஸ்ரீறிமா - சாஸ்திரி ஒப்பந்தம், தாயகம் திரும்புதல் மற்றும் இம்மக்கள் மீது எவ்வாறு இனக் கலவரங்கள் முடுக்கிவிடப்பட்டு இச்சமூகம் எவ்வாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிதைக்கப்பட்டது போன்றவற்றை ஆதாரப்பூர்வமாக இந்நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். மேலும் ''மலையிலிருந்து உருட்டிவிடப் பட்டவர்கள் எவ்வாறு மலையேறி உச்சிக்கு வந்துதம் உரிமைகளை வென்றெடுக்கிறார்கள்'' என்ற வரலாற்றை, இந்நூல் தெளிவாகவும் உரத்த குரலிலும் எடுத்துக் கூறுகிறது.

அத்தகைய வரலாற்று நிகழ்வுகளை எடுத்துக் கையாளும்போது அதிக அளவில் இவ்விபரிப்புகள் ஒரு அரசியல் விமர்சனமாக அமைந்திருப்பதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. குறிப்பாக பிரஜா உரிமை பறிக்கப்பட்டமை, அதனை மீளபெற்றுக் கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள், இதில் இந்தியாவின் பங்களிப்பு எவ்வாறு அமைந்தது என்பதை அக்காலகட்ட அரசியல் தளத்தில் இருந்து நூலாசிரியர் விமர்சிக்கின்றார். மலையக மக்கள் தலைமைகளின் வலுவற்ற எதிர்வினை குறித்து தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தி உள்ளமை தொடர்பில் வாதப் பிரதிவாதங்களை தோற்றுவிக்க சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது . இலங்கை பிரஜாஉரிமை சட்டம் 1948ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட போது மலையக தலைமைகளால் மேற்கொள்ளப்பட்ட சத்தியாகிரக போராட்டத்திற்கு பதிலாக நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தால் அதன் பலன் அதிகமானதாக இருந்திருக்கும் என வாதாடுகின்றார். ஏன் அத்தகைய ஒரு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பது விடை காணவேண்டிய ஒரு விடயமாகவே தோன்றுகிறது.

இந்நாட்டில் சுதந்திரத்துக்கு முன்னர் இடதுசாரிகள் இத்தொழிலாளர்களை வர்க்கரீதியாக அணிதிரட்டி பல வெற்றிகரமான போராட்டங்களை முன்னெடுத்து நடத்தியமை மற்றும் முல்லோயா போராட்டத்தின்போது கோவிந்தன் சுடப்பட்ட போராட்டமானது இடதுசாரிகளால் வழி நடத்தப்பட்டமை பலரால் குறிப்பிடப்பட்டு பதிவு செய்யப்பட்டுள்ள போராட்டங்களில் ஒன்றாகும். ஆனால் 1960க்கு பின்னர் ஸ்ரீமாவின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சியின்போது அவர்களுடன் இணைந்து ஆட்சிபீடம் ஏறிய இடது சாரிகள் பின்னர் தம் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு இனத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேசத்தை நோக்கிய செயற்பாட்டை சுட்டிக்காட்டி தமது பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை காப்பாற்றிக்கொள்ள இவர்கள் முயற்சித்தார்கள் என்பதனை வருத்தத்தோடு பதிவிடுகின்றார். 1970களில் உதயமான தீவிர இடதுசாரி கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனை என்ற மக்கள் விடுதலை முன்னணியின் இந்திய எதிர்ப்புவாத நிலைப்பாட்டை மிகத் துல்லியமாக எடுத்துக்காட்டி அத்தகைய ஒரு அரசியல் நிலைப்பாடு காரணமாக இந்தசமூகம் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டது என்பதையும் சுட்டிக் காட்டுகின்றமை மனம் கொள்ளதக்கதாகும்.

அடுத்ததாக 1970களில் தோட்டங்களை அரசாங்கம் பொறுப் பேற்றமையையும் அதேகாலப்பகுதியில் அரசாங்கத்தின் இறக்குமதி பதிலீட்டு கொள்கையின் விளைவாக நாட்டில் ஏற்பட்ட உணவு தட்டுப் பாடு தோட்டத்தொழிலாளர்கள் மீது எந்த அளவிற்கு பாதிப்பினை ஏற்படுத்தியது என்பது மிக விரிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. தோட்டங்கள் தேசியமயப்படுத்தப்பட்டமை இம்மக்களுக்கு அதிக நன்மை தரக்கூடிய ஒரு முயற்சியாக, நடவடிக்கையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அது தோட்டகாணிகளை கிராமிய மக்களுக்கு பங்குபோடும் முயற்சிக்கு வழிவகுத்தபோது தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ இடமில்லாது போனதுடன் பிரஜாஉரிமை அற்றவர்கள் என்று காரணம் காட்டப்பட்டு அவர்கள் தோட்டங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட சம்பவங்கள் பல பதிவு செய்யப்பட் டுள்ளன.

1977ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தின் பின்னர் இத்தகைய அரசியல் செயல்முறையானது சிறுசிறு இனமுறுகல்களாக தொடங்கி பின் 1983இல் நாடு தழுவிய இனக்கலவராக வெடிக்க ஆரம்பித்தது. இது இந்த சமூகத்தின் இருப்பைக் கேள்விக் குறியாக்கி சிதைவை மேலும் உக்கிரப்படுத்தியது எனலாம். தமது வரலாற்றுபூர்வமான வாழ்விடங்களைவிட்டு இலங்கை தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற வடக்கு கிழக்கு நோக்கி ஆயிரக்கணக்கானோர் புலம் பெயர்ந்தனர். அத்துடன் இந்தியாவுக்கு சென்றுபலர் தமிழ் நாட்டில் அகதிகளாக தஞ்சம் புகுந்தனர் என்பதையும் இந்நூலில் மிக துன்பியல் உணர்வுடன் பதிவுசெய்யப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவாக, முன்னரே குறிப்பிட்டதைப் போல மலையில் இருந்து உருட்டிவிடப்பட்டவர்கள் மலையின் உச்சிக்கு ஏறிச்சென்று தலைநிமிர்ந்து நிற்கின்ற நம்பிக்கை நோக்கத்தை எடுத்துக்காட்டும் இந்நூல் இன்னும் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்பதை கூறாமல் கூறிநிற்கிறது. வேர்களை மீட்டெடுத்து உரிமைகளை வென்றெடுக்கும் ''மலையகம் - 200'' தொனிப் பொருளுக்கு உரம் சேர்த்து மேலும் மிளிரும் இந்நூல் எளிய எழுத்துநடை, கதை சொல்லும் உத்திகள் என்பவற்றால் சாதாரண வாசகர்களை ஈர்க்கின்ற ஒன்றாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க வாய்ப்பில்லை. இத்தகைய நூலை காலத்துக்கு ஏற்றவகையில் படைத்த எழுத்தாளர் சடகோபன் அவர்கள்பாராட்டுக்கு உரியவராக இருப்பதுடன் இவரது இத்தகு எழுத்து முயற்சிகள் தொடரவேண்டும் என்பதற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

- இரா. சடகோபனின் 'சூழ்ச்சிகளையும் சதிகளையும் கடந்த வரலாறு' என்ற தலைப்பில் வெளிவரவுள்ள நூலுக்கு எழுதிய அணிந்துரை.

- ஆகஸ்ட் 2023.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஏ.பி. கணபதிபிள்ளையின் நூலையொட்டிய மலையகப் போராட்டங்கள் குறித்த ஒரு பார்வை

## அறிமுகம்

மலையகம் 200 என்பது 2023ஆம் ஆண்டின் மிக முக்கிய பேசு பொருளாக உருவாகி தற்போது அதையொட்டி மலையகம் முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிகழ்வுகள் மூலமாக மலையக மக்களின் வரலாறு, தற்போதைய நிலை அவர்களின் அபிலாஷைகள், எதிர்பார்க்கைகள் என்பன வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. சமூக ஊடகங்களிலும், குறிப்பாக நிகழ்நிலை (Zoom) ஊடாகவும் இது குறித்த விவாதங்கள் இடம் பெற்று வருகின்றன. இது தொடர்பான விடயங்களும் அதன் முக்கியத்துவம் பற்றியும் இக்கட்டுரையில் கலந்துரையாடப்படுகின்றது.

## மலையகம் 200 குறித்த பொது நிகழ்வுகள்

இந்த வருடம் மே மாதம் நுவரெலிய நகரில் 19ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் பல்வேறு நிகழ்வுகளை பல்வேறு அமைப்புகளின் பங்கு பற்றலுடன் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் நடாத்தியது. ஜூன் 21ஆம் திகதி ஊர்வலத்துடன் கூடிய கூட்டமொன்று ஹட்டனில் காணி தினமாக இடம்பெற்றது. இந்த வகையில் ஜுலை 28ஆம் திகதி முதல் தலைமன்னார் முதல் மாத்தளை வரை இடம்பெற்ற மகத்தான நடைபயணம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இருநூறு கிலோ மீட்டருக்கு மேற்பட்ட தூரத்தை உள்ளடக்கிய பயணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடையிலே பல இடங்களில் தரித்து நின்று சில நிகழ்வுகளை நிகழ்த்தியமையும் கவனிக்கத்தக்கது. பல இனத்தவர்களும். பல மொழிபேசுவோரும் பல மதத்தவர்களும் இந்நிகழ்வுகளில். ஆகஸ்ட் 12ஆம் திகதி நிகழ்வின் இறுதி நாளன்று தமிழ் முற்போக்கு கூட்டணியினர்; ஹட்டனிலிருந்தும் நுவரெலியா விருந்தும் ஆரம்பித்த பேரணிகள் தலவாக்கலை நகரில் ஒன்று கூடி இந்த நினைவேந்தலை நிகழ்த்தின. முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் மலையக மக்களின் 200 வருட வரலாறு என்ற நூலின் அறிமுக விழாவும் இடம் பெற்றது. ஆகஸ்ட் 20ஆம் திகதி மாத்தறை மாவட்டம்,தெனியாய நகரில் ஆயிரக்கணக்கானோர் நகர் முழுதும் சுற்றி நடைப் பயணம் செய்து பல்வேறு கலாசார நிகழ்ச்சிகளுடன் இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது. இந்த வகையில் ஆகஸ்ட் 26இல் நுவரெலியாவில் இடம் பெற்ற வழக்கறிஞரும், தொழிற்சங்க வாதியுமான ஏ.பி.கணபதிபிள்ளை அவர்களின் ஆங்கில நூலின். வெளியீடும், ஆகஸ்ட் 30இல் நாவலப்பிட்டி நகரில் சிறப்பு மலர் வெளியீடும் கட்டுரை கவிதை போட்டிகளின் பரிசளிப்பும் குறிப்பிடத்தக்கன.

## நூல்கள் மற்றும் மலர் வெளியீடுகள்

இந்த வருடம் மே மாதம் முதல் ஆகஸ்ட் வரை இடம்பெற்ற இந்த நிகழ்வுகளில் கவனிக்கத்தக்க விடயம் மலர்கள் மற்றும் நூல் வெளியீடுகளாகும். ஏனைய விடயங்கள், ஊர்வலங்கள், கூட்டங்கள், என்பன அவ்வப்போது உணர்வலைகளை ஏற்படுத்தி மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தியிருந்தன. அத்தோடு நுவரேலிய மற்றும் மாத்தளை நிகழ்வுகளின் பின்னர் மலையக மக்களின் அபிலாசைகள் மற்றும் எதிர்பார்க்கைகளை உள்ளடக்கிய பிரகடனங்கள் வெளியிடப் பட்டன. இவை அரசாங்கம் மற்றும் ஏனைய நிறுவனங்களின் எதிர் கால செயற்பாடுகளுக்கு வழி வகுப்பதாய் அமையலாம். இதைவிட வெளியிடப்பட்ட மலர்களும், நூல்களும் இந்த மக்களின் வேர்களை மீட்டெடுத்து உரிமைகளை வென்றெடுப்பதற்கு வழி சமைப்பனவாக வுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவனம் நுவரெலிய நிகழ்வின் போது வெளியிட்ட 'வேர்களும் மீளெழுச்சியும்' (Roots and Resilience), வெளியிடப்பட்ட வழக்கறிஞர் கணபதிபிள்ளையின் 'தேயிலை தளிரின் கண்ணோட்டம்' (Glimpses of a Tea Bud) போன்ற ஆங்கில நூல்கள் என்பது குறிப்படத்தக்கது. அத்தோடு தமிழில், அமரர் இர. சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவினால் வெளிடப்பட்ட மலையகம் 200 - கட்டுரைப்போட்டி, பரிசுக் கட்டுரைகள் என்ற நூலும்,கலாநிதி பெ.சரவணகுமாரின் மலையக சமூக உருவாக்கத்தில் கோ. நடேசய்யரும் அவரது அறியப்படாத எழுத்துக்களும் என்ற ஞாபகார்த்த பேருரை நூலும் கவனத்தில் கொள்ள வேண்டியவையாகும். அத்தோடு மாத்தளையில் வெளியிடப்பட்ட 'மாண்புமிகு மலையகம்: நேற்று-இன்று-நாளை' என்ற மலரும் நாவலப்பிட்டியில் வெளிவந்த 'வாழ்க்கை சுவடுகளை நினைவூட்டும்' சிறப்பு மலரும் முல்லைத்தீவு புது குடியிருப்பில் வெளியிடப்பட்ட 'மலையக மக்களின் 200 ஆண்டு கால வரலாறும்' குறிப்படத்தக்கவையாகும். இந்த வகையில் தொழிற் சங்கவாதி கணபதிபிள்ளையின் தேயிலை மொட்டின் சிறு துளிகள் என்ற தலைப்பில் அமைந்த நுலை முன்வைத்து மலையகப் போராட்ட வரலாற்றை மீட்டிப்பார்க்க இக்கட்டுரை முயல்கிறது

## கணபதிபிள்ளையின் தேயிலை தளிரின் கண்ணோட்டம்

ஏ.பி. கணபதிபிள்ளையின் முதலாவது நூல் தேயிலையின் சகாப்தம் (Epic of Tea) என்தாகும். இரண்டாவது நூலான 'தேயிலை தளிரின் கண்ணோட்டம்' (Glimpses of a Tea Bud) என்ற நூல் ஐந்து அத்தியாயங்களை கொண்டது. முதலிரண்டும் அவரது ஆய்வுத் திறனையும் தத்துவார்த்த நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக சமூக படையாக்கம் தொழிற் சங்கம் போன்றவற்றின் தோற்றம் என்பன மானுடவியல் நோக்கில் மாக்ஸிய பார்வையில் அமைந்துள்ளன. மூன்றாவது அத்தியாயம் இலங்கையில் தொழிற்சங்கத்தின் தோற்றத்தை எடுத்து காட்டி தொழிலாளர்களின் உரிமைகளுக்காக இடம் பெற்ற போராட்டங்களை விளக்குகின்றது. உண்மையில் நான்காம் மற்றும் ஐந்தாம் அத்தியாயங்களே மலையகம் குறித்தவையாகும். எனினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் 200 ஆண்டுகளாக இலங்கையில் வாழ்நதுவரும் தோட்டத் தொழிலாளர்களுக்கே சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. நான்காம் அத்தியாயம் இலங்கையில் தோட்டத்தொழிலின் உருவாக்கம்,தோட்ட உற்பத்தி முறைமையின் அமைப்பு என்பவற்றை விளக்கி, ஐந்தாம் அத்தியாயம் அந்த மக்கள் தமது வாழ்க்கையில் மேற்கொண்ட போராட்டங்களை அட்டவணைப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஏலவே குறிப்பிட்ட பல்வேறு நிகழ்வுகளின் தொனிப்பொருளாக அமைத் திருந்தமை வேர்களை மீட்டுதலும் உரிமைகளை வென்றெடுத்தலு மாகும். (Tracing the roots and winning the rights). இந்த கருப்பொருளுக்கு இசைவானதாகவே இந்த இரு அத்தியாயங்களும் அமைந்துள்ளன.

### போராட்டங்களை மீட்டுதல்

உரிமைகளை பெற்றுகொள்ள மேற்கொண்ட 16 போராட்டங்கள் பற்றிய விளக்கங்கள் இந்த ஐந்தாம் அத்தியாயத்திலே இடம் பெற்றுள்ளன. 1940இல். கோவிந்தன் என்ற தொழிலாளி கொலை செய்யப்பட்ட முல்லோயா போராட்டம் பற்றிய தகவல்கள் மிக ஆழமாகவும் விரிவாகவும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 1946இல் நேவ்ஸ்மியர் என்று ஆங்கிலத்தில் கூறப்படும் உருளவள்ளி தோட்டப் போராட்டம் பற்றிய விரிவான விளக்கம் அடுத்து வருகிறது. நிலவுரிமைக்கான முதல் போராட்டமாக இது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. 1977இல் சிவனுலட்சுமணனை உயிர் கொண்ட நிலவுரிமைக்கான தலவாக்கலை டெவன் போராட்டம் எடுத்து காட்டப்பட்டுள்ளது. அடுத்து சுட்டிக் காட்டப்படுவது 1940இல், இடம்பெற்ற பதுளை வேவெஸ்ஸ தோட்ட வேலைநிறுத்த போராட்டமாகும். ஐந்தாவதாக 1956இல் அக்கர பத்தனை டயகம தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தில் உயிர் நீத்த ஆப்பிரகாம் சிங்கோ பற்றியதாகும். ஆறாவது நுவரெலியா உடபுசல்லாவ நகரில் தொழிற்சங்க காரியாலயம் திறப்பதை ஒட்டி 1957இல் உருவான போராட்டமாகும். ஏழாவது ஊவா மாகாணத் தின் கனவரெல்ல தோட்டத்தில் வைத்தியசாலைக்கு செல்வதற்கு போக்குவரத்து வசதி கோரி இடம்பெற்ற போராட்டமாகும். எட்டா வதாக சுட்டிகாட்டப்படுவது மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தேநுவர போராட்டமாகும்.இது தங்களுக்கு மறுக்கப்பட்ட வசதி களை கோரி நடாத்தப்பட்ட போராட்டமாகும். இதன்போது அழகர் மற்றும் ரெங்கசாமி ஆகிய இரு தொழிலாளர்கள் துப்பாக்கி சூட்டிற்கு இலக்காகினர். சப்பிரகமுவ மாகாணத்தின் மில்ல விட்டிய தோட்டத் தில் 1968இல் இடம் பெற்ற தொழிற்சங்க போராட்டத்தில் அந்தோனி சாமி என்ற தொழிலாளி கொல்லப்படுகிறார். 1958இல் பலாங்கொடை பகுதியில அமைந்துள்ள பெட்டியாகல தோட்ட மக்கள் தங்கள் பிரச்சி னைகளுக்கான தீர்வுகளை வேண்டி போராட்டம் நடாத்திய வேளை அந்த மக்களை சந்திக்க சென்ற தொழிற்சங்க தலைவர் அப்துல் அஸீஸ் அவர்களுக்கு தோட்டத்தில் உள்நுழைவதற்கு அனுமதி மறுக்கப்பட அவர் அதனை மீறி உள்நுழைந்ததால் அஸீஸ் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மாஜிஸ்டிரேட் நீதிமன்றினால் இரண்டு மாதம் கடூழிய சிறைத்தண்டனை வழங்கப்பட்டார். உயர்நீதிமன்றில் மனு செய்யப்பட்டாலும் அங்கும் தண்டனை உறுதி செய்யப்பட பின்னர் 'பிரிவிக் கவுன்சிலால்' தீர்ப்பு மாற்றியமைக்கப்பட்டு அ.அஸீஸ் விடுவிக்கப்பட்டார்

தொழிற்சங்க வாதிகள் தோட்டங்களில் உள்நுழைவது 1970ஆம் ஆண்டில் சட்ட ரீதியாக்கப்பட்டது. 1967ஆம் ஆண்டு விஷேட அலவன்ஸ் 17/50க்காக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் மேற் கொண்ட போராட்டமாகும். தோட்ட துரைமார் சங்கத்தினரின் கூலியில் நாளொன்றிற்கு ஒரு ரூபா அதிகரிப்பு வழங்க மாற்று யோசனை வைக்கப்பட்டு பின்னர் கூட்டு ஒப்பந்தத்தில் நாளொன்றிற்கு 10 சத உயர்வு வழங்கப்பட்டு தோல்வியடைந்த ஒரு போராட்டமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இப்போராட்டம் ஒரு துன்ப வரலாறாக முடிவிற்கு வந்ததென நூலாசிரியர் குறிப்பிடுகிறார்.

கேகாலை மாவட்டத்தின் இறப்பர் தோட்ட தொழிலாளர்க ளுக்காக 1940இல் மேற்கொள்ளப்பட்ட கஸ்னாவ தோட்டப் போராட்டம் குறிப்பிடத்தக்கது. இலங்கை தோட்ட தொழிலாளர சங்கம் முன்னெடுத்த இப்போராட்டம் 1946 இலிருந்து 1953 வரைக்கும் இடம் பெற்று இறப்பர் கூலி நிர்ணய சபை உருவாக வழிவகுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்தின் தெல்தொட்ட பகுதியில் எரின் தோட்டத்தில் தொழிலாளி ஒருவர் மாடு வளர்க்க எடுத்த முயற்சி நிர்வாகத்திற்கும் தொழிலாளர்க்குமிடையே முரண்பாட்டினை உருவாக்கி போராட்டத்திற்கு வழிவகுத்ததோடு வேலை நிறுத்தம் காரணமாக பலருக்கு வேலை இல்லாது போனதுடன் பின்னர் கைத்தொழில் பிணக்கு சட்டத்தின் கீழ் இது விசாரிக்கப்பட்டது. இவ்வழக்கில் தொழிலாளர்களுக்காக வாதாடிய புகழ்பெற்ற வழக்கறிஞரின் குறுக்கு விசாரணைகளுக்கு பதிலளிக்க முடியாத தோட்ட முகாமையாளர் சாட்சி கூண்டில் மயங்கி விழுந்து மரணமான சோக நிகழ்வும் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வேலை இழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டு தோட்டத்தில் அமைதி நிலை நாட்டப்பட்டது.

போராட்டங்களில் வித்தியாசமான ஒன்றாக பொகவந்தலாவ, கொட்டியாகல தோட்டத்தில் மது விற்பனைக்கு எதிராக 1939இல் இளைஞர்கள் ஒன்றுகூடி மேற்கொண்ட போராட்டம் அமைந்தது. இளைஞர்கள் ஒன்றுகூடி எதிர்ப்பு தெரிவிக்க தோட்ட நிர்வாகம் மறுப்பு தெரிவித்தது. இதற்கு எதிராக தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் மேற்கொண்டனர். இதற்கு ஆதரவாக பல தோட்டங்களிலும் இடம்பெற கொட்டியகல வேலை நிறுத்தம் வெற்றி பெற்றது.

தொலஸ்பாகை பகுதியில் மொன்டி கிறிஸ்டொ தோட்டத்தில் தொழிற்சங்கத்தை நிறுவுவதற்காக மேற்கொள்ளப்பட்ட போராட்டம் 1961 நவம்பரில் நான்கு தொழிலாளர்களின் உயிரை காவுக் கொண்டதோடு முடிவிற்கு வந்ததாலும், பக்கத்து கிராமத்தவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் முறுகல் நிலை உருவானதுடன் பொலிசாரின் தலையீட்டோடு அமைதி நிலை நாட்டப்பட்டது.

இத்தகைய போராட்டங்களில் மற்றுமொரு வித்தியாசமான போராட்டமாக கொழுந்தெடுக்கும் பெண்கள் கைவளையலகள் அணியக்கூடாது என விதிக்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு எதிராக எட்டியாந்தொட்ட பகுதியில் ஹல்கொல்ல தோட்டத்தில் 1952இல் இடம் பெற்ற போராட்டம் அமைகின்றது. இறுதியில் வேலைநிறுத்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமாக வேலை இழந்தவர்களுக்கு வேலை வழங்கப்பட்டு போராட்டம் முடிவிற்கு வந்தது.

### போராட்டம் பற்றிய பிறநூல்கள்

1940 ற்கு பின்னரான போராட்டங்கள் பதினாறை தேடித்தொகுத்து பதிவு செய்துள்ள நூலாசிரியரால் ஒரு சில விடுபட்டிருக்கலாம். முக்கியமாக விடுபட்டவொன்று 1941இல் புசல்லாவை கந்தலா (Stellernberg - ஸ்டலன்பேர்க்) தோட்டத்தில் இடம் பெற்ற தோட்டத்துரையின் கொலையோடு தொடர்புள்ள போராட்டமாகும். இந்த தோட்டத் துரையான போப் (Pope) என்பவர் மிகவும் கடுமையானவராக, தொழிலாளர்களை கடுமையான அடக்குமுறைக்கு உட்படுத்தி வந்தார். இதற்கு எதிராக தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்க முயன்று பின்னர் போப் துரையே கொலை செய்யப்படுகின்றார். இச்சம்பவம் பெருந்தோட்டத்துறையையே அதிரவைத்த ஒன்றாக காணப்பட்டது. இது குறித்து பல ஆவணங்கள் வெளிவந்துள்ளன. கொலை செயலை புரிந்த வீராசாமி மற்றும் வேலாயுதன் ஆகியோர் நீதிமன்ற விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தூக்கிலிப்படுகின்றனர். இந்த நிகழ்வை மையப்படுத்தி மலையக எழுத்தாளர் சாரல் நாடன் 'வானம் சிவந்த நாட்கள்' என்ற குறுநாவல் ஒன்றை படைத்துள்ளார். இந்த நாவலுக்கு நீண்டதோர் முகவுரை எழுதியுள்ள மலையக ஆய்வாளர் மு.நித்தியானந்தன் இந்த நிகழ்வு குறித்த சம்பவங்களை மிக நேர்த்தியாக பதிவு செய்துள்ளார்.

### உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள்

மூத்த தொழிற்சங்கவாதியும் மாத்தளை ரோகிணி என்ற புனை பெயரில் இலக்கிய படைப்புகளை தந்துள்ளவருமான த.அய்யாத் துரை 'உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகள்' என்ற தலைப்பில் பதினாறு போராட்டங்களை (கணபதிபிள்ளை தந்துள்ள வற்றிலும் சில வித்தியாசமானவற்றை) பதிவு செய்துள்ளார். இவரும் கணபதிபிள்ளையைப் போல கந்தலா (ஸ்டலன்பேர்க்) போராட்டத்தை பதிவு செய்யவில்லை. 1958இல் மொழிப் போராட்டத்தின் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொகவந்தலாவையில் உயிர்நீத்த அய்யாவு மற்றும் பிரான்சிஸ் பற்றியது ஒன்றாகும். 1950இல் டெவன் தோட்டத்தில் போராடி உயிர் நீத்த வைத்திலிங்கம் மற்றையதாகும். அடுத்து 1956இல் மஸ்கெலிய நல்ல தண்ணியில் கருமலை என்ற தொழிலாளி கொல்லப்பட்டதாகும். இத்தகைய நிகழ்வுகளை இணைத்துள்ள ஐயாத்துரை ஏழுபேரின் இழப்புகளை குறிப்பிட்டு இவைபற்றிய விபரங்கள் இன்மையால் சேர்க்கப்படவில்லை என தனது முன்னுரையில் பதிவு செய்துள்ளார்.

மொழி வேறுபட்டிருந்தாலும் இவர்கள் இருவரதும் சம்பவ விபரிப்புகள் ஒரே பாணியிலேயே அமைந்துள்ளமை சுவாரஷ்யமான ஒன்றாகும்.

இத்தகைய மலையகப் போராட்டங்களை கவிதை வடிவில் கவிஞர் சு. முரளிதரன் தனது 'தீவகத்து ஊமைகள்' என்ற நூலில் சுட்டிக் காட்டியுள்ளமையும் இங்கு குறிப்பிடக்கூடியதாகும். உதாரணங்களுக்கு சில கவிதைகள் கீழே தரப்பட்டுள்ளன.

1940இல் முல்லோயவில் கோவிந்தன்

"செத்துப் போனான்
பதினாறு சத சம்பளத்திற்கு
பர்வதங்கள்
பாதங்கள்
பாதைக்கு வந்த போது
புரியாத பொலிஸ்
பதில் சொல்லி வந்தார்கள்.
கோவிந்தன்
செத்துப் போனான்."

இன்னுமொன்று,
வெள்ளை யரசாங்கத்தின்
கால் சுற்றியிருந்த
பச்சை பாம்பு
எட்டியாந்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருளவள்ளியில்
சீறிப்பாய்ந்தது.
....ஸ்.......ஸ்
அங்கே 363
ரோமங்களுக்கும்
முதுகெலும்பு
முளைத்தது.
பட்டினியிலும்
பத்தினியாயிருந்தன.

நம் நிழல்கட்கும்
இங்கே
நிலங்கேட்கும்
உரிமை உண்டென
நிமிர்ந்தவர்களை
வழக்கெடுத்துப் பார்த்தும்
தனக்குத் தானே
கீறிக் கொண்டது
அரசாங்கம்!

இன்று
திரும்பிய திசைகளெல்லாம்
வர்ண வர்ண
தொழிற்சங்க சுவர்களில்
முட்டிக் கொள்கின்றோமே
அதற்கு
அஸ்தி தோண்டி
அமிழ்ந்து போன
ஜீவ வைரங்கள்
எத்தனை தெரியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிபிள்ளையும், அய்யாத்துரையும் கட்டுரைகள் வடிவில் நூல்களில் பதிவு செய்த பல மலையகப் போராட்டங்களை கவிதை வடிவில் கவிஞர் சு.முரளிதரன் சுட்டிக் காட்டியுள்ளார்.

## முடிவுரை

முடிவாக கணபதிபிள்ளை மீட்டெடுத்து பதிவுசெய்த போராட்டங்கள் தொழிலாளர் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகள் பற்றியதாக அமைந்திருந்தன. நிலவுரிமை, தொழிற்சங்கம் அமைத்தல் தொழிற் சங்க காரியாலயம் திறத்தல் தொழிற்சங்கவாதிகள் தோட்டங்களில் உள் நுழைதல் மற்றும் கூலி உயர்வு போன்ற வாழ்வாதார பிரச்சினை, சுகாதார வசதிகளை பெற்று கொள்ளுதல் போன்றவை முன்னிலையில் காணப்பட்டன. சில பிரச்சினைகள் இன்னும் தீர்வை எதிர்நோக்கி நிற்கின்றன. மலையகம், 200 ஐ மையப்படுத்தியதாய் இன்று அதிகம் பேசப்பட்டு வருவது நிலவுரிமை பற்றியதாகும். அந்தவகையில் போராட்ட வேர்களை மீட்டெடுத்து உரிமைகளை வென்றிடும் தொனிப்பொருளுக்கு உரம் சேர்ப்பதாக கணபதி பிள்ளையின் தேயிலை மொட்டின் சிறு துளிகள் என்ற ஆங்கில நூல் அமைந் துள்ளது.

- இந்த நூலின் வெளியீட்டின் போது ஆற்றிய<br>உரையை மையமாக வைத்து எழுதப்பட்ட கட்டுரை,<br>'மலையக மாருதம்' (தாய்வீடு) - ஒக்டோபர் 2023.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலையகம் – நேற்று, இன்று, நாளை : ஒரு வரலாற்று அரசியல் சமூக நோக்கு..

**அறிமுகம்**

இலங்கைப் பொருளாதார அமைப்பில் கோப்பி உற்பத்தி முறைமையை அறிமுகப்படுத்த இந்தியாவில் இருந்து முதன்முறையாக 1823ஆம் ஆண்டு தொழிலாளர்கள் கொண்டுவரப்பட்டமை காரணமாக 2023ஆம் ஆண்டு இருநூறு ஆண்டு நிறைவை இது குறிக்கின்றது. இக்கால கட்டத்தில் கோப்பி உற்பத்தி 1860களில் கைவிடப்பட்ட பின்னர் தேயிலை உற்பத்தியும் தொடர்ந்து இறப்பர் உற்பத்தியும் அறிமுகப் படுத்தப்பட்டு அவை இன்றுவரை தொடர்கின்றன. இத்தோட்ட உற்பத்தி முறைமையில் வாழத் தொடங்கிய தொழிலாளர்கள், நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பில் இரட்டைப் பொருளாதாரமாக உருவாகிய அமைப்பில் ஒரு தேசிய இனமாக வளர்ச்சி பெற்றுள்ளனர். இவ் வளர்ச்சியினைப் பொருளாதார, சமூக அரசியல் அம்சங்கள் குறித்த ஒரு வரலாற்றுப் பார்வையை இக் கட்டுரை தர முயல்கிறது. ''நேற்று'' என்பது பொருளாதாரக் கட்டமைப்பில் ஒருங்கிணைந்து, அரசியல் பரப்பில் வாக்குரிமை பெற்று, பின்னர் அதனை இழந்து, மீண்டும் முழுமையாகப் பெற்ற 1823 - 2003 வரையான காலப்பகுதியை இது குறிக்கும். 2003 - 2022 வரைக்கும் ஏற்பட்ட வளர்ச்சியை மையப் படுத்தியதாய் ''இன்று'' எனவும் 2023ஐத் தொடரும் காலப்பகுதி ''நாளை'' எனவும் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நேற்று (1823 -2003) சமூக உருவாக்கம்**

தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளர்களாக இலங்கைக்குப் பல தேவைகளுக்காகக் குடிபெயர்ந்திருந்தாலும், முதன்முறையாகக் கோப்பிச் செய்கைக்குக் குடி வந்தவர்களின் தொடர்ச்சியே வரலாற்று ஏடுகளில் பதிவு பெற்றுள்ளன.

1823 -1860 காலப்பகுதியில் கோப்பிப் பயிர்ச் செய்கைக்கு நிரந்தரத் தொழிலாளர் தேவைப்படாத காரணத்தால் அவர்கள் இங்கு வருவதும் போவதுமாகவே இருந்தனர். இதனால் இங்கு நிரந்தரத் தொழிலாளர் சமூகம் ஒன்று உருவாகவில்லை. ஆனால், தேயிலை உற்பத்திக்கு நிரந்தரத் தொழிலாளர்கள் தேவைப்பட்டமையினால், இது நிரந்தர சமூகம் உருவாக வழிவகுத்தது எனலாம்.

1860 இற்குப் பின்னர் குறிப்பாக 1880 -1910 காலப்பகுதியில் தொழிலாளர்களாக வந்தவர்கள், தேயிலை மற்றும் இறப்பர் உற்பத்தி செறிவடைந்து தோட்ட உற்பத்தி முறைமை வேரூன்றியதைத் தொடர்ந்து, தொழிலாளர்கள் நிரந்தரமாகத் தேவைப்பட்டமையால், தோட்டங்களிலேயே வாழவேண்டிய சூழல் உருவாக்கப்பட்டது.

**அரசியல் பிரதிநிதித்துவமும் இழப்பும்**

1920களில் இலங்கையின் அரசியல் பரப்பில் வாக்குரிமை முக்கியமாகப் பேசப்பட்ட காலகட்டத்தில், இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்கு வதற்கு எதிராகவே முதன்முறையாக இந்திய எதிர்ப்பு உருவாகத் தொடங்கியது.

1930ஆம் ஆண்டுக்கு முன்னர் சட்ட சபைகளில் நியமனப் பிரதி நிதித்துவம் காணப்பட்டமையினால், அரசியல் அரங்கில் இந்தியர்களின் பிரதிநிதித்துவம் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கவில்லை. ஆனால், சர்வசன வாக்குரிமை டொனமூர் ஆணைக் குழுவினால் முன்மொழியப் பட்டமையினால், இந்தியத் தோட்டத் தொழிலாளர்களுக்கு இந்த வாக்குரிமை கிடைக்கவிருப்பது குறித்து சிங்களப் பெரும்பான்மை யினரால் இந்திய எதிர்ப்பு உணர்வு உருவாகத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1920களில் இந்தியர்கள் வாக்குரிமை பெறுவதற்குப் பெரும் பான்மை இனத்தினர் பலத்த எதிர்ப்பு காட்டினாலும், டொனமூர் ஆணைக்குழு இந்தியர்களுக்கும் வாக்குரிமை வழங்கி அரச சபையில் மூவர் அங்கம் பெற வழிவகுத்தது. தங்களது எதிர்ப்பு வலுவிழந்த நிலையில் இலங்கை சுதந்திரம் பெற்ற 1948ஆம் ஆண்டிலேயே அவர்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. தொடர்ந்து வாக்குரிமையும் பறிக்கப்பட்டது. இதுவே பின்னர் இம்மக்கள் நாடற்றவர்களாக மாற வழிவகுத்து. 2003இல் இம்மக்கள் அனைவரும் பிரஜாவுரிமை பெறும் வரை, இம்மக்களை அனைத்து அபிவிருத்தி செயன்முறைகளில் முழுமையாகப் பங்கு பெறுவதிலிருந்தும் விலக்கி வைத்தது. இதன் காரணமாகவே 2003 ஆம் ஆண்டை ஒரு எல்லைக் கோடாகக் கொண்டு ''நேற்று'' என்ற கால வகுப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

**இழந்த உரிமைகளை மீளப்பெறுதல்**

இக்காலகட்டத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் சாதகமான மற்றும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தின. இந்தியர்களின் அரசியல் நிலையைத் தீர்மானிப்பது குறித்து இலங்கை இந்திய அரசாங்கங்க ளுக்கிடையே பல சுற்றுப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றாலும், இப்பேச்சு வார்த்தைகளின் விளைவுகளில் ஒன்று இவர்களை நாடற்ற வர்களாக்கியமையாகும்.

1964ஆம் ஆண்டு இலங்கைப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விற்கும், இந்தியப் பிரதமர் லால் பகதூர் சாஸ்திரிக்குமிடையே இடம் பெற்ற பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, அன்றைய சனத்தொகையான 975,000 பேரில் 525,000 பேரை இந்தியாவும் 300,000 பேரை இலங்கையும் ஏற்றுக் கொள்வதென்று தீர்மானிக்கப்பட்டது. மீதமுள்ள 150,000 பேர் 1974ஆம் ஆண்டு ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவிற்கும், இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, அரைவாசியான 75,000 பேர் இலங்கைக்கும், மீதம் அரைவாசி பேர் இந்தியாவிற்குமெனத் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் இந்தியர்களின் நிலை பற்றி இரு அரசாங்கங்களும் கொண்டிருந்த நிலைப்பாடாகும். யாதெனில் இந்தியாவில் 1928ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் நிறைவேற்றிய இந்தியக் குடியேற்றச் சட்டம் (Indian immigration act) சுட்டிக்காட்டியதன் படி, இந்தியாவிலிருந்து குடியகன்று வேறொரு நாட்டில் குடியேறி வாழத்தொடங்கி 5 ஆண்டுகள் கடந்ததன் பின்னர் அவர்கள் அந்த நாட்டின் பொறுப்பாக ஆகிவிடுவார்கள். இந்த நிலைப்பாடு காரணமாக இலங்கையில் குடியேறி வாழும் இந்தியர்கள் விடயம் இலங்கை சம்பந்தப்பட்டதெனக் கூறியது. ஆனால், இலங்கை அரசு இந்தியர்களில் பெரும்பான்மையோரை இந்தியாவிற்கு திருப்பி அனுப்புவதிலேயே ஆர்வம் காட்டி வந்தது. ஆகவே இந்தப் பிரச்சினை ஒரு எண்ணிக்கை சார்ந்தவொன்றாக உருவெடுத்தது. 1950களில் இலங்கை - இந்தியப் பிரதமர்களோடு மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளில் குறைந்த எண்ணிக்கையினரையே இந்தியப் பிரதமர் நேரு ஏற்றுகொள்ளத் தயாராகவிருந்தார். இதன் காரணமாக நேரு சில வரலாற்றாசிரியர்களால் விமர்சிக்கப்பட்டார். பல்வேறு சர்வதேச, பிராந்திய அரசியல் காரணமாக சாஸ்திரி அதிக எண்ணிக்கையினரை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்பந்தத்தை நோக்கித் தள்ளப்பட்டார். இந்தப் பிரச்சினையின் தீர்வு இலங்கைக்கு சாதகமான ஒன்றாகவே கருதப்பட்டது. ஆனால், இந்த ஒப்பந்தம் எதிர்பார்க்கப்பட்டவாறு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

1964ஆம் ஆண்டு செய்துக் கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 1968இல் சட்டமாக்கப்பட்டாலும் இலங்கையின் உள்நாட்டு யுத்தம், 1965இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் என்பவை காரணமாக 1984 வரை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்ட காலத்தில் ஏறக்குறைய 510,000 பேர் தாயகம் திரும்பினர். 7 பேர் இந்தியா சென்றால் 4 பேருக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது. 1984இல் உள்நாட்டு யுத்தம் காரணமாக இலங்கை இந்தியக் கப்பற் போக்குவரத்து தடைப்பட்டமையால், தாயகம் திரும்புவோரின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டது. இலங்கைப் பிரஜாவுரிமைச் சட்டம் (1948) இலங்கை இந்தியப் பாகிஸ்தானியப் பிரஜாவுரிமை வசிப்பிட சட்டம் (1949) ஆகியவற்றின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளைவாக வம்சாவளிப் பிரஜை என்றும், பதிவுப் பிரஜை என்றும் இரு பிரிவினர் தோற்றம் பெற்றனர். மிகவும் கடினமான நிபந்தனைகளின் அடிப்படையிலேயே இந்தப் பிரஜாவுரிமை வழங்கப் பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த எண்ணிக்கை 1964 மற்றும் 1974 ஒப்பந்தங்களின்படி, பிரஜாவுரிமை பெற்றவர்களால் அதிகரிக்கத் தொடங்கியது. 1947இல் 7 பேரைப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிய இந்த சமூகம், அதற்குப் பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் ஒருவர்கூட தெரிவு செய்யப்படாத நிலையில் 1977 தேர்தலிலேயே முதன்முறையாக ஒருவரைத் தெரிவு செய்யக் கூடியதாக இருந்தது. பிரஜாவுரிமையைத் தொடர்ந்து, வாக்குரிமை பெற்றவர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பிற்கேற்ப பாராளுமன்றப் பிரதிநிதித்துவமும் அதிகரிக்கத் தொடங்கியது. இதன்காரணமாக இம்மக்களின் அரசியல் முக்கியத்துவம் அதிகரிக்கத் தொடங்கியது. 1977இல் அமைச்சரவையில் இம்மக்களின் பிரதிநிதிகள் அங்கம் பெற்று தேசிய அரசியல் அரங்கில் இடம் பெறலாயினர். தோட்டத்துறைக்காகத் தனியான அமைச்சொன்று உருவாக்கப்பட்டு, அரச வளங்கள் தோட்டத் துறையின் வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காகச் செலவழிக்கப் பட்டன.

## நிலவுரிமைக்கான எதிர்ப்பு

வாக்குரிமையை ஒத்ததாக இந்தியர்களின்பால் எதிர்ப்பை ஏற்படுத்திய இன்னுமொரு காரணி நிலம் குறித்தவொன்றாகும். தோட்ட உற்பத்தி முறை உருவாகத் தொடங்கிய காலந்தொட்டே, நிலம் பெரும் பான்மையினரால் உணர்வு பூர்வமாக நோக்கப்பட்டது.

முடிக்குரிய காணி அத்துமீறல் சட்ட மூலம் 1840ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு பயிரிடப்படாத நிலங்கள், வனப்பகுதிகளை அரசு பொறுப்பேற்று அவை தோட்டப்பயிர்ச் செய்கைக்காக உற்பத்தி யாளர்களுக்கு வழங்கப்பட்டன. இவற்றிற்குக் கிராம மக்கள் சட்ட ரீதியான உரித்தைக் கொண்டிராவிட்டாலும், பரம்பரையாக கையகப் படுத்தப்பட்ட நிலம் அவர்களுக்கே உரியது என்ற நிலைப்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவியது. அத்தோடு கிராம சனத்தொகைப் பெருக்கத்தோடு அண்டிய வனப்பகுதியையும் அவர்கள் சேனைப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தக்கூடிய உரித்தினை பெற்றிருந்தார்கள் என்ற நிலைப்பாடும் காணப்பட்டது. இதன் காரணமாகத் தோட்டங்களுக்காக நிலம் கையகப்படுத்தப்பட்டபோது, கிராம மக்களிடையே ஒரு எதிர்ப்புணர்வு கிளம்பியது. அத்தோடு இலங்கையரல்லாத வெளிநாட்டவர்கள் என்ற பகுப்பிற்குள் வந்த இந்தியர்கள் நிலக்கொள்வனவு செய்ய முற்பட்ட போது, அவர்களுக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டது. 1938ஆம் ஆண்டு காணி அபிவிருத்திச் சட்டத்தின் மூலமாக இந்தியர்கள் நிலம் கொள்வனவு செய்தல் தடைசெய்யப்பட்டது. இந்திய எதிர்ப்பின் ஒரு உச்ச நிலையாகவே இது அன்று கருதப்பட்டது. அதேவேளை தோட்டத் தொழிலாளர்கள் நிலவுரிமை பெற்றுக் கொள்ளுதல் எனபது ஒரு போராட்ட வரலாறாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. "1946இல் உருள வள்ளிப் போராட்டம், 1977இல் பத்தனையில் நிலவுரிமைக்காக சிவனு லட்சுமணன் இறப்பு" என்பன குறிப்பிடத்தக்கன.

இக்காலப்பகுதியில் இடம்பெற்ற சில நிகழ்வுகள் குறிப்பிடத் தக்கவை. அவற்றில் 1972இல் தோட்டங்கள் அரச மயமாக்கப்பட்டமை முக்கியமானதொன்றாகும். இது ஒரு முன்னேற்றகரமான நடவடிக்கை என்பதால், தொழிலாளர்களுக்கு நன்மை பயக்குமென எதிர்பார்க்கப் பட்டது. ஆனால், இந்த நடவடிக்கைக்குப் பின்னர் இவர்களுக்கு நன்மைகளைவிட தீமைகளே அதிகமாக ஏற்பட்டன. தோட்டப் பாடசாலைகள் அரசாங்கம் பொறுப்பேற்றமை, லயன் காம்பிராக்கள் தரமுயரத்தப்பட்டமை, சிறுவர் பராமரிப்பு நிலையப் பதவிகள் உருவாக்கப்பட்டமை, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சம்பளம் என்பன சில முன்னேற்றகரமான நடவடிக்கைகளாகும். அதேவேளை தோட்ட உத்தியோகத்தர் நியமனங்கள் குறிப்பாகச் சிறுவர் பராமரிப்பாளர் என்பவற்றிற்குப் பெரும்பான்மையினத்தவர் நியமனம், நிலங்கள் தோட்டத் தொழிலாளர்களுக்கு அல்லாமல் வெளியார்களுக்கு வழங்கப்பட்டமை, நட்சா போன்ற புதிய முயற்சிகளில் தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டமை, 1977ஆம் ஆண்டளவில் இன வன்முறை காரணமாகத் தொழிலாளர்கள் தோட்டங்களைவிட்டு வெளியேறுதல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன இச்சமூகத்திடையே பலத்த தாக்கத்தை ஏற்படுத்தின. 1981இல் இரத்தினபுரி போன்ற மாவட்டங்களில் இனக்கலவரத்தின் தாக்கங்கள் பாரிய அளவில் அமைந்திருந்தன. 1983 ஜூலை இனக்கலவரம், இம்மக்களின் பாது காப்பைக் கேள்விக் குறியாக்கியது. செறிந்து வாழுகின்ற நுவரெலிய, பதுளை மாவட்டங்களைத் தவிர ஏனைய பிரதேசங்களில் பாதுகாப்பு பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. இலங்கை இந்திய ஒப்பந்தங்கள் காரணமாக இலட்சக்கணக்கானோர் நாட்டை விட்டகல்வதற்கு இனக் கலவரம் காரணமாக அமைந்ததோடு, பலர் பாதுகாப்பு காரணமாக வட கிழக்குப் பகுதிகளுக்குச் சென்று குடியேறினர். இதனால் மலையகம் ஒரு சிதைக்கப்பட்ட சமூகமாயிற்று.

## இன்று (2003 - 2022) தேசிய நீரோட்டத்தில் ஒன்றிணைதல்

அரசியல் நிலை, குறிப்பாகப் பிரஜாவுரிமைப் பிரச்சினை முற்றிலும் தீர்க்கப்பட்ட நிலையில், தேசிய நீரோட்டத்தில் ஒன்றிணைதலே பிரதான எதிர்பார்ப்பாக இருந்தது. 2010 -2015ஐத் தவிர, 1997 இலிருந்து தோட்டத் தொழிலாளர்களை மையப்படுத்திய தோட்ட உட்கட்டமைப்பு எனும் பெயரில் அமைச்சொன்று இம்மக்களின் பிரதிநிதிகளை அமைச்சர்களாகக் கொண்டு இயங்கியது. இந்த அமைச்சின் மூலமாகப் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. பிரதானமாக வீடமைப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளைக் குறிப்பிடலாம். லயன் காம்பிராக்களுக்குப் பதிலாகத் தனி வீடுகள் கட்டப்பட்டமையும் இதில் குறிப்பிடத்தக்கது.

இவற்றிற்கு 2015இற்குப் பின்னர் காணி உரித்து வழங்கப்பட்டமை ஒரு புதிய வளர்ச்சியாகும். அத்துடன் அனைத்து தோட்டத்துறைக்கும் மின்சாரம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க மற்றுமொரு அம்சமாகும். பாதைகள் புனரமைக்கப்பட்டமை தோட்ட மக்களின் போக்குவரத்தினை இலகுபடுத்தியது. கல்வித் துறையைப் பொறுத்தவரை, ஆசிரிய நியமனங்கள் பாரியஎண்ணிக்கையில் வழங்கப்பட்டமை காரணமாக இன்று 17,000 க்கு மேற்பட்டவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களாகப் பணியாற்றுகின்றனர். பல்கலைக்கழக அனுமதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி காணப்பட் டுள்ளது. மிக நீண்ட காலமாக மொத்த அனுமதியில் 1% வீதத்துக்குக் குறைந்திருந்த வீதம் தற்போது 2% வீதத்தைத் தாண்டியுள்ளது.

தேசிய நீரோட்டத்தில் இச்சமூகத்தினரை ஒன்றிணைத்தல் என்பது, அமைச்சின் தொலை நோக்காகக் கருதப்பட்டு, அதற்கேற்ற வகையில் அமைச்சின் செயற்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டன. பொதுச் சேவைகள் என்ற வரையரைக்குள் வருகின்ற அனைத்தும் தோட்ட நிர்வாகமே வழங்கி வருகின்ற நிலைமையே காணப்பட்டு வந்தது. அமைச்சின் அபிவிருத்தித் திட்டங்கள் தோட்டங்களைச் சென்றடையத் தொடங்கிய தன் பின்னரேயே தோட்ட சமூகம், அரச சேவைகளின் பலன்களை அனுபவிக்கத் தொடங்கினர். கல்வி, சுகாதார சேவைகளை மற்றும் தபால் சேவை என்பன அடிப்படையானவை. இவற்றுள் சுகாதாரம் மற்றும் தபால் சேவை என்பவற்றை இந்த மக்கள் முழுமை யாகப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தொடர்கிறது. சுகாதார ஆரம்ப காலத்திலிருந்தே தோட்ட நிர்வாகமே பொறுப்பேற்று வழங்கி வந்தது. அரசாங்கத்தின் பங்களிப்பு தோட்ட மருத்துவ உதவியாளர் நியமனம், சிலவகை மருந்து வழங்கல் எனபவற்றிற்கே மட்டுப்படுத்தப் பட்டிருந்தது. தோட்ட சுகாதாரத்தை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என்ற அமைச்சரவைத் தீர்மானம் 2003இல் மேற்கொள்ளப் பட்டிருந்தாலும், இன்றுவரை இது முழுமையாக நிறைவேற்றப்பட வில்லை. 2019ஆம் ஆண்டிலும் மீண்டும் ஒரு அமைச்சரவைப் பத்திரம் சமரப்பிக்கப்பட்டு ஆட்சி மாற்றம் காரணமாக இழுத்தடிப்பு இன்னும் தொடர்கிறது. தபால் சேவைக்காகத் தோட்டத் தபாற்காரர் (பியோன்) 500 பேருக்கான நியமனம் 2006இல் அமைச்சரவையால் அங்கீகரிக்கப் பட்டிருந்தாலும், 300 பேரே இதில் நியமனம் செய்யப்பட்டனர்.

மீதமுள்ளவர்களை நியமிப்பது இன்னும் இழுபறியாகவே இருக்கின்றது. அரசாங்க நிறுவனங்களில் இம்மக்கள் தொடர்பு கொள்ளும்போது, சிங்கள மொழியில் பரிச்சயம் இல்லாத காரணத்தால் இவர்கள் தரகர்களை நாடவேண்டிய நிலை காணப்பட்டது. இதனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிவர்த்திக்கும் முகமாகத் தோட்ட சமூகத் தொடர்பாடல் வசதியாளர் (Plantation Community Communication Facilitator) என்ற ஒரு புதிய அரச உத்தியோகப் பிரிவினர் 500 பேர் நியமிக்கப்பட்டனர். பலர் இச் சேவையிலிருந்து வேறு உயர்தரப் பதவி நியமனம் பெற்றமையினால், இத்தரத்திற்கு நியமிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை தற்போது குறைந்து வருகின்றது.

## புதிய கிராமம் தொடர்பான எண்ணக்கரு

இக்காலப்பகுதியில் குறிப்பாக 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து முக்கிய முன்னேற்றங்கள் இடம் பெற்றன. இதுவரைக்கு மிருந்து வந்த தோட்ட வீடமைப்பு என்பது "மலைநாட்டுப் புதிய கிராமங்கள் அபிவிருத்தி அமைச்சு" என்று பெயர் மாற்றம் பெற்றது. "தோட்டங்கள்", "புதிய கிராமங்கள்" என்ற புதிய கருத்துருவாக்கம் பெற்றது. இது ஒரு புதிய செல்நெறியை கோடிட்டுக் காட்டியது எனலாம்.

இதனை மேலும் வலுப்படுத்துவதாக "பெருந்தோட்ட பிராந்தியங் களுக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகாரசபை" நிறுவப் பட்டமை குறிப்பிடத்தக்கது. ஏலவே, குறிப்பிட்ட தனி வீடுகளுக்கான சட்டரீதியான உரித்து வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. நுவரெலியா மாவட்டத்தில் பிரதேச சபைகளின் எண்ணிக்கை ஐந்திலிருந்து பத்தாக உயர்த்தப்பட்டது. ஏனைய பிரதேசங்களில் 8000 பேருக்கு ஒரு பிரதேச சபை என்று காணப்பட்ட நிலையில், நுவரெலிய மாவட்டத்தில் 2 இலட்சத்திற்கு மேற்பட்டோருக்கு ஒரு சபை என இரண்டு பிரதேச சபைகள் காணப்பட்டன. இந்த ஜனநாயகத்திற்கு மாறான நிலைமை இந்த எண்ணிக்கை அதிகரிப்பு காரணமாக இல்லாதொழிந்தது. இதனைத் தொடர்ந்து பிரதேச செயலகங்களின் எண்ணிக்கையும் ஐந்திலிருந்து பத்தாக அதிகரிக்கப்பட்டது. ஆனால், நுவரெலிய பிரதேச செயலகங்கள் இரண்டிற்கு மாத்திரமே உப செயலகங்கள் அமைப்பதற்கான அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்பத்தி முறைமையில் மாற்றம்**

பொருளாதார ரீதியாகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தற்போது ஒரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. தினசரி கூலி ரூபாய் 1000/= என்ற கோரிக்கை கூட்டு ஒப்பந்தம் மூலமாகத் தீர்மானத்திற்கு வரமுடியாத நிலையில், அரசாங்கத் தலையீட்டுடன் இது வழங்கத் தீர்மானிக்கப்பட்டாலும், தோட்டக் கம்பனிகள் நீதிமன்றம் வரை சென்றே முடிவிற்கு வந்தன. அதிகரித்த உற்பத் திச் செலவிற்கு மத்தியில் அதிகரித்த கூலியை வழங்க முடியாத நிலையில், கம்பனிகள் சில மாற்று யோசனையாக வெளிவாரி உற்பத்தி முறைமை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளன. இதன்படி ஒரு குறிப்பிட்ட பரப்பினை அல்லது குறிப்பிட்ட எண்ணிக்கையான தேயிலைச் செடிகளைத் தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வழங்கி, பறிக்கப்படுகின்ற தேயிலைக் கொழுந்தைக் குறிப்பிட்ட விலையில் தோட்ட நிர்வாகத்திற்கு விற்கக் கூடிய முறைமை இதுவாகும். இதுவரையில் இது குறித்துத் தோட்ட முதலாளிமார் சம்மேளனம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கிடையில் ஒரு முழுமையான இணக்கப்பாடு எட்டப்படவில்லை. தோட் டத்துறையைப் பொறுத்தவரை குறைந்த கூலி, கல்வி, தராதரம் போன்ற காரணங்களால் இளைஞர்களின் வெளியேற்றம் தொழிலாளர் பற்றாக்குறையை ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணமாகத் தோட்ட நிலங்களை முழுமையாகப் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

**நாளை**

இலங்கைக்கு இம்மக்கள் வருகை தந்து 200 ஆண்டுகள் பூர்த்தியடையும் இவ்வேளையில், இச்சமூகத்தின் அரசியல் எதிர்பார்க்கைகள் என்ன என்ற வினாவுக்கு, விடையிறுக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. அரசியல் ரீதியாக இச்சமூகம் தமது அடையாளத்தை மலையக மக்கள் என நடைமுறையில் வெளிப்படுத்திக் கொண்டாலும், சட்டரீதியாக இன்னும் இது உறுதிப்படுத்தப்படவில்லை. இலங்கையின் தேசிய இனங்கள் அரசியல் யாப்பு ரீதியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகரிக்கப்பட வேண்டும். இதன்படி மலையக மக்கள் என்ற பிரிவு இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. இன்று இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கல் பேசப்படுகின்றது. மலையக சமூகத்தினர் தங்களது அரசியல் அபிலாஷைகளை நிறை வேற்றிக் கொள்ளவும் தங்களது அடையாளத்தையும் இருப்பையும் பாதுகாத்துக் கொள்ளவும் இவர்கள் தொடர்ச்சியான புவியியல் பிரதேசத்தில் வசிக்காத காரணத்தினால் நிலத் தொடர்பற்ற சமுதாய சபை ஒன்றை (Non Territorial Community Council) யாப்பு சீர்திருத்த குழுவினர்க்கு முன்வைக்கப்பட்டுள்ளது. மாகாண சபைகள் பற்றிய 13ஆம் சீர்திருத்தம், முழுமையாக அமுல்படுத்தப்பட்டாலும் மலையக மக்கள் இதனால் அதிகம் நன்மையடையப் போவதில்லை. எனவே தான், இந்த ''சமுதாய சபை'' முன்மொழியப்பட்டுள்ளது.

பொருளாதார ரீதியாகத் தோட்ட உற்பத்தி முறைமை பாரிய மாற்றங்களின்றி 200 வருடங்களாக வருகின்றது. அதேபோலவே தொடர்ந்திருந்து வருகின்றது. இந்த மக்களை ஒரு அடைபட்ட நிலையில் தேசிய நீரோட்டத்தில் ஒன்று கலக்காதவாறு வைத்திருந்தமை அவர்கள் வாழ்க்கைத்தரத்தின் எல்லா அம்சங்களிலும் ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுகையில், ஒரு குறைவு நிலையை அனுபவிப்ப தற்கு இம்முறைமை பங்களிப்பு செய்து வருகிறது. பிரதேச சபைகள் தோட்டத்துறையில் தடையின்றி செயற்பட முடியுமெனினும், அதனது தொழிற்பாடுகள் வரையறுக்கப்பட்டதாகவே உள்ளன. உதாரணமாக வீடமைப்புத் திட்டங்கள். தோட்டங்களில் காணப்படும் இவ்வீடமைப் புகள் தோட்ட நிர்வாகத்தின் கீழேயே பராமரிக்கப்படுகின்றன. வீதி களுக்கு மின்சாரம் வழங்கல், கழிவகற்றல் என்பனவற்றில் பிரதேச சபையின் ஈடுபாடு கிடையாது.

தற்போது உரிமை தொடர்பாக அதிக அளவில் பேசப்பட்டு வருவதுடன் இதில் இம்மக்களுக்கான காணி உரிமை குறித்த விடயம் முக்கியமானதாகும். புதிதாகக் கட்டப்பட்ட தனி வீடுகளுக்கு 7 பேர்ச் காணிக்கான சட்ட ரீதியான உரிமம் வழங்கப்பட்டிருந்தாலும், வாழ்வாதாரத்திற்காகச் சட்ட ரீதியாகக் காணித்துண்டுகள் இன்னும் வழங்கப்படவில்லை. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20 பேர்ச் காணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படவேண்டும் என்பது பலராலும் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையாகும். அதேவேளை நாட்டின் தற்போதைய எதிர்க் கட்சித் தலைவர் உட்பட மலையகத் தலைமைகளும் இத்தொழிலாளர் களைச் சிறு விவசாயிகளாக மாற்று வோம் என உறுதி மொழி வழங்கியுள்ளனர். தனி வீடுகளுக்காக 7 பேர்ச் காணி பெற்றுக் கொள்ள ஏற்பட்ட சிரமங்களைக் கவனத்தில் கொண்டு பார்க்கையில், இந்த 20 பேர்ச் காணி விடயமும் சிரமமாக இருக்கும் என்றே தோன்றுகிறது. இந்த நிலம் வாழ்வாதாரத்திற்கானது என்பதால், இம்மக்கள் தொடர்ந்து தோட்ட உற்பத்தி முறைமைக்கும் அதோடு ஒட்டிய கட்டுப்பாடு களுக்கும் உட்பட்டவர்களாகவே இருப்பர். இதற்கமைவாக ஒரு புதிய கிராமமாக உருவாக இந்த முறை மையில் சாத்தியங்கள் குறை வாகவே காணப்படும்.

இவர்கள் சிறு உடைமையாளர்களாக மாற்றப்பட்டால், இவர்கள் தோட்ட உற்பத்தி முறைமையினின்று விலகி இருப்பர். சட்ட ரீதியாக இவர்களுக்கு இந்த நிலம் உரித்தாக்கப்படும். சிற்றுடைமை என்பது சட்ட ரீதியாக 10 ஏக்கருக்குக் குறைவான நிலப்பரப்பைக் கொண்ட தாகும். நான்கு இலட்சத்திற்கு மேற்பட்ட சிற்றுடைமைகள் தற்போது நாட்டில் காணப்படுகின்றன. 1980களில் ஒரு இலட்சமாகக் காணப்பட்ட இச்சிற்றுடைமைகள் தற்போது நான்கு மடங்காக அதிகரித்துள்ளன. இவை பெரும்பாலும் பெரும்பான்மை இனத்தவருக்கே வழங்கப் பட்டன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். தோட்டத் தொழிலா ளர்களுக்கு இவை வழங்கப்படுமானால் இந்த எண்ணிக்கை உச்ச அளவில் இரண்டு இலட்சத்தால் அதிகரிக்கும்.

தோட்டக் கம்பனிகள் தங்கள் உற்பத்தி நடவடிக்கையைப் பதப் படுத்தலுக்கு மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ளும். வேறு வார்த்தை களில் கூறுவதானால், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் கம்பனிகள் ஈடுபடாது. இத்தகைய பின்புலத்தில் புதிய கிராமங்கள் நாட்டில் காணப்படும் ஏனைய மரபுக் கிராமங்களைப் போல உருவாகச் சாத்தி யங்கள் அதிகமாகும். அரச சேவைகளைத் தோட்ட நிர்வாகத்திற்கூடாக அன்றி நேரடியாகப் பெற்றுத் தேசிய நீரோட்டத்தில் ஒன்றிணைய வழி பிறக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவுரை

இருநூறு ஆண்டு காலப்பகுதியில் ஏறக்குறைய 180 ஆண்டுகள் அல்லது 90 வீதமான காலப்பகுதி தமது அரசியல் நிலையை நிலை நாட்டிக் கொள்ளவே இச்சமூகம் போராடி வந்துள்ளது. இதன் காரண மாகவே நாட்டின் அபிவிருத்திச் செயல்முறையின் பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாது போயிற்று. இதன்விளைவாக, ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுகையில் வாழ்வாதாரக் குறிகாட்டிகள் அனைத்தும் ஒரு குறைவு நிலையைக் காட்டி நிற்கின்றன. அரசியல் பரவலாக்கலில் இச்சமூகத்தின் அரசியல் அடையாளம் அங்கீகரிக்கப்படலும் பொருளாதார ரீதியாகத் தோட்ட உற்பத்தி முறைமையினின்று விடுபடுதலும் இவற்றினூடாக அனைத்து உரிமை களையும் முழுமையாக அனுபவிப்பதே ஏனைய சமூகங்களோடு சமத்துவ நிலையை எய்துவதற்கு வழிகளாகும். இதற்காகச் சில குறைதீர் (affirmative) செயற்பாடுகள் அவசியமாகும். இது குறித்த கருத்தாடல்களும், அரசியல் அழுத்தங்களுமே எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டியவைகளாகும்.

- ஆசிரிய சிகரம் பிலிப் இராமையா
சிகரம் குறித்த சாரல் துளிகள்
- 22, மார்ச், 2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




11

# ராஜன் ஹூல் மற்றும் கிருபை மலரின் இறந்து பிறந்த ஜனநாயகம்

''இறந்து பிறந்த சனநாயகம் : சுதந்திரத்தின் போது, இலங்கை மறுதலித்த சம உரிமைகள்'' என்ற ராஜன் ஹூல் மற்றும் கிருபமலர் ஹூல் ஆகியோரின் ஆங்கில நூலானது, 2023இல் ''மலையகம் 200'' என்ற தொனிப்பொருள் இன்று பேசும் பொருளாகியுள்ள வேளையில் வெளிவந்திருப்பது மிகவும் பொருத்தமான ஒன்றாகும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கணிதத்துறை விரிவுரையாளராக பணிபுரிந்த ராஜன் ஹூல் ஈழத்து அரசியல் குறித்து பல நூல்களை வெளியிட்ட ஆய்வாளராவார். அவரது துணைவியரான கிருபைமலர் ஹூல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நூலகராக பணிபுரிந்தவர். இருவரின் ஆழமான ஆய்வுமுயற்சியின் விளைவே இந்நூல் ஆகும்.

மலையக அரசியல் வரலாறு பற்றி கூறும் இந்நூல் தொழிற் சங்கவாதி எஸ். நடேசனின் ''மலையகத் தமிழரின் வரலாறு'' மற்றது, சட்ட விரிவுரையாளரும், ஆய்வாளருமான யோகேஸ்வரி விஜய பாலனின் 'முடிவில்லா சமத்துவமின்மை'' ஆகிய நூல்களை நினைவு படுத்துகின்றது. பதின்மூன்று அத்தியாயங்களையும் 10 பிற் பதிவு களையும் (Post Script) 9 பின்னிணைப்புகளையும் (Appendix) கொண்ட 700ற்கும் அதிகமான பக்கங்களைக் கொண்ட இந்நூல் மலையக மக்களின் வரலாற்றில் ஏற்பட்ட வலிகளையும் சோகங்களையும் பதிவு செய்து 1922 இற்குப் பின் அரசியல் அரங்கில் அது குறித்து அவ்வப்போது பேசப்பட்ட விடயங்களை, சான்றுகளோடு, உணர்வு பூர்வமாக எடுத்தியம்பும் ஒரு கனதியான நூலாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் 1922-1972 காலப்பகுதியில் இலங்கையின் சனத் தொகையில் 7% சதவீதத்தை பிரதிபலிக்கும் மலையக மக்கள் குறித்து, சட்டசபை, அரச சபை மற்றும் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டங்களை மையப்படுத்தி, அதன் பின்புலத்தை ஆய்வதாக அமைந்துள்ளது. இந்த அடிப்படையில் இம்மக்களது அரசியல் மற்றும் பொருளாதார அம்சங்கள், தெளிவாக விளக்கம் பெறுகின்றன. 1922ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட இந்திய குடியகல்வு சட்டம், இந்தியாவிலிருந்து குடியகன்று வேறு நாடொன்றில் 5 வருடங்களுக்கு அதிகமாக வாழ்ந்திருக்கும் பட்சத்தில், அவர்கள் பற்றி, இந்தியா கரிசனை கொள்ளாது என்ற நிலைப்பாடு இலங்கைவாழ் இந்தியர்களின நிலையை பாதித்த ஒன்றாக அமைந்தது. 1823களிலிருந்து இலங்கை வந்த இந்தியர்கள், இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு என்ற இந்திய நிலைப்பாட்டை தொடர்ந்து இந்தியர்களின் அரசியல் நிலையை தீர்மானிப்பதில் பாரிய செல்வாக்கு செலுத்தியது.

1922ஆம் ஆண்டு சட்டசபையில் வாக்குரிமை விடயம் விவாதத்திற்கு வந்தபோது, இலங்கை அரசியல் தலைவர்கள், இந்தியர்கள், நிரந்தரமாக வாழ தொடர்ச்சியாக விருப்பமற்று இருப்பதால் அவர்களுக்கு இவ்வுரிமை வழங்கப்படுவதை கடுமையாக எதிர்த்தனர். இந்த விவாதம் இந்நூலில் மிக விபரமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. சுதந்திரத்திற்கு முன்னும், பின்னும் சட்ட உருவாக்க சபைகளில் பல்வேறு அரசியல்வாதிகளால் ஆற்றப்பட்ட உரைகளை மையப் படுத்தி, அதுபற்றி கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளமையே, இந்நூலின் பிரதான பங்களிப்பு எனலாம். இதன் பிரதான தொனிப் பொருள் இந்திய எதிர்ப்பின், தோற்றத்தை மீட்டெடுத்து அது எவ்வாறு இம்மக்களின் அரசியல், பொருளாதார வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தியதை விளக்குவதாகும். சிங்கள தலைவர்கள் இந்தியர்களுக்கு வாக்குரிமை வழங்குவதை கல்வி அறிவு சொத்துரிமை, வசித்திருத்தல் (domicile) ஆகிய அம்சங்களின் அடிப்படையில், எதிர்ப்பு தெரிவித்தனர். எவ்வாறாயினும், காலனித்துவ அரசாங்கம், டொனமூர், அரசியலமைப்பு சீர்திருத்தத்தின்படி சர்வசன வாக்குரிமையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கியபோது, இந்தியர்களையும் உள்ளடக்கியிருந்தனர். இதன் காரணமாக, அரச சபையின் (State Council) இந்தியர்கள் மூவருக்கு பிரதிநிதித்துவம் கிடைத்தது. இது சிங்கள தலைவர்களுக்கு உவப்பாக அமையவில்லை. எனவே, 1941இல் பதிவு செய்தல் மற்றும் குடிவருகை என இரண்டு சட்டங்களை, இந்தியர்களை வாக்குரிமை பெறுவதிலிருந்து விலக்கி வைப்பதற்கு அல்லது வரையறுப்பதற்கு நிறைவேற்றப்பட்டன.

சிங்கள தலைவர்களின் அச்சமெல்லாம், இந்தியர்கள் வாக்குரிமை பெற்றால் தங்களது அரசியல் பலம் குறைந்து விடுமென்பதேயாகும். இந்த அச்சத்தோடு இன்னுமொரு அரசியல் அபிவிருத்தி, இவர்களை கவலைக்குள்ளாக்கியது. இடது சாரிகளின் உருவாக்கமும், அவர்கள் தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்டியமையும் காரணமாக அமைந்தது. 1940 ஜனவரி 10ஆம் திகதி சம்பள உயர்விற்காக, கண்டி மாவட்டத்தில் ஹங்குரங்கத்தைக்கு அருகில் முல்லோயா தோட்டத்தில் இடம்பெற்ற போராட்டத்தில், கோவிந்தன் என்ற தொழிலாளி சுடப்பட்டு உயிர்நீத்தான். இந்தப் போராட்டம் இடது சாரிகளால் மேற்கொள்ளப்பட்டதாகும். அத்தோடு, இது நகர சிங்கள தொழிலாளர்களுக்கும்,தோட்ட தமிழ் தொழிலாளர்களுக்குமிடையே ஒருவர்க்க ஒற்றுமை உருவாவதை கோடிட்டு காட்டியது. வலது சாரி தலைவர்கள் இது தங்களின் அரசியல் தலைமைக்கு அச்சுறுத்தலாக அமையுமென நம்பினர். இரண்டாம், உலக யுத்தம் அதன் விளைவுகள் காரணமாக இடது சாரி தலைவர்கள் கைது செய்யப்பட்டதோடு, 1940 தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இத்தகைய பின்புலத்தில் சுதந்திரத் திற்குப் பின்னர் உருவான புதிய பாராளுமன்றம் நிறைவேற்றிய 1948இல் இலங்கை பிரஜாஉரிமை சட்டம், பிரஜா உரிமையை வரை விலக்கணப்படுத்தி இந்தியர்களின் பிரஜா உரிமையை பறித்தெடுத்து இறுதியில் அவர்களை நாடற்றவர்கள் என்ற நிலைக்கு தள்ளியது. இதன் காரணமாகவே நூலாசிரியர்கள் தமது நூலுக்கு "இறந்த பிறந்து சனநாயகம்" சுதந்திரத்தில் இலங்கை மறுதளித்த சமஉரிமைகள் என்று தலைப்பிட்டுள்ளனர். இந்த நூலை 1972ஆம் ஆண்டின் குடியரசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்பு பற்றிய ஒரு பிற்பதிவோடு நிறைவு செய்துள்ளனர். இங்கு சோல்பரி யாப்பில், சிறுபான்மையோருக்கு வழங்கப்பட்ட காப்பீடான 29ஆம் சரத்து நீக்கப்பட்டமை பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

தொடர்ந்து 1949ஆம் ஆண்டு இந்திய பாகிஸ்தானிய வசிப்பிட பிரஜாவுரிமை சட்டத்தை, இழந்த பிரஜா உரிமையை பெற்றுக் கொள்வதற்காக நிறைவேற்றப்பட்டது. இதனது சட்ட ஏற்பாடுகள், மிகவும் வரையறுக்கப்பட்ட நிலையிலும் அதற்கு மேலதிகமாக விண்ணப்பங்களை நிராகரிக்குமாறு நிர்வாக ரீதியாக அறிவுறுத்தப்பட்ட நிலையில் பிரஜாஉரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை குறைவானதாகவே அமைந்திருந்தது. இதன்போது ஏற்பட்ட இன்னுமொரு அரசியல் அபிவிருத்தியும், சுவையான ஒன்றாகும். 1948இல் இலங்கை பிரஜாஉரிமை சட்டம் நிறைவேற்றப்பட்டபோது இலங்கை தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் காங்கிரஸ் இச்சட்டத்தை எதிர்த்தது. எனினும் தொடர்ந்து அதன் தலைவரான ஜி.ஜி.பொன்னம்பலம் அரசாங்கத்தோடு இணைந்தமை காரணமாக, எஸ்.ஜே.வி.செல்வநாயகம், தலைமையிலான குழுவினர், சமஷ்டி கட்சி என்ற புதிய கட்சியை உருவாக்கினர். 1949ஆம் ஆண்டின் சட்டத்தை ஜி.ஜி.பொன்னம்பலம் ஆதரிக்க, சமஷ்டிக் கட்சி, இ.தொ.கா ஆகியவை எதிர்த்தன. அத்தோடு, இ.தொ.கா இச்சட்டத்தின் கீழ், விண்ணப்பிக்க வேண்டாமென மக்களை அறிவுறுத்தினர். விண்ணப்பிப்பதற்கு கொடுக்கப்பட்ட கால எல்லை 2 வருடங்களாகும். 18 மாதங்கள் எதிர்ப்பினை காட்டிய இ.தொ.கா. பின்னர் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொண்டது. இம்மாற்றத்திற்கு ஜீ.ஜீ.பொன்னம்பலம் தானே காரணம் எனக் கூறியிருந்தார். மீதமுள்ள 6 மாதங்களில் அவசரமாக விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டமையினால், அவை அதிகளவான பிழையான தகவல்களைக் கொண்டிருந்தன. இதன்காரணமாக நிர்வாகிகளுக்கு விண்ணப்பங்களை நிராகரிப்பது மிக இலகுவாகியது.

அடுத்த முக்கியமான அம்சம் யாதெனில் 1967ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தம் (நடைமுறைப்படுத்தல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமாகும். இது, நாடற்றவர் பிரச்சினையை தீர்ப்பதற்காக கொண்டு வரப்பட்டது. இதன்படி, 1964இல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி 975,000 பேரில் 150,000 பேர் நீங்கலாக, 525,000 பேர் இந்தியாவிற்கும், 300,000 பேர் இலங்கைக்குமென தீர்மானிக்கப்பட்டது. மீதமுள்ள 150,000 பேரை 1974இல் சிறிமா-இந்திரா ஒப்பந்தப்படி இரு நாடுகளும் சமமாக தங்களுக்குள் பிரித்து கொண்டன. இந்த ஒப்பந்தம் 15 ஆண்டுகளுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். இந்தியாவிற்கு 7 பேர் சென்றால், 4 பேருக்கு இலங்கை பிரஜாவுரிமை வழங்கப்படுமென தீர்மானிக்கப்பட்டது. உள்நாட்டு யுத்த நெருக்கடி அதிகரிக்க இரு நாடுகளுக்குமிடையிலான கப்பற்சேவை 1984இல் நிறுத்தப்பட்டமை காரணமாக, ஒப்பந்த நடைமுறைப்படுத்தல் தாமதிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இயற்கை அதிகரிப்புடன் 500,000 பேர் அளவிலே, இந்தியா சென்றனர். இதனால் நாடற்ற நிலை தொடர்ந்தது. இறுதியாக 2003ஆம் ஆண்டு இலங்கை பிரஜாவுரிமை சட்டத்திற்கு கொண்டு வரப்பட்ட திருத்தத்தின்படி நாடற்ற அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.

பொருளாதாரம் சார்ந்ததாக இந்நூலில், அக்கறை செலுத்தப் பட்டுள்ள விடயம் நிலவுரிமை குறித்ததாகும். வாக்குரிமையை போலவே, இந்திய எதிர்ப்பினை தூண்டிய ஒன்றே, நிலவுரிமையாகும். 1938ஆம் ஆண்டு நில அபிவிருத்தி கட்டளைச் சட்டம், நிலப்பகிர் வினை, இலங்கையர்களுக்கு மாத்திரம், மட்டுப்படுத்தி, இந்தியர்களை விலக்கி வைத்தது. 1820களில் நிலங்கள் பிரித்தானிய கம்பனிகளுக்கு விற்கப்பட்டபோது, கிராமத்தவர்களுக்கு உரிய நிலம் இந்திய தோட்ட தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று கருத்துநிலை உருவம் பெற்றது. சிங்கள கிராமவாசிகள், தோட்டங்களில் வேலை செய்ய விரும்பவில்லை. தொழிலாளர் பற்றாக்குறை ஏற்பட்ட பொழு தெல்லாம், இலங்கை அரசு தொழிலாளர்களை இந்தியாவிலிருந்து பெற்றுக் கொண்டது. 1972இல் அரசு, இத்தோட்டங்களை பொறுப் பேற்கும் போது, இத்தோட்டங்கள் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கும் தனியார்களுக்குமே, சொந்தமாக இருந்தன. காணி சீர்த்திருத்த ஆணைக் குழு, தனியார் ஒருவருக்கு 50 ஏக்கரை உச்ச வரம்பிற்குட்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு மேற்பட்டதை காணிகளை அரசுடைமையாக்கியது. பின்னர், இவை அரச பெருந்தோட்ட கட்டுத்தாபனம் (SLPC), மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை (JEDB) என்பவற்றிற்கு கையளிக்கப்பட்டன. ஏனையவை, பல நிறுவனங்களுக்கும் கிராமத்தவர்களுக்கும் பல்வேறு திட்டங்களினூடாக பகிரப்பட்டன. இவற்றில் தோட்டத் தொழிலாளர்கள் பெருமளவில் உள்வாங்கப்படவில்லை. உதாரணமாக நட்சா (National Agricultural Diversification Settlement Authority - NADSA) திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டபோது, நிலங்கள் பகிரப்பட்டபோது இந்திய தொழிலாளர்கள் தோட்டங்களை விட்டு வெளி யேற்றவும் பட்டனர். சில சந்தர்ப்பங்களில் இது இனமுறுகல் நிலையை தோற்றுவித்தது. கம்பளைக்கு அருகில் டெல்டா மற்றும் டக்குவாரி தோட்ட சம்பவங்கள் இதற்கு உதாரணமாக கூறப்படுகின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் சுதந்திரத்திற்கு முன்னும் தமது நிலவுரிமைக்காக பேராடியிருக்கிறார்கள். 1946ஆம் ஆண்டு கேகாலை மாவட்டத்தில் நெவிஸ்பரி (தமிழில் உருளைவள்ளி) தோட்டத்தின் நிலங்களை கிராமத்தவர்களுக்கு பகிர்ந்தளிக்க அரசாங்கம் எடுத்த முயற்சிக்கெதிராக தொழிலாளர்கள் போராடினர். ஏனைய தோட்டத் தொழிலாளர்களும் இப்போராட்டத்திற்கு ஆதர வளித்தனர். இப்பிரச்சினை நீதிமன்றத்திற்குச் சென்று பின்னர் தீர்ப்பானது, தோட்டத்தொழிலாளர்களுக்கு சார்பாக அமையவில்லை. தோட்டங்களை அரசாங்கம் 1972இல் பொறுப்பேற்றதன் பின்னர், இத்தகைய நிலப்பங்கீடு இடம்பெறத் தொடங்கியது. இத்தகைய ஒன்று, 1977இல் நுவரெலியா மாவட்டத்தில் தலவாக்கலை பிரதே சத்தில், டெவன் தோட்டத்தில் 7000 ஏக்கர் நிலங்களை பிரித்தெடுக்க மேற்கொண்ட போது அது சிவனுலட்சுமணனின் உயிர்த் தியாகத்தோடு, கைவிடப்பட்டது.

இந்திய தமிழர்களின் நாடற்றவர் நிலைமையானது, அவர்களது அபிவிருத்தி செயல்முறையில் மாறாவடுக்களை ஏற்படுத்தியது. பெருந்தோட்ட உற்பத்தி முறைமையின் காரணமாக, பொருளாதார ரீதியில் இவர்கள் ஒரு அடைபட்ட நிலையிலிருந்தனர். நாடற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை அரசியல் ரீதியில், இவர்களை தனிமைப்படுத்தியது. எனினும் நாடற்ற நிலை படிப்படியாக இலங்கை பிரஜாவுரிமை பெறுவோர் மற்றும் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பிற்கேற்ப நீங்கத் தொடங்கியதோடு, அரசியல் பிரதிநிதித்துவமும் அதிகரிக்கத் தொடங்கியது. 1977இல் ஒன்றாக இருந்த பாராளுமன்ற பிரதிநிதித்துவம் 2000 ஆண்டளவில் பதினொன்றாக உயர்ந்தது. இவ்வதிகரிப்பின் மத்தியில். சிலர் அமைச்சுப் பதவிகளையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. 1997இல் இந்த மக்களுக்கென தனியான அமைச்சொன்று உருவாக்கப்பட்டமை இந்த மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைக்கின்ற செயற்பாட்டில் ஒரு முக்கிய மைல் கல்லாகும்.

பாராளுமன்ற பிரதிநிதித்துவம் இல்லாத அல்லது குறைவான நிலையில் நாட்டினது அபிவிருத்தி செயல்முறையில் இவர்கள் பங்கு பெறமுடியவில்லை. 1973ஆம் ஆண்டினை அப்போதைய அரசாங்கம், உற்பத்தி ஆண்டாக பிரகடனப்படுதுதியது. மாவட்ட மட்டத்தில் அரசியல் அதிகார சபை முறைமை (District Political System) மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டம் (Decentrelized Budget) அறிமுகப்படுத்தப்பட்டது. கூடவே, பிரதேச அபிவிருத்தி சபைகள் (Divisional Development Councils) உருவாக்கப்பட்டன. இவற்றை முகாமைப்படுத்தி நிர்வகிக்க மாவட்ட மட்ட கச்சேரிகளில் மாவட்ட திட்ட அலகுகள் உருவாக்கப்பட்டன. இதனை நடைமுறைப்படுத்த கொழும்பின் திட்ட அமைச்சிலிருந்து திட்டமிடல் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்து அனுப்பப்பட்டனர். நான் அப்போது திட்ட அமைச்சில் திட்டமிடல் உத்தியோகத்தராக பணியாற்றி கொண்டிருந்தேன். என்னுடைய விருப்பின் பேரில் நான் நுவரெலிய கச்சேரிக்கு அனுப்பப்பட்டேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அரசியல் அதிகார சபையின் முதல் கூட்டத்தில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டம், கிராமங்களுக்கே நிதி ஒதுக்கப்படும். தோட்டங்களுக்கு இந்நிதி ஒதுக்கப்படமாட்டாது என தீர்மானிக்கப்பட்டது. தோட்டங்கள் பொருளாதார ரீதியாக அபிவிருத்தியடைந்த பிரதேசங்கள் என்பதே இதற்கு காரணம். அரசியல் அதிகார சபையில் மாவட்ட பராளுமன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிநிதிகளே அங்கத்தினர்களாக இருந்தனர். தோட்ட சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்த இக்காலப்பகுதியில் ஒருவரும் இருக்கவில்லை அத்தருணம் இந்திய தமிழர்கள் சார்பில் பாராளுமன்றத்தில், நியமன பிரதிநிதியாக அப்துல் அஸீஸ் இருந்தார். அப்போது நான் அவரை அணுகி இவ்விடயத்தை எடுத்துரைத்தேன். அவரும் அப்போதைய பெருந்தோட்ட அமைச்சின் செயலாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். அவர் திட்டமிடல் அமைச்சின் செயலாளரோடு தொடர்புகொள்ள இவ்விடயம் கவனத்திற்கு எடுக்கப்படும் என்ற பதில் வர அப்போதைக்கு அவ்விடயம், முடிவிற்கு வந்தது.

அரசாங்க அபிவிருத்தி திட்டங்களில் பங்கு பெறாமை காரணமாக தோட்டத்துறை சார்ந்த சமூக அபிவிருத்தி குறிகாட்டிகள் இச்சமூகத்தின் பின்னடைந்த நிலையை தெளிவாக காட்டியது. 1997இல் தனியாக தோட்ட வீடமைப்பு உட்கட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி என்ற அமைச்சு உருவாக்கப்பட்டதன் பின்னரேயே அரசாங்க நிதி வீடமைப்பு, மின்சாரம் மற்றும் பாதை போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், பள்ளிக்கூட தரமுயர்த்தல் போன்றவற்றிற்கு ஒதுக்கப்பட்டன. கூடவே, ஆசிரியர் நியமனங்களும் மேற்கொள்ள அழுத்தம் கொடுக்கப்பட்டன. இங்கு ஒரு உதாரணம் பொருத்தமாக அமையும். 1998இல் இலங்கை சுவீடன் நாட்டு நிதி உதவியுடன் கிராம மின்சாரமயப்படுத்தல் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி வந்தது. அப்போது தேசிய திட்ட மிடல் திணைக்களத்தில் பொருளாதார உட்கட்டமைப்பு பிரிவின் பணிப்பாளராக நான் நியமிக்கப்பட்டேன். அக்காலப்பகுதியில், நாட்டில் 60% சதவீதமானவர்களுக்கு மின்சாரம் கிடைக்க தோட்டத் துறையினரில் 10%மானனோருக்கு மாத்திரமே மின்சாரம் கிடைத்தது. சில தொழில்நுட்ப காரணங்களால் கிராமிய மின்சாரமய திட்டத்தில் தோட்டத்துறை உள்வாங்கப்படவில்லை. அப்போது தோட்ட உட்கட்டமைப்பிற்கான அமைச்சராக எஸ்.தொண்டமான் இருந்த படியால் அவர் மூலமாக தோட்டத்துறைக்கென பிரத்தியேக மின்சாரமயப்படுத்தல் திட்டம் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் பட்டது. தற்போது, நிலைமை சரிசமமாக காணப்படுகிறது. இன்னும் பல துறைகளில் இடைவெளிகள் காணப்படுகின்றன. ஒன்று தோட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுகாதார துறையாகும். 2002ஆம் ஆண்டிலேயே தோட்ட சுகாதார துறையை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என அமைச்சரவை தீர்மானம் எடுத்தாலும் இன்றுவரை அந்த செயற்பாடு முற்றிலும் முழுமையாக நிறைவேறவில்லை. இன்னுமொரு உதாரணம், தபால் சேவையாகும். 2005இல் தோட்டத்துறைக்கென 500 தோட்ட தபால் பியோன்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தாலும் இதுவரைக்கும் நிதிப்பற்றாக்குறை காரணமாக 300 பேரே நியமிக்கப் பட்டுள்ளனர். தோட்ட தபால் சேவை இன்னும் திருப்திகரமான ஒன்றாக அமையவில்லை. பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள் என்பவை தோட்ட மக்களுக்கு சேவையாற்றுதலில் பாரிய இடைவெளி காணப்பட்டது. 2015இற்கு பின்னர், நுவரெலியா மாவட்டத்தில் 5ஆக இருந்த பிரதேச சபைகள் 12ஆக உயர்த்தப்பட்டன. ஆனால் அதே எண்ணிக்கை பிரதேச செயலகங்களை பொறுத்தவரை பின்பற்றப்படாமல் 10ஆகவே அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் இப்பிரச்சினை காணப்படுகின்றன.

பொதுச்சேவையின் உயர் மட்டத்தில் இந்த மக்களின் பிரதி நிதித்துவம் மிகவும் குறைவானதாகும். அமைச்சின் செயலாளர்கள் திணைக்களத் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டுச் சேவையில் ஒருவருமில்லை. இலங்கை நிர்வாக சேவையில் நால்வரும், திட்ட மிடல் சேவையில் மூவரும், உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரும், மாஜிஸ்டிரேட் நீதிபதிகள் சிலருமே காணப்படுகின்றனர். அரச பல்கலைக்கழகத்தில், 2 பேராசிரியர்களும், சில விரிவுரையாளர்களும் காணப்படும், அதேவேளை இந்நிலை கல்வித் துறையில் கல்விப் பணிப்பாளர்கள் சிலரும் அதிபர்களாக பலரும் காணப்படுகின்றனர். பல்கலைக்கழகத்திற்கான நுழைவு எண்ணிக்கை தற்போது 700இற்கு மேற்பட்டு காணப்படினும் இம்மக்களைச் சார்ந்த கல்வியாளர்கள் சிவில் சமூகம் அரசியல்வாதிகள் ஆகியோரின் கோரிக்கையான நுவரெலியா மாவட்டத்திற்கான பல்கலைக்கழகம் இன்னும் நிறைவேறாத ஒன்றாகவே காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சினது பெயர், மலைநாட்டு புதிய கிராமங்களின் அபிவிருத்தி அமைச்சென பெயர் மாற்றம் பெற்றமை, ஒரு குறிப்பிடத்தக்க வளர்ச்சியாகும். தோட்டங்கள் கிராமங்களாக மாற வேண்டும் என்ற ஆவலை நிறைவேற்றும் ஒன்றாக இது அமைந்துள்ளது. தொடர்ந்து பெருந்தோட்ட பிராந்தியத்தின் புதிய கிராமங்களின் அபிவிருத்தி அதிகார சபையானது, புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்பு திட்டங்களை மையப்படுத்தி புதிய கிராமங்களை உருவாக்கும் ஆணையைக் கொண்டுள்ளது. இச்செயல் முறை ஆரம்பிக்கப்பட்டிருந்தாலும் 2019இல் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் பெயரில் மாற்றத்தை ஏற்படுத்தியமை இதில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

## முடிவுரை

முடிவாக இந்த வருடம் 2023 ஆனது இந்திய தொழிலாளர்களின் வருகையின் 200 வருடகால பூர்த்தியை நினைவுபடுத்துவதாக அமைந் துள்ளது. தொழிலாளர்களாக வந்தாலும் நாளடைவில் அவர்கள் ஒரு சமூகமாக உருவெடுத்து ஒரு தேசிய இனமாக தனித்துவ அடையாளமாக பரிணமித்துள்ளனர். நான்காவது இனக்குழுவான இவர்கள் தங்களது அடையாளத்தை இந்தியத் தமிழர்கள் என்பதிலிருந்து மலையகத் தமிழர்கள் என உத்தியோகபூர்வமாக மாற்றம் பெற முனைப்பு கொண்டுள்ளனர். இவர்களது எதிர்பார்கைகள், அபிலாஷைகள் அனைத்தும் ஒரு தனித்துவ இனமாக, சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டு உரிமைகளை அனுபவித்தவர்களாகவும் ஏனைய இனக்குழுவினரோடு சமத்துவ நிலையில் தேசிய நீரோட் டத்தில் ஒன்றிணைவதாகும். இவர்கள் பல சந்தர்ப்பங்களை இழந்த வர்களாகவும் அல்லது அவை மறுக்கப்பட்டவர்களாகவும் இருப்பதால், அதனால் ஏற்பட்ட அபிவிருத்தி இடைவெளிகளை நிரப்புவதற்கு சில உடன்பாடான நடவடிக்கைகள் அவசியமானவை. ''இறந்து பிறந்த ஜனநாயகம்'' மீண்டும் உயிர்ப்பெற இவை அத்தியாவசியமானவையாகும்.

- ஜனவரி 2023இல் கொழும்பில் இந்நூலின் வெளியீட்டின் போது ஆற்றிய உரையை மையமாக கொண்டது இக்கட்டுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மலையக சமூகம்:
## ஒரு சமகால நோக்கு

எம். வாமதேவன்

இந்தியத் தமிழர்கள் பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளினால் தொழிலாளர்களாக இலங்கைக்கு அழைத்துவரப்பட்டு இருநூறு வருடங்கள் (1823-2023) நிறைவடைந்த நிலையில் 'மலையகம் 200' தொனிப்பொருளில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இன்றைய காலப்பகுதியில் வாமதேவன் இந்த நூலை வெளியிடுவது அதற்குப் பிரத்தியேகமான ஒரு வரலாற்றுப் பின்புல முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது.''...

''திட்டமிடல் துறையில் வாமதேவனுக்கு இருக்கும் வளமான அனுபவத்தின் தாக்கத்தை மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கு அவர் முன்வைத்துவரும் முன்மொழிவுகளில் காணக்கூடியதாக இருக்கிறது.''....

''இரு நூற்றாண்டு காலப்பகுதியில் ஏறக்குறைய 180 ஆண்டுகள் அல்லது 90 சதவீதமான காலப்பகுதியில் தமது அரசியல் இருப்பு நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே மலையகத் தமிழர் சமூகம் போராடிவந்திருக்கிறது என்றும் அதன் காரணமாக நாட்டின் அபிவிருத்திச் செயன்முறைகளின் பலன்களை அவர்களால் அனுபவிக்க முடியாமல் போய்விட்டது என்றும் கூறும் வாமதேவன் அதிகாரப் பரவலாக்கலில் இந்தச் சமூகத்தின் அரசியல் அடையாளம் அங்கீகரிக்கப்படுவதும் பொருளாதார ரீதியாகத் தோட்ட உற்பத்தி முறையில் இருந்து விடுபடுவதும் அவற்றின் ஊடாக அனைத்து உரிமைகளையும் முழுமையாக அனுபவிப்பதுமே ஏனைய சமூகங்களோடு சமத்துவ நிலையை எட்டுவதற்கான வழியாகும் என்ற தனது நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைக்கிறார்.''

- வீரகத்தி தனபாலசிங்கம்
(முகவுரையிலிருந்து...)

ISBN 978-624-93210-0-

Rs. 750/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org